புதிய பாடத்திட்டம் - 2017



# வரலாறு

## தரம் 8

வினாவிடைகள், பயிற்சிகள் விளக்கப்படங்கள்





தொகுப்பு
கனகசபை இளங்கோவன்
(B.A, Dip in Teach, PGDE, SLPS-111)



# வரலாறு

புதிய பாடத்திட்டம் - 2017

# தரம் - 08

## பாடக்குறிப்புக்கள்

## வினாவிடைகள்

## கணிப்பீடுகள்

## வரலாற்று விளக்கப்படங்கள்


## தொகுப்பு

க. இளங்கோவன்

(B.A,Dip in Teach,PGDE,SLPS-111)

# பொருளடக்கம்


1. இலங்கையின் பாரம்பரிய தொழில்நுட்பமும்
கலைகளும் ........................................ 02 - 31

2. கண்டி இராட்சியம் ........................................ 32 - 49

3. ஐரோப்பிய மறுமலர்ச்சி ........................................ 50 - 61

4. நாடுகாண் பயணங்களும், ஐரோப்பியர்
கீழைத்தேசங்களுக்கு வருகை தருதலும ................ 62 - 71

5. இலங்கையின் கரையோரப் பிரதேசம்
போர்த்துக்கேயரின் ஆதிக்கத்திற்குட்படல் ........... 72 - 90

6. மாதிரி வினாத்தாள் 01 ........................................ 91 - 98

7. மாதிரி வினாத்தாள் 02 ........................................ 98 - 103

8. வரலாற்றுப் படங்களுடன் விளக்கங்கள் .............. 104 - 120

9. வினாக்கள் ........................................ 121 - 127

# நூல் தொடர்பான விபரங்கள்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வரலாறு - தரம் - 8 |
| பக்கங்கள் | : | 126 + iii |
| பதிப்பாசிரியர் | : | க.இளங்கோவன் |
| பதிப்பாளர் | : | பூபாலசிங்கம் பதிப்பகம் |
| வெளியீடு | : | பூபாலசிங்கம் புத்தகசாலை |
| முதற்பதிப்பு | : | 2017 பங்குனி |
| விலை | : | ரூபா.225.00 |
| சர்வதேச நியமநூல் இல. | : | 978-955-9396-82-6 |

# அலகு -I

# இலங்கையின் பாரம்பரிய தொழில்நுட்பமும் கலைகளும்

1. **பாரம்பரியத் தொழில்நுட்பம் என்பதனால் கருதப்படுவது யாது?**
புராதன காலத்திலிருந்து இன்றுவரை தலை முறை தலைமுறையாக வளர்ச்சி அடைந்து வந்த தொழில்நுட்பத்தின் சில அம்சங்கள் எங்கள் நாட்டுக்கே உரித்தானவையாகும். அவ்வாறான தொழில்நுட்பம் பாரம்பரியத் தொழில் நுட்பம் ஆகும்
உதாரணம - குளங்கள் , கால்வாய்களில்
பின்பற்றப்பட்டு வந்த தொழில்நுடபம்

2. **எமது நாட்டில் முற்காலக் குடியிருப்புக்கள் காணப்பட்ட பிரதேசங்களில் காணப்பட்ட சான்றுகள் எவை?**
✪ குளங்கள் ✪ கால்வாய்கள் ✪ தடாகங்கள்

3. **நீரியல் தொழில்நுட்பம் என்பது யாது?**
குளம், கால்வாய், தடாகம் என்பன நீருடன் தொடர்புபட்டவையாகும் அதாவது குளங்கள் கால்வாய்களில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் நீரியல் தொழில்நுட்பம் என அழைக்கப்படும்.

4. **இலங்கையில் ஆரம்பக் குடியிருப்புக்கள் அமைப்பட்ட காலப்பகுதி எது?**
✪ கிறிஸ்த்துக்கு முற்பட்டகாலத்தில்

5. **இந்தியாவிலிருந்து வந்த குழுக்கள் இலங்கையில் குடியேற்றங்களை நிறுவிய காலப்பகுதி எது?**
✪ கி - மு 6 ஆம் நூற்றாண்டளவில்

6. **இந்தியாவிலிருந்து வந்த குழுக்கள் இலங்கையில் குடியேற்றங்களை அமைக்கையில் கவனத்தில் கொண்ட விடயங்களைத் தருக.**
✪ விவசாயத்திற்கு பொருத்தமான' வளமான சமதரை நிலங்கள் காணப்பட்ட பிரதேசங்கள்.
✪ ஆற்றோரங்கள்

7. **உலர் வலயம் என்பதால் கருதப்படுவது யாது?**
வருடத்தில் ஒரு பருவத்திற்கு மட்டும் மழைவீழ்ச்சியைப் பெற்றுக்கொள்ளும் பிரதேசம் உலர்வலயமாகும்

8. உலர்வலயக் குடியேற்றங்களின் பரம்பல் அதிகரித்துச் சென்ற காலப்பகுதி யாது?

✪ கி - மு 3 ஆம் நூற்றாண்டு

9. குளங்கள், கால்வாய்கள் அமைக்க வேண்டிய தேவையேற்பட்டமைக்கான காரணங்களைத் தருக.

✪ உலர்வலயப் பிரதேசத்தில் சனத்தொகை அதிகரித்தமையினால் உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டமை.

✪ பருவ மழைகள் பொய்த்துப் போனமை.

✪ மழை காலங்களில் நீரைசேமித்து வைப்பதற்கு குளங்களை அமைத்தமை.

10. சிறிய குளங்களை அமைத்துக்கொண்ட விதம் யாது?

சிற்றருவிகளை அல்லது ஓடையை மறித்து சிறிய அணையொன்றினைக் கட்டி நீரைச் சேமித்து சிறிய குளங்களை அமைத்தனர்.

11. கிராமக் குளங்களை அமைப்பதில் முன்னின்று செயற்பட்டவர்கள் யாவர்?

✪ கிராமத் தலைவர்கள் ✪ ஊர்மக்கள்

✪ இல்லத்தலைவர்கள்

12. அரசர்களின் தலையீட்டுடன் குளங்கள் அமைக்கத் தொடங்கிய காலப்பகுதி எது?

✪ மூன்றாம் நூற்றாண்டில்

13. பண்டுகாபய மன்னனினால் அமைக்கப்பட்ட குளங்கள் எவை?

✪ ஜயவாவி ✪ பஸவக்குளம் ✪ காமினி வாவி

14. பஸவக்குளத்திற்கு வழங்கப்பட்ட புராதன பெயர் யாது?

✪ அபயவாவி

15. தேவநம்பியதிஸ்ஸ மன்னனால் அமைக்கப்பட்ட குளம் எது?

✪ திஸாவாவி

16. புராதனகாலத்தில் அமைக்கப்பட்ட சிறிய குளங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

✪ ஜயவாவி ✪ பஸவக்குளம்

✪ காமினி வாவி ✪ திஸாவாவி

## பெருங்குளங்கள் அமைக்கப்படல்

17. இலங்கையில் பாரியகுளங்களை அமைக்கும் பணியில் ஈடுபட்ட அரசன் யார்?
    - வசப மன்னன்

18. பாரியகுளங்கள் அமைக்கவேண்டிய தேவை ஏற்பட்டமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக?
    - உலர் வலயப் பிரதேசங்கள் எங்கும் குடியிருப்புக்கள் பரந்து காணப்பட்டமை.
    - சனத்தொகை அதிகரிப்புக்கு ஏற்ப உணவுற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டமை.
    - பருவமழைகள் கிடைக்கின்ற காலப்பகுதியில் தேவையான அளவு நீரினைச் சேமித்துக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டமை.

19. வசப மன்னனால் அமைக்கப்பட்ட கால்வாய்கள் எத்தனை?
    - பன்னிரண்டு

20. அம்பன் கங்கையிலிருந்து 30 மைல் தூரத்திற்கு நீரைக்கொண்டு செல்வதற்காக வசப மன்னனால் அமைக்கப்பட்ட கால்வாயின் பெயர் என்ன?
    - எலஹரகால்வாய் (ஆழிசாராக்கால்வாய்)

21. வசபமன்னனால் அமைக்கப்பட்ட குளங்கள் எவை?
    - பதினோரு குளங்கள் அமைத்ததாக வம்சக்கதைகளில் கூறப்பட்டுள்ளது
    - மயெந்திக்குளம் (மகாவிலச்சிக்குளம்)
    - மானாகெட்டி (மானான் கட்டிய குளம்,நொச்சிப்பொத்தான)

22. தரைக்கீழ் அமைக்கப்பட்ட குழாய்கள் வழியாக நீரைக்கொண்டு செல்லும் சுரங்கக்கால்வாய் முறையினை அறிமுகம் செய்தவர்கள் யார்?
    - வசபமன்னனுடைய பொறியியலாளர்கள்

23. விவசாயமேம்பாட்டிற்காக மகாசேனமன்னன் ஆயிரம் குளங்களை அமைத்ததாகக் கூறும் நூல் எது?
    - மகாவம்சம்

24. மகாசேன மன்னனின் ஆட்சிக்காலத்தைக் குறிப்பிடுக.
    - கி - பி 274 - 301

25. மின்னேரிய வாவியின் சிறப்புக்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.
- ✪ பெரிய நீர்பாசனத்திட்டத்திற்கமைய அமைக்கப்பட்ட பெரிய குளம் இதுவாகும்
- ✪ இக்குளத்தின் அணைக்கட்டு 1.25 மைல் நீளமுடையதாகும்.
- ✪ இக் குளம் 4670 ஏக்கர் பரப்பளவுடையதாகும்
- ✪ இக் குளம் ஆரம்பத்தில் மணிஹிர வாவி என அழைக்கப்பட்டது.

26. மகாசேன மன்னனால் அமைக்கப்பட்ட கால்வாய் எது?
- ✪ பப்பதன்ன கால்வாய்

27. மகாசேன மன்னனால் அமைக்கப்பட்ட குளங்கள் எவை?
- ✪ மின்னேரியாக்குளம் (மணிஹிரவாவி)
- ✪ வல்லூரவவாவி (ஹீருளுவாவி)
- ✪ கணதராவாவி (காணுவாவி, மகாகணதர வாவி)

28. மகாசேன மன்னன் மின்னேரியாத் தெய்வம் என அழைக்கப்பட்டமைக்கான காரணம் யாது?

மகாசேனன் நாட்டு மக்களின் நன்மை கருதி பல பணிகளை மேற்கொண்டான் அவ்வகையில் பல பாரிய குளங்களை அமைத்து நாட்டு மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கியமையாலும் தனது நாட்டிற்காகவும் மக்களுக்காகவும் உழைத்தமையால் இம் மன்னனை மக்கள் கடவுள் போல் மக்கள் போற்றினர் . இதனால் இப்பெயர் ஏற்பட்டது.

29. தாதுசேன மன்னன் நமது நாட்டிற்கு ஆற்றிய மகத்தான நீர்ப்பாசனப் பணி யாது?
- ✪ 18 பாரிய குளங்களும் 18 சிறிய குளங்களும் இம் மன்னனால் அமைக்கப்பட்டமை.

30. தாதுசேனமன்னனால் அமைக்கப்பட்ட குளங்களில் சிறப்பானது எது?
- ✪ கலாவாவி அநுராதபுரம்

31. தாதுசேன மன்னனால் அமைக்கப்பட்ட கால்வாய் எது?
- ✪ யோத கால்வாய் (புதுமையான கால்வாய், ஜயகங்கைக்கால்வாய்)

32. யோதகால்வாயின் சிறப்புக்களை எழுதுக?
- ✪ கலாவாவியிலிருந்து திஸாவாவி வரை நீரைக்கொண்டு செல்லும் கால்வாய்
- ✪ 54 மைல் நீளமானது
- ✪ கால்வாயின் இடையிடையே கற்றூண்கள் பொருத்தப்பட்டுள்ளமை.

33. தாதுசேன மன்னனால் அமைக்கப்பட்ட குளங்களைக் குறிப்பிடுக.
- ✪ கலாவாவி
- ✪ பாதுலக வாவி
- ✪ மகாதத்தவாவி (மாததுகம, மடாட்டுகம)

34. இராசரட்டை காலப்பகுதியில் பெருங்குளம் அமைத்த மன்னர்களில் முக்கியமானவர் யார்?

- மகா பராக்கிரமபாகு (முதலாம் பராக்கிரமபாகு)

35. மகாபராக்கிரமபாகுவினால் அமைக்கப்பட்ட குளம் எது?

- பராக்கிரம சமுத்திரம்

36. பராக்கிரம சமுத்திரம் இணைத்துக்கட்டப்பட்ட வாவிகள் எவை?

- தோப்பாவாவி, தும்புலு வாவி , எலமுது வாவி , கொக்கா வாவி

**37. மகா பராக்கிரமபாகு மன்னன் 163 குளங்களை அமைத்ததாகக் குறிப்பிடும் நூல் எது?**

- மகாவம்சம்

**38. இந்நாட்டில் மழையினால் பெறும் ஒரு துளிநீரையேனும் மனிதருக்குப் பயன்படாமல் கடலில் கலக்க விடமாட்டேன் எனும் மகுட வாசகத்திற்கு இணங்க செயற்பட்ட மன்னன் யார்?**

- மகா பராக்கிரமபாகு

**39. இராசரட்டை நாகரிகம் வீழ்ச்சி அடையப் பிரதான காரணம் யாது?**

- கி - பி 1215 இல் கலிங்கமாகன் 24000 படைவீரர்களுடன் பொலநறுவை நோக்கி படையெடுத்தமை.

40. பாரிய குளங்கள் அமைக்கப்பட்டமையால் இலங்கையர் அடைந்த நன்மைகள்?

- பெருங்குளங்களில் அதிகளவு நீரை சேமித்து வைத்துக்கொள்ள முடிந்தமையால் நீண்ட வரட்சியின்போதும் தண்ணீர் பற்றாக்குறையை மட்டுப்படுத்திக்கொள்ள முடிந்தமை.
- பெரிய குளங்களிலிருந்து , கால்வாய்கள் மூலம் சிறிய குளங்களுக்கு நீரைப் பெற்றுக்கொள்ள கூடியதாயிருந்தமை
- பெருங்குளங்களை அமைத்ததோடு நீரைக் கொண்டு செல்வதற்காக நீண்ட கால்வாயை அமைக்கும் தொழில்நுட்பத் திறமையும் வளர்ச்சியடைந்தமை.

41. பாரிய குளங்களைஅமைப்பதில் முன்னோடியாகச் செயற்பட்ட அரசர்களைக் குறிப்பிடுக.

- மகாசேனன்
- வசபன்
- தாதுசேனன்
- மகாபராக்கிரமபாகு

42. சிறிய குளங்களை அமைப்பதில் முன்னின்ற அரசர்கள் இருவரைக் குறிப்பிடுக.

- பண்டுகாபயன்
- தேவநம்பியதீஸன்

## குளங்களை கட்டும்போது எதிர்நோக்கிய சவால்களும் பிரயோகிக்கப்பட்ட தொழில்நுட்பங்கள்

43. பெருங்குளம் எவ்வாறு அமைக்கப்படும் ?

குறைந்த பட்சம் 20' - 30' உயர அணைக்கட்டுடன் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவிலான பெரும் நீர்க்கொள்ளளவையும் தாக்குப்பிடிக்கக் கூடியதாக அமைக்கப்படும்

44. பலம் வாய்ந்ததாக குளத்தின் அணைக்கட்டு அமைக்கப்பட காரணங்களைத் தருக?

- குளத்தின் நீரின் அளவை அதிகரித்துக் கொள்ளல் மற்றும் குளத்தின் நீரின் அளவு அதிகரிக்கும் போது நீரின் அழுக்கம் அதிகரிக்கும். எனவே இதனைக் கருத்திற்கொண்டு பலம் வாய்ந்த அணைக்கட்டு அமைக்கப்படல் வேண்டும்.
- குளத்தின் அருகில் மக்கள் வாழ்வதனால் அவர்களது பாதுகாப்பு கருதி பாதுகாப்பான அணை அமைக்கப்படல்.
- மக்களது நிலபுலன்களைக் கருத்திற்கொண்டு பாதுகாப்பான உயர் அணை அமைக்கப்படல்

45. மின்னேரியா வாவியின் சிறப்பியல்புகள் எவை?

- மகாசேன மன்னனால் அமைக்கப்பட்டது.
- அணைக்கட்டின் நீளம் 1.25 மைல் நீளமுடையது.
- அணைக்கட்டின் உயரம் 44 அடியாகும்.
- நீரால் நிரப்பப்பட்டுள்ள நிலப்பரப்பு 4670 ஏக்கர் ஆகும்.

46. கலாவாவியின் சிறப்பியல்புகள் எவை?

- தாதுசேன மன்னனால் அமைக்கப்பட்டது.
- அணைக்கட்டின் நீளம் 1.75 மைல் நீளமுடையது.
- அணைக்கட்டின் உயரம் 40 அடியாகும்.
- நீரால் நிரப்பப்பட்டுள்ள நிலப்பரப்பு 6380 ஏக்கர் ஆகும்.

47. பராக்கிரமசமுத்திரத்தின் சிறப்பியல்புகளைத் தருக.

- மகாபராக்கிரமபாகு மன்னனால் அமைக்கப்பட்டது.
- அணைக்கட்டின் நீளம் 8 .5 மைல் நீளமுடையது.
- அணைக்கட்டின் உயரம் 40 அடியாகும்.
- நீரால் நிரப்பப்பட்டுள்ள நிலப்பரப்பு 5,300 ஏக்கர் ஆகும்.

48. பெருங்குளங்களை அமைக்கும் போது புராதனகால மக்கள் எதிர்கொள்ள நேரிட்ட சவால்கள் எவையென எழுதுக.

- ✪ நீர்த்தேக்கம் ஒன்றை அமைக்கும்போது அருவியிலோ நதியிலோ மிகப்பொருத்தமான இடம் ஒன்றைத் தேர்ந்தெடுக்கவேண்டி இருந்தமை.
- ✪ நிலத்தின் உயரம்
- ✪ இருபக்க எச்சக்குன்றுகளின் தன்மை.
- ✪ ஏனைய குளங்கள் கால்வாய்களுடன் இணைப்பை ஏற்படுத்தும் விதம்
- ✪ குளம் அமைப்பதற்கு தேவையான தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்ளல்.
- ✪ நீர்பாசனத் தொழில்நுட்பவியலாளர்கள் அணைக்கட்டை நிர்மாணிக்கும் போது குளத்தின் நீர்கொள்ளளவின் அழுத்தத்திற்கு முகம் கொடுக்கும் வண்ணம் அதை அமைக்கவேண்டியிருந்தமை.

49. குளத்தின் அணைக்கட்டு சரிந்து விழாமல் இருப்பதற்காக பயன்படுத்திய நுட்பமுறைகளைத் தருக.

- ✪ அடியிலுள்ள கற்பாறைகளிலிருந்து மண்ணை படைகளாக இட்டு அமைத்தமை.
- ✪ மண்ணை படைகளாக இடும்போது அதனை நன்றாக அழுத்தியும் நீரை உறிஞ்சும் அளவை நன்கு குறைத்தும் நீரின் அழுத்தத்தை தாக்குப்பிடிக்கும் வண்ணம் அமைத்தமை.
- ✪ அணைக்கட்டின் நீளம், அகலம் , உயரம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு அணைக்கட்டு அமைக்கப்பட்டமை.

50. குளங்களைக் கட்டிப் பரிபாலித்துச் செல்கையில் ஏற்படும் சவால்களுக்கு முகம் கொடுக்கையில் கையாண்ட நுட்பமுறைகளைத் தருக.

குளத்தின் கூறுகளை அமைத்தமை.

- ✪ மதகு
- ✪ கலிங்கல் தொட்டி
- ✪ அலைதாங்கி
- ✪ உள்வான் கதவு
- ✪ வெளி வான்கதவு அமைத்து பரிபாலித்தமை.

51. குளம் ஒன்றின் முக்கியமான பகுதிகள் எவை?

- ✪ மதகு / கலிங்கல்
- ✪ கலிங்கல் தொட்டி
- ✪ அலைதாங்கி
- ✪ உள்வான்கதவும் வெளிவான்கதவும்

52. மதகு/ கலிங்கல் நிர்மாணிக்கப்படுவதற்கான காரணம்?

அதிக அழுத்தத்துடன் குளத்தில் இருக்கும் நீரை அணைக்கட்டின் ஊடாக கால்வாய்க்கு விடுவிப்பதற்கு மதகு நிர்மாணிக்கப்படுகின்றது .

53. கலிங்கல்களின் இரு வகைகளையும் தருக?

- ஈரக்கலிங்கல்
- உயர் கலிங்கல்

54. குளத்தின் அடிப்பகுதியில் அமைக்கப்படும் கலிங்கல் எது?

- ஈரக்கலிங்கல்

55. ஈரக்கலிங்கல் அமைக்கப்படுவதன் நோக்கங்கள்?

- குளத்து நீர் முழுவதையும் பள்ளத்தாக்கிற்கு விடுவித்துக்கொள்ள முடிதல்
- குளத்தில் படிந்துள்ள சேற்றை அகற்றுவதற்கு பயன்படுத்திக்கொள்ளல்.

56. ஈரக்கலிங்கலை விட சற்று உயரத்தில் அமைக்கப்டுவது ?

- உயர் கலிங்கல்

57. சிறுகுளங்களில் நீரை வெளியேற்றுவதற்கு பயன்படுத்தப்படும் குளத்தின் கூறு எது?

- கலிங்கல்

58. குளத்தின் கூறுகளில் கலிங்கல் தொட்டி பெறும் முக்கியத்துவங்கள் ?

- குளத்தின் நீரைவெளியேற்றுவதற்காக கலிங்கல் தொட்டி அமைக்கப்படல்.
- கலிங்கல் தொட்டி என்பது மதகின் ஒர் அம்சமாகும்
- குளத்தின் உட்புறமாக, குளக்கட்டிற்கு சமீபமாகச் சதுர வடிவில் இது நிர்மாணிக்கப்படும்.
- கலிங்கல் தொட்டிக்கு குளத்து நீரைப்பாய்ச்சுவது குழாய் வழியொன்றின் மூலமேயாகும்.
- கலிங்கல் தொட்டியினுள் உயர்த்தி தாழ்த்தக்கூடிய மரச்சட்டம் ஒன்று காணப்படும்.
- கலிங்கல் தொட்டி இலங்கைத் தொழில்நுட்பவியலாளருக்குரிய பொருத்தமான படைப்பாகும்.

59. அலைதாங்கி அமைக்கப்பட்டதன் நோக்கங்கள் ?

குளக்கட்டு நீரினால் அரிக்கப்படுவதை தடுத்துக்கொள்வதற்காக அணைக்கட்டின் உட்புறத்தில் கற்களைப் பதித்து அலைதாங்கி அமைக்கப்பட்டது.

60. உள்வான்கதவு அமைக்கப்பட்டதன் நோக்கம் யாது?

- ✪ இன்னொரு நீர் மூலாதாரத்திலிருந்து குளமொன்றுக்கு நீரைப் பெற்றுக்கொள்வதற்காக உள்வான்கதவு உருவாக்கப்பட்டுள்ளது.
- ✪ வெளியிலிருந்து குளத்தை நோக்கிப் பாய்ந்து வரும் நீரிலுள்ள சேறு குளத்தில் படிந்து விடாது தடுப்பதற்காக அமைக்கப்படுகின்றது.

61. குளத்தின் மேலதிக நீரை வெளியேற்றுவதற்கு அமைக்கப்பட்ட குளத்தின் கூறு எது?

- ✪ வெளிவான் கதவு

## கால்வாய்கள் மற்றும் சிற்றணைக்கட்டு தொழில்நுட்பம்

62. அணைக்கட்டு என்பது ?

வயல் நிலங்களுக்கு நீரைப்பெற்றுக்கொள்வதற்காக அருவிகள், ஆறுகள் என்பவற்றை மறித்துக் கட்டப்படுவது அணைக்கட்டு எனப்படும் இவ்வாறான அணைக்கட்டுக்களை சிற்றணைக்கட்டு எனவும் அழைபபர்.

63. இலங்கையில் அணைக்கட்டு அமைக்கும் தொழில்நுட்பத்தின் முக்கியக்கியத்துவங்களைத் தருக?

- ✪ தற்காலிக, நிரந்தர எனும் இருவகையான அணைக்கட்டுக்கள் அமைக்கப்பட்டமை.
- ✪ அருவிகள் , ஆறுகள் என்பவற்றின் நீரோட்டவேகம் குறைந்த இடத்தில் அதனை மறித்து மரத்தூண்களை நாட்டி, கல், மண் என்பவற்றை இட்டு தற்காலிக அணைக்கட்டை நிர்மாணித்தனர்.
- ✪ நீண்டகாலம் நிலைத்திருக்கக்கூடிய அணைக்கட்டுக்களை அமைத்தமை.
- ✪ நீரின் அமுக்கத்திற்கும் அதன் அரிப்பிற்கும் தாக்குப்பிடிக்கக்கூடியதாக கற்றுண்டங்களைக் கொண்டு அணைக்கட்டுக்கள் அமைக்கப்பட்டமை.
- ✪ இயற்கையான கற்பாறை ஒன்றின் மீது அத்திவாரத்தை இட்டு கருங்கற்களால் நிரந்தர அணைக்கட்டுக்களை அமைத்தமை

  **உதாரணம்** - மல்வத்து ஓயாவினை மறித்துக் கட்டப்பட்ட இராட்ச குளம் (யோதாவாவி, கட்டுக்கரைக்குளம்)

64. கால்வாய்கள் அமைக்கப்பட்டமைக்கான காரணங்களைத் தருக.

- ✪ நீரை தூரஇடங்களுக்கு கொண்டு செல்வதற்கு கால்வாய்கள் நிர்மாணிக்கப்பட்டது.
- ✪ பாரியகுளங்கள் அமைக்கும் தொழில்நுட்பம் வளர்ச்சி கண்டமை .

65. வசப மன்னன் பன்னிரண்டு கால்வாய்களை அமைத்தான் எனக் குறிப்பிடும் நூல் எது?

- மகாவம்சம்

66. வசப மன்னனால் அமைக்கப்பபட்ட எலஹரக்கால்வாயின் சிறப்புக்கள் எவை?

- ஆழிசாராக் கால்வாய் எனவும் அழைக்கப்படும்
- அம்பன் கங்கைக்கு குறுக்காக அணை ஒன்றைக் கட்டி, அதிலிருந்து வட திசைக்கு நீரைக்கொண்டு செல்வதற்காக அமைக்கப்பட்ட இக்கால்வாய் 30 மைல்நீளத்தைக் கொண்டிருந்தமை.

67. மகாசேன மன்னன் மின்னேரியாக்குளத்திற்கு நீரைப் பெற்றுக் கொள்வதற்காக அமைத்த கால்வாய்?

- திலவத்துக அல்லது தல்வத்து

68. தாதுசேன மன்னன் கலாவாவியிலிருந்து அநுராதபுரத்தில் அமைந்துள்ள திஸாவாவிக்கு நீரைக்கொண்டு செல்வதற்கு அமைத்த கால்வாய் எது?

- யோத கால்வாய் (ஜயகங்கை கால்வாய், புதுமையான கால்வாய்)

69. தாதுசேனமன்னனால் அமைக்கப்பட்ட யோதகால்வாயின் நீளம்?

- 54 மைல் நீளமானது.

70. 1 ஆம் அக்கபோதி மன்னனால் அமைக்கப்பட்ட கால்வாயின் பெயர் ?

- மினிப்பே கால்வாய்

71. மினிப்பே கால்வாய் அமைக்கப்பட்டதன் நோக்கம் ?

மகாவலி கங்கையிலிருந்து நீரைக்கொண்டு செல்வதற்காக அமைக்கப்பட்டது.

72. கால்வாய்கள் அமைக்கப்பட்டமைக்கான தேவைகள் எவை?

- குளங்களிலிருந்தும் நீர்த்தேக்கங்களிலிருந்தும் விளைநிலங்களுக்கு நீரைக்கொண்டு செல்லல்.
- நீர்த்தேக்கத்தில் இருந்து குளத்திற்கோ குளத்தொகுதிக்கோ நீரைக் கொண்டு செல்லல்.
- குளத்தில் இருந்து இன்னொரு குளத்திற்கோ அல்லது பல குளங்களுக்கோ நீரைக் கொண்டு செல்லல்.

73. கால்வாய்கள் அமைக்கும் தொழில்நுட்பத்தின்போது எதிர்நோக்கிய சவால்களை அறிந்து கொள்ளக் கூடிய ஆதாரங்கள் தருக.

- ✪ கால்வாய்களினது சிதைவுகள்
- ✪ அணைக்கட்டுக்களின் சிதைவுகள்

74. கால்வாய்களை அமைக்கும் போதும் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தும் போதும் எதிர்கொண்ட சவால்கள் எவை?

- ✪ ஜயகங்கை கால்வாய் அமைக்கும் போது புவி அமைப்பு வேறுபாடுகள் பலவற்றிற்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டமை.
- ✪ கால்வாய் ஆரம்பிக்கும் இடத்திலிருந்து முடிவடையும் இடம் வரையில் புவியின் சாய்வு தொடர்பான மிகவும் சரியான அளவைத் தெரிந்து கொள்ள வேண்டியேற்றப்பட்டமை.
- ✪ ஜயகங்கை கால்வாய் அமைக்கும் போது இக்கால்வாயின் முதல் 17 மைல்கள் வரை ஒவ்வொரு மைல்தூரத்திற்கும் ஒரு அங்குலம் சாய்வில் அமைத்தமை ஆரம்பகாலத் தொழில்நுட்பத்தின் சிறப்பியல்பினை எடுத்துக்காட்டுகின்றது.
- ✪ நீணட கால்வாய்களை அமைக்கும் போது நிலத்தை அகழ்வது,கால்வாயின் அகலம்,ஆழம் என்பவற்றைப் பொருத்தமாகக் கையாளல், மென்மையான மணபடை காணப்படும் இடங்களில் கிடையாகக் கற்களைப் பரப்பி அது அரிப்பிற்கு உள்ளாவதைத் தடுத்தல், தரையின் வேறுபாட்டிற்கு அமைய கால்வாயை உருவாக்குதல். போன்ற சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.
- ✪ மழைகாலங்களில் கால்வாய்களில் நீர் பெருக்கு ஏற்பட்டு நீர் வெளியேறும் இதிலிருந்து அரிப்பு ஏற்படாது இருப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை.
- ✪ கால்வாயின் மதகுகள் கருங்கற்களால் அமைக்கப்பட்டமை.
- ✪ வான்கதவுகள் அமைக்கப்பட்டமை.

## பொய்கை அமைத்தல்

**75. பொய்கை என்பதன் மூலம் கருதப்படுவது யாது ?**

மனிதர்களுடைய பல்வேறு தேவைகளுக்காக நீரைச்சேகரித்து வைத்துக் கொள்வதற்கு நிலத்தை அகழ்ந்து அமைத்துக்கொள்ளும் ஆக்கம் பொய்கை எனப்படும்.

**76. இலங்கையில் ஆரம்பகாலத்தில் பொய்கை அமைக்கப்பட்டிருந்ததற்கான சான்று ஒன்றினைக் குறிப்பிடுக.**

விஜயன் இந்நாட்டில் கால்பதித்தபோது குவேனி பொய்கை ஒன்றின் அருகில் அமர்ந்து நூல்நூற்றுக் கொண்டிருந்தாள் என மகாவம்சம் குறிப்பிடுவதிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.

**77. வசப மன்னர் நகரத்தை அழகுபடுத்துவதற்காக பல பொய்கைகளை அமைத்ததாக குறிப்பிடும் நூல் எது?**

- மகாவம்சம்

**78. பொய்கைகள் அமைக்கப்பட்டதன் நோக்கங்கள் எவையெனக் குறிப்பிடுக.**

- நீர்ப் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டமை.
- குடிப்பதற்கு
- குளிப்பதற்கு
- நீர் விளையாட்டுக்களை மேற்கொள்வதற்கு

**79. பொய்கைகளின் வகைகளைக் குறிப்பிடுக.**

- நீர்ப் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்ட பொய்கை.
- மழைநீரை முறையாக சேமிப்பதற்காக அமைக்கப்பட்ட பொய்கை.
- அழகுக்காக அமைக்கப்பட்ட பொய்கை.
- சூழலைக் குளிர்மையாக வைத்திருப்பதற்காக கட்டப்பட்ட பொய்கை.

**80. அபயகிரியில் யானைப் பொய்கை அமைக்கப்பட்டதன் நோக்கம்?**

- யானைகளைக் குளிப்பாட்டுவதற்கு

**81. அநுராதபுரத்தில் அமைக்கப்பட்ட ரன்மசுப் பூங்காவின் பொய்கை அமைக்கப்பட்டதன் நோக்கம்?**

- நீர் விளையாட்டில் ஈடுபடுவதற்காக அமைக்கப்பட்டது.

82. மழை நீரை முறையாக சேமிப்பதற்காக பொய்கை அமைக்கப்பட்ட விகாரை எது?

- அபயகிரி விகாரை

83. அழகுக்காகவும் நீர்த்தேவைக்காகவும் அமைக்கப்பட்ட பொய்கைகள் எவை?

- பொலநறுவையில் அமைக்கப்பட்ட குமாரப் பொய்கை, தாமரைப்பொய்கை

84. சூழலை குளிர்மையாக வைத்திருப்பதற்காக கட்டப்பட்ட பொய்கையின் சிறப்பம்சங்கள் சிலவற்றைத் தருக.

- இராசரட்டைப் பிரதேசம் உலர்வலயப் பிரதேசமாகக் காணப்பட்டமையால் குளிர்மையான சூழலை ஏற்படுத்திக்கொள்ள அருகருகே பொய்கைகளை அமைத்துக் கொண்டமை.
- ஆராமைகளில் வசிக்கும் பிக்குமார்களுக்கு குளிரான சூழலில் தியானம் புரிவதற்காக சூழலை குளிர்மையாக்கும் பொருட்டு அமைக்கப்பட்டமை.
- 500 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட அபயகிரிவிகாரை அமைந்துள்ள நிலப்பரப்பில் 65 பொய்கைகள் அமைத்து சூழல் குளிர்மையாகப் பேணப்பட்டமை.
- ரஜகல தொல்பொருள் பிரதேசத்தில் 40 இற்கு மேற்பட்ட பொய்கைகள் காணப்படுகின்றமை. இவ்வாறு நீரை சேமித்து வைத்திருந்தால் நீராவியாதலால் அப்பிரதேசம் குளிர்ந்து காணப்பட்டமை சிறப்புக்குரியதாகும்.

85. அநுராதபுரத்தில் அமைக்கப்பட்ட குட்டம் பொய்கையின் சிறப்புக்கள் எவையாகும்?

- பிக்குகளின் நீர்த்தேவைகளைப் பூர்த்தி செய்தமை.
- அழகுத்தேவை பூர்த்திசெய்யப்பட்டமை.
- குளிர்மையான சூழலை ஏற்படுத்தியமை.

86. பொய்கை அமைக்கும் தொழில்நுட்பத்தின் சிறப்புக்கள் எவையாகும்?

- உலர்வலயத்தில் பல்வேறுபட்ட இடங்களில் நிலத்தை அகழ்ந்து அமைக்கப்பட்டுள்ள பொய்கைகளில் பெரும்பாலானவை திட்டமிட்டபடி அமைக்கப்பட்டமை.
- பொய்கைக்கான இடத்தை தெரிவு செய்யும் போது நீரைப் பெற்றுக் கொள்ளும் விதத்தில் கவனம் செலுத்தப்பட்டமை.

- மழை நீரைச் சேமிக்கும் பொய்கைகளைப் போன்றே வேறு நீர் மூலங்களிலிருந்தும் அல்லது சுரங்க வழியிலோ கால்வாய் மூலம் நீரைப் பெற்றுக் கொள்ளும் வகையில் பொய்கைகள் அமைக்கப்பட்டமை.
- சதுரமான, வட்டவடிவிலான பொய்கைகள் அமைக்கப்பட்டமை.
- குட்டம்பொய்கையில் நீர் வடிகட்டல் தொழில் நுட்பம் பின்பற்றப்பட்டுள்ளமை.
- குளிப்பதற்கும் , குடிப்பதற்கும் அமைக்கப்பட்ட சில பொய்கைகளில் நீர் அசுத்தமடையும் போது அந்நீர் நிலத்துக்கு அடியில் கால்வாய் மூலம் பொருத்தமான இடம் ஒன்றிற்கு அனுப்புவதற்காக பொய்கையின் அடிப்பாகத்தில் துளையிட்டு சுரங்க வழிகள் உருவாக்கப்பட்டு இருந்தமை.
  உதாரணம - ரன்மசு உயனப் பொய்கை
- பொய்கையின் ஓரங்கள் இடிந்து விழாமல் தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளமை.
- பொய்கைகளின் உள்ளே இறங்குவதற்கு படிவரிசைகள் அமைக்கப் பட்டுள்ளமை.
- பொய்கைகளுக்கு வெளியிலிருந்து குழாய்வழியாக நீரைப் பெறும் பொழுது அக் குழாய் வழிகளை நேரடியாகப் பொய்கையில் விடாது அதற்குள் வெளியில் அமைக்கப்பட்ட வடிகட்டிற்குள் விடப்படும் நீர் பெறப்படுகின்றமை தொழில் நுட்ப சிறப்பினைக் காட்டுகின்றது.
- வெளியில் பெய்யும் மழை நீர் பொய்கையில் பாய்ந்துவிடாது இருக்க அதன் கற்சுவர்கள் நிலமட்டத்திலிருந்து உயரமாக அமைக்கப்பட்டுள்ளமை நுட்பத்திறன்களைக் காட்டுகின்றது.
- பொய்கைகளுக்குள் இறங்குவதற்கு முன்பு கால்களைச் கழுவிச் செல்வதற்காக நீர் நிரப்பப்பட்ட சிறிய தொட்டி அமைக்கப்பட்டுள்ளமை. இதனால் பொய்கைக்குள் மணலும் அழுக்குகளும் சேர்வதை தவிர்த்துக்கொள்ள முடிகின்றது.

இவ்வாறு திட்டமிடப்பட்டு சூழல் தொடர்பான புரிந்துணர்வுடன் அமைக்கப்பட்டு இருந்தது.

## நீர்ப்பூங்கா

87. நீர்ப்பூங்கா எனப்படுவது யாது?

நீர் பூங்கா அல்லது நந்தவனம் என்பது மரஞ்செடி கொடிகளை நட்டு ஒய்வு எடுப்பதற்காகவோ நீர் விளையாட்டுக்காகவோ பொருத்தமான முறைப்படி அமைக்கப்பட்ட விசேட இடம் நீர்ப் பூங்கா ஆகும்.

88. **எமது நாட்டில முதல் முதல் நந்தவனத்தை அமைத்த மன்னன் யார்?**
- மூத்த சிவ மன்னன்

89. **மூத்த சிவனால் அமைக்கப்பட்ட நந்தவனம் மகாமேகவனம் எனப் பெயர் பெறக் காரணம் யாது?**
- நந்தவனத்திற்கான நிலத்தை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்த தினத்திலேயே அடைமழை பெய்ததால் அது மகாமேகவனம் எனப் பெயர் பெற்றது.

90. **மகாமேகவனப் பூங்காவினை தேவநம்பியதீஸன் யாருக்கு தானமாக வழங்கினான்?**
- மஹிந்ததேரர் உட்பட பௌத்த பிக்குகளுக்கு தானமாக வழங்கினான்.

91. **இலங்கையின் முதலாவது பூங்காவனம் எது?**
- ஜோதி வனம்

92. **ஜோதிவனம் என்பதன் பொருள்?**
- புத்தசாசனம் துலங்கிய இடம்.

93. **பத்மஸ்வர எனும் பெயரில் பூங்காவை அமைத்த மன்னன் யார்?**
- குட்டகண்ண திஸ்ஸ மன்னன்.

94. **புராதனகாலத்தில் பூங்கா அமைப்பதில் ஈடுபட்ட மன்னர்கள் பெயர்களைத் தருக.**
- வசப
- கோதாபய
- முதலாம் காசியப்ப
- முதலாம் அக்போ
- முதலாம் பராக்கிரமபாகு

95. **புராதனகாலத்தில் அமைக்கப்பட்ட அரண்மனைப் பூங்காக்களைக் தருக?**
- சீகிரியா
- ரன்மசு

96. **புராதனகாலங்களில் ஆராமைகளில் பூங்காக்கள் அமைக்கப்பட்டதன் நோக்கங்கள்?**
- பிக்குமார் ஒய்வாக இருந்து தியானத்தில் ஈடுபடுவதற்காக அமைக்கப்பட்டமை
- போதனை நிகழ்த்துதல் ஆகியவற்றுக்காக ஆராமைகளில் பூங்காக்கள அமைக்கப்பட்டது.

97. ஆராமைகளில் பூங்காக்கள் அமைக்கப்பட்டமைக்கு உதாரணங்கள் தருக.

- மகாவிகாரை
- அபயகிரி விகாரை
- ஜேதவனராமய விகாரை

98. நீர்ப் பூங்காக்கள் என்பதால் கருதப்படுவது யாது?

பூங்காக்களுக்கு நீர் வசதியை ஏற்படுத்திக் கொடுத்து பொய்கைகளை அமைத்து அழகுடன் உருவாக்கப்பட்டவை நீர்ப் பூங்காக்களாகும்.

99. ரன்மசுப் பூங்காவிற்கு உரிய பிரதேசத்தைக் குறிப்பிடுக?

திசா வாவியின் கரையில் இசுறு முனிய விகாரையிலிருந்து மிரிசுவெட்டி விகாரை வரையான இடம் ரன்மசுப் பூங்காவிற்குரியதாகும்.

100. ரன்மசு பூங்காவின் சிறப்புக்கள் ?

- அரசர்களின் பாவனைக்காக ரன்மசுப பூங்கா உருவாக்கப்பட்டமை.
- நிலத்தின் சரிவான தன்மையும் திசாவாவிக்கரையின் அமைதியான சூழலும் கவனத்தில் கொள்ளப்பட்டு பூங்கா திட்டமிட்டு அமைக்கப்பட்டமை.
- திசாவாவியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நீர் பூங்கா வழியே பாய்ந்து ஓடுவதற்கு குழாய்வழித் தொகுதியோன்று அமைக்கப்பட்டுள்ளமை.

## சீகிரிய நீர்ப்பூங்கா

101. தென்னாசியாவிலுள்ள மிகவும் பழமைவாய்ந்த நீர்ப் பூங்கா எது?

- சீகிரிய நீர்ப்பூங்கா

102. சீகிரிய நீர்ப்பூங்கா தொடர்பான தகவல்களை வெளிக்கொணர்ந்த பேராசிரியரகள்?

- எச். சி.பி பெல்
- செனரத் பரணவிதான

103. சீகிரியப் பூங்காவின் சிறப்பியல்புகள் எவை?

- சீகிரியக் குன்றை மையமாகக் கொண்டு மேற்குப் பக்கமாகப் பிரயாணம் செய்யும் பிரதான பாதைக்கு சமாந்தரமாக அமைக்கப்பட்டுள்ளமை.
- இயற்கையான தன்மையைக் கருத்தில் கொண்டு இரு பக்கமும் நீர் பாய்ந்து ஓடும் வழிகளின் தொகுதியும் தடாகம், மண்டபம் என்பனவும் முறையாக நிர்மாணிக்கப்பட்டுள்ளமை. இங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள பாதைத் தொகுதி, மண்டபம், பொய்கை, பூம்புனல், ஓய்வு மண்டபம் என்பவற்றைக் கொண்டு காணப்படுகின்றமை.

104. நீர்ப் பூங்காவின் சிறப்பம்சங்கள் எவை?

- நிலப் பிரதேசத்தின் இயல்புக்கு அமையவும் சூழலுக்குப் பொருந்தும் விதத்திலும் பூங்கா திட்டமிடப்பட்டமை.
- திட்டமிட்ட அமைப்பிலான வீதித் தொகுதியோன்று பூங்காவினுள் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை.
- கால்வாய், பொய்கை, பூம்புனல், என்பவற்றை அமைத்து அழகுபடுத்தியமை.
- திறந்த வெளி வீடுகள், மண்டபங்கள், ஓய்விடங்கள் ஆகியவற்றை அமைத்து மரஞ்செடி கொடிகளால் மனோரம்மியமான சூழலை ஏற்படுத்தியுள்ளமை.
- பூங்கா நிர்வாகிகளால் முறையாகப் பராமரிக்கப்பட்டமை.

## களி மண் தொழினுட்பம்

105. புராதன காலத்தில் களிமண் கைத்தொழிலில் ஈடுபடுவதற்கு சாதகமாக அமைந்த காரணிகள்?

- களிமண் இலகுவாக பெறக் கூடிய பொருளாக இருந்தமை.
- இலாபகரமானது.

106. களிமண் தொழில் நுட்பத்தின் படிமுறை வளர்ச்சிகள் ?

- மனிதன் நெருப்பைக் கண்டறிந்த சிறிது காலத்துக்குள்ளேயே உணவை சமைத்து உண்பதற்கும், மட்பாண்டங்களை உற்பத்தி செய்வதற்குகான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றமை.
- ஆரம்பகாலத்தில் மட்பாண்டங்களை உற்பத்தி செய்து அவற்றை வெயிலில் காயவைத்து உறுதியடையச் செய்திருந்தனர்.
- காலப்போக்கில் நெருப்பில் சுடுவதன் மூலம் உறுதியடையச் செய்திருந்தனர்.
- நாகரிக வளர்ச்சியுடன் மட்பாண்டத்தொழில்நுட்பமும் வளர்ச்சி அடைந்தமை.
- வனைதல் சில்லு கண்டறியப்பட்டமை.
- இலங்கையில் மட்பாண்டங்களை உற்பத்தி செய்யும் வரலாறு வரலாற்றுக்கு முற்பட்டகாலம் வரை நீண்டு செல்கின்றது.
- வரலாற்றுக்கு முற்பட்டகால மட்பாண்டத் தொழில்நுட்பம் தொடர்பான தொல்லியல் ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளமை.
- கி - மு 3 ஆம் நூற்றாண்டில் இடம்பெற்ற மஹிந்ததேரரின் வருகையுடன் அண்டை நாடான இந்தியாவுடன் தொடர்புகள் ஏற்பட்டமை மட்பாண்டத் தொழிலின் வளர்ச்சிக்கு காரணமாக அமைந்துள்ளது.
- மட்பாண்டத் தொழிலில் நிபுணத்துவம் பெற்ற எட்டு குயவர் குலங்கள் காணப்பட்டதாக வம்சக்கதைகள் குறிப்பிடுகின்றமை இத்தொழில் நுட்பத்தின் சிறப்பினைக் காட்டுகின்றது.

107. களிமண் தொழில்நுட்பத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் எவை?

- சட்டி, டானை, பீங்கான், கோப்பை,
- நீரைசேகரித்துக்கொள்ளக் கூடிய மண்பாண்டங்கள்,
- பூச்சாடி

108. வனைதல சில்லின் மூலம் மண்பாண்டம் உற்பத்தி செய்யப்பட்ட முறையினை விளக்குக?

- ✪ வனைதல் சில்லு என்பது தரையிலோ அல்லது வேறு ஒரு பொருளின் மீதோ வைத்துச் சுழற்றக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ள வட்டவடிவான பலகையிலான ஒரு கருவியாகும்.
- ✪ இப் பலகையின் மீது களிமண் உருண்டையை வைத்து அப்பலகையை சுழற்றுவதன் மூலம் சுழற்சி வேகத்திற்கும் கையினால் உருவாக்கப்படும் வடிவத்திற்கும் ஏற்ப மிகச் சிறந்த முடிவுப் பொருளை உற்பத்தி செய்து பெற்றுக் கொண்டனர்.

109. மண்பாண்ட உற்பத்தியின் படிமுறைச் செயற்பாடுகளைக் குறிப்பிடுக?

- ✪ களிமண்ணைத் தெரிவு செய்தல்
- ✪ களிமண்ணைப் பதப்படுத்திக் கொள்ளல்.
- ✪ உற்பத்திப் பாண்டத்துக்குத் தேவையான களிமண்ணை உருண்டையாக்கி வனைதல் சில்லின் மீது வைத்து அதன் உருவத்தை வடிவமைத்துக் கொள்ளல்.
- ✪ முழுமையான வடிவத்தை செப்பனிட்ட பின்னர் வெளிப்பகுதியில் செதுக்கல்களையோ கோடுகளையோ கொண்டு அலங்கரிக்கப்பட்ட பாண்டம் உலரவைக்கப்பட்ட பின்பு, சூளையில் வைத்து சுடப்பட்டு மட்பாண்டம் உருவாக்கப்படும்.

110. எமது நாட்டில் செங்கல் பாவனை இருந்த காலப்பகுதி எது?

- ✪ கி - மு 3 ஆம் நூற்றாண்டு

111. செங்கல் உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்திருந்தமைக் கான சான்றுகளைத் தருக.

- ✪ துட்டகைமுனு மன்னருடைய காலத்தில் ருவன்வெலிசாய போன்ற பிரமாண்டமான தாதுகோபங்களைக் கட்டுவதற்கு தேவையான செங்கற்களை உற்பத்திசெய்து கொள்ளும் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்தமை.
- ✪ அநுராதபுர இராட்சியத்தின் முற்பாதியில் இன்றைய செங்கற்களின் அளவை விட பரந்ததாக உற்பத்தி செய்யப்பட்டமை.
- ✪ அநுராதபுரத்தில் ஜேதவன தாதுகோபத்தைப் புனரமைக்கும் போது அநுராதபுர பிரதேசத்தில் கல்கடவல பிரதேசத்தில் சூளை அமைத்து தேவையான செங்கற்களை உற்பத்தி செய்து கொண்டமை.
- ✪ அநுராதபுரத்தில் காணப்படும் விகாரைகள் பெரும்பாலும் செங்கற்களை கொண்டு அமைக்கப்பட்டமை.

112. அதிகளவான செங்கற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட விகாரைகளைத் தருக.
- ✪ அபய கிரி விகாரை ✪ ஜேதவனராமய ✪ தெமளமகாசாய

113. புராதன காலத்தில் ஒடுகளை உற்பத்தி செய்வோருக்கு வழங்கப்பட்ட பெயர் யாது?
- ✪ ஓட்டுத் தச்சர்

114. செங்கல் உற்பத்தியாளருக்கு வழங்கப்பட்ட பெயர் யாது?
- ✪ ஓட்டுத் தச்சர்

115. இராசரட்டைக்காலததில் ஓடுகள் கொண்டு வேயப்பட்ட கட்டிடங்கள் எவை?
- ✪ சமயக் கட்டிடங்கள்
- ✪ பொதுக்கட்டிடங்கள்
- ✪ அரண் மனைகள்
- ✪ பிரபுக்களின் வீடுகள்

116. ஓட்டு உற்பத்தி மேற்கொள்ளும் படிமுறைகளைக் குறிப்பிடுக?
- ✪ பொருத்தமான களிமண்ணைத் தெரிவு செய்து பதப்படுத்தல்
- ✪ ஓட்டு அச்சில் வார்த்து அதன் வடிவத்தை உருவாக்கிக் கொள்ளல்.
- ✪ காயவைத்தல்
- ✪ சுடுதல்

117. உலோகத் தொழில்நுட்பம் புராதன காலத்திலிருந்து படிப்படியாக வளர்ச்சி அடைந்திருந்து வந்தமைக்கான சான்றுகளைத் தருக.
- ✪ இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆய்வுகளிலிருந்து கி – மு 3 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இரும்பு, செம்பு போன்ற உலோகங்கள் பாவனையில் இருந்தமை.
- ✪ கி – மு 3 ஆம் நூற்றாண்டிலிருந்து விவசாயத் தொழில் வளர்ச்சியுற்றமை.
- ✪ நகரமயமாதல் அதிகரித்தமை
- ✪ கட்டிடவாக்கத்துறை வளர்ச்சி அடைந்தமை.
- ✪ இந்தியாவின் தொழில்நுட்ப முறைகள் நாட்டினுள் வேகமாகப் பரவியமை.

118. கல்வெட்டுக்களில் கபர எனப் பெயர் பொறிக்கப்பட்டவர் யார்?
- ✪ கொல்லர்/ கம்மாளர்

119. கல்வெட்டுக்களில தம்பர எனப்பெயர் பொறிக்கப்பட்டவர் யார்?
- ✪ செம்புக் கம்மாளர்

120. கல்வெட்டுக்களில் தோபஸ எனும் பெயரால் குறிப்பிடப்பட்டவர்?
- ✪ தகரக் கம்மாளர்

121. இராசரட்டைக்காலப்பகுதியில் பாவனையில் இருந்த உலோகங்கள் தருக.
- ✪ இரும்பு , செம்பு, வெள்ளி, தங்கம்

122. அநுராதபுரத்திலுள்ள விகாரையோன்றினை அகழ்ந்த போது அங்கு தங்க நாணயங்களும் தங்கத்துண்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டது அவ் விகாரை எது?

- அபயகிரி விகாரை (பொய்கைப் பிரதேசத்தில்)

123. அபயகிரி விகாரைப்பிரதேசத்தில் பொய்கையில் அகழ்வராட்சிகள் மேற்கொள்ளப்பட்ட ஆண்டு எது?

- 1994

124. அபயகிரி விகாரைப் பிரதேசத்தில் அகழ்வராட்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது தங்கக் கைத்தொழில் இருந்தமைக்கான சான்றுகள் கிடைக்கப் பெற்றன. அவற்றைக் குறிப்பிடுக?

- தங்கத்தை உருக்குவதற்காக பயன்படுத்தப்பட்ட சூளை
- தண்ணீர் நிரப்பி வைத்துக் கொள்ளும் மட்பாத்திரம்.
- தங்கத்திலான காப்பு
- பாதரசம்
- மோதிரம்
- தோடு
- மாலை

125. எமது நாட்டில் இரும்பு உருக்கப்பட்டமை தொடர்பான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்ற இடங்கள் எவை?

- பலாங்கொடை சமலெனவெவ
- சீகிரியின் அலகொலவெவ
- தெஹிகஹ எலஹந்த

126. இரும்பை உற்பத்தி செய்து கொள்வதற்கான பொருத்தப்பாடான தொழில்நுட்பத்தை புராதான இலங்கையர் பயன்படுத்தியிருந்தனர் இதற்கான சான்றாதாரங்களைக் தருக?

- இரும்புத்தாதைக் கொண்ட கற்களைத் தூளாக்கி, மண்ணினால் உருவாக்கப்பட்ட சூளைகளில் இட்டு அதற்குத் தேவையான வெப்பத்தைப் பிறப்பித்து உருக்கிக் கொண்டமை.
- சமனெலவெவப் பகுதியில் தென்மேற்குப்பருவக்காற்றுக் காலத்தில் இயற்கையாகக்கிடைக்கும் காற்றைப் பயன்படுத்தி சூளையில் உள்ள கரியை தொடராக எரியச் செய்தமை.
- தெஹிகஹ எலஹந்த பிரதேசத்தில் தொடர்ச்சியாக சூளையை எரியச் செய்வதற்காக ஊதுளையைப் பயன்படுத்தி இயற்கையான காற்றைப் பயன்படுத்தி இருபபுத்தாதை சூடாக்கி இரும்பினை உற்பத்தி செய்து கொண்டனர். இவ்வாறு இரும்பை உற்பத்தி செய்து கொள்வதற்கான பொருத்தப்பாடான தொழில்நுட்பத்தை இலங்கையர் பின்பற்றி இருந்தனர்.

## கட்டிடக் கலை

127. வாஸ்த்து சாஸ்திரம் என்பது யாது?
வீடு, கட்டிடம் போன்ற நிர்மாணத்துறை சார்ந்த ஒரு கலையம்சமாகும்.

128. புராதனகாலத்தில் கட்டிடக் கலை வளர்ச்சியின் படிமுறைகளைத் தருக.

- மஹிந்ததேரரின் வருகையுடன் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நெருங்கிய உறவினால் இந்தியாவின் கட்டடக்கலை மரபு இலங்கையில் பரவியமை.
- இன்றுவரை இலங்கையில் காணப்படும் கட்டிடக் கலை தேவநம்பியதிஸ மன்னன்காலத்திற்கு பின்னர் வளர்ச்சியடைந்தமை.
- பெரும்பாலானவை சமய நடவடிக்கைகளுக்காகவும் பௌத்த பிக்குகளின் பயன்பாட்டிற்காகவும் கட்டப்பட்ட கட்டிடங்களாகும்.

129. இராசரட்டைக் காலத்திற்குரிய கட்டிடக்கலையின் இரு வகையான நிர்மாணங்களையும் குறிப்பிடுக?

- சமயச் சார்புள்ள கட்டிடங்கள்
- சமயசார்பற்ற கட்டிடங்கள்.

130. சமயச் சார்புள்ள கட்டிடங்கள் ?

- தாதுகோபம்
- தூபி மனை
- போதி மனை
- சிலை மனை
- விஹாரை, ஆராமைகள்
- தியான மண்டபம்
- தானசாலை
- தேவாலயம்

131. சமயச் சார்பற்ற கட்டிடங்கள் ?

- அரண்மனை , வீடு
- கோட்டை , மலசல கூடம்
- வைத்தியசாலை

132. இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது தாதுகோபம் எது?

- தூபராம தாதுகோபம்

133. அநுராதபுரத்தில் கட்டப்பட்ட முக்கியமான தாதுகோபங்கள் எவை?

- மிரிஸவெட்டிய
- மகாதூபி
- ருவன் வெலிசாயா
- அபயகிரி விகாரை
- ஜேதவன ராமய

134. அநுராதபுரக் காலத்தில் தலைநகருக்கு வெளிப்பிரதேசங்களில் கட்டப்பட்ட தாதுகோபங்கள் எவை?

- சேருவில
- சோமாவதி
- திஸ்ஸமஹாராம
- மெதிகிரிய
- தீகவாவி
- நீலகிரி

135. பொலன்னறுவைக்காலத்தில் கட்டப்பட்ட தாதுகோபங்கள் எவை?

- கிரிவெஹர
- தெமள மகாசாய
- தெதிகமை கொட வெஹர

136. அபகிரி விகாரையின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.

- அன்று இருந்த பிரதான கல்வி நிலையம் அபயகிரியாகும்.
- அபயகிரியில் 5000 பிக்குகள் கல்வி கற்றதாகக் கூறப்படுகின்றது.
- புனித சின்னத்திற்குப் பூசைகள் நடந்த அபயகிரி விகாரை உதவியமை.
- காஷ்மீர் , இந்தியா, சீனா, ஜாவா ஆகிய நாடுகளுடன் அபயகிரிக்கு நெருங்கிய தொடர்பிருப்பதாகக் கூறப்படுகின்றது.

137. அபயகிரி விகாரையினை அமைத்த மன்னன் யார்?

- வலகம்பா

138. ஜேத்தவனாராமய கட்டிய மன்னன் யார்?

- மகாசேனன்

139. மகாசேனனன் எப் பௌத்தத்தை ஆதரித்தான்?

- மகாயன பௌத்தத்தை ஆதரித்தான்

140. ஜேத்தவனாராமையின் முக்கியத்துவத்தை குறிப்பிடுக?

- அபயகிரி விகாரை வசமிருந்த புனித சின்னங்கள் ஜேத்தவனாராமைக்கு கொண்டு வரப்பட்டமை.
- ஆரம்பத்தில் பிரித்போதனைக்கு முக்கியத்தவம் வழங்கப்படாத போதிலும், பிற்காலத்தில் பெருமளவு மக்கள் பிரித் போதனையில் பங்கு கொண்டமை.

141. மகாசேன மன்னனினால் அமைக்கப்பட்ட ஏனைய விகாரைகள் யாவை?

- மின்னேரியா விகாரை
- கோகர்ன விகாரை
- ஏகாபில் விகாரை
- தாசென்கல விகாரை

142. மகாசேனனன் எப்பௌத்தத்தை ஆதரித்தான்?

- மகாயன பௌத்தத்தை ஆதரித்தான்

143. ஜேத்தவனாராமையின் முக்கியத்துவத்தை குறிப்பிடுக?

- அபயகிரி விகாரை வசமிருந்த புனித சின்னங்கள் ஜேத்தவனாராமைக்கு கொண்டு வரப்பட்டமை.
- ஆரம்பத்தில் பிரித்போதனைக்கு முக்கியத்தவம் வழங்கப்படாத போதிலும், பிற்காலத்தில் பெருமளவு மக்கள் பிரித் போதனைக்கு மக்கள் பங்கு கொண்டமை.

144. துட்டகைமுனுவின் சமயப்பணிகளைக் குறிப்பிடுக?

- 89 சமயக்கட்டிடங்களைக் கட்டினான்.
- லோவாமகாபாயமகாமேகவனப்பூங்காவில் அமைந்துள்ள இக்கட்டடம் பிக்குமார்கள்போயாக்கருமங்களை நிறைவேற்றுவோருக்கு அமைக்கப்பட்டமை.

145. மகாபராக்கிரமபாகு மன்னனினால் பொலநறுவைக்காலத்தில் அமைக்கப் பட்ட விகாரைகள் எவை?

- கிரி விகாரை
- தெமள மகாசாய
- யுதகனாவ விகாரை
- தெதிகம கொடவிகாரை

146. நிஸ்ஸங்கமல்ல மன்னனால் அமைக்கப்பட்ட விகாரை எது?

- ரன்கொத் விகாரை

147. தாதுகோபத்தில் காணப்படும் பிரதான அம்சங்களைக் குறிப்பிடுக.

- அடித்தளம்
- முத்தட்டு வளையம்
- அண்டம்
- சதுரக்கோட்டம்
- தேவர் கோட்டம்
- கலச பீடம்
- கலச வளையம் , கலசம்

148. இராசரட்டைக் காலத்திற்குரிய மிகச் சிறந்த நுழைவாயில் அமைக்கப்பட்ட இடம் எது?

- மிஹிந்தலை கண்டகசைத்திய

## தூபி மனை

149. தூபிமனை என்பது ?
அளவில் சிறிய தூபிகளைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட கட்டிடமே தூபி மனை எனப்படும்

**150. தூபி மனை கட்டப்படும் விதத்தை எழுதுக.**
தாதுகோபத்தைச் சுற்றி கற்றூண்களை நட்டு அதன் மீது கம்புகளிலான கோண வடிவிலான கூரையை அமைத்து தூபி மனை கட்டப்பட்டது.

**151. இராசரட்டைக்காலத்திற்குரிய கலைத்திறனான தூபி எங்கு அமைக்கப் பட்டுள்ளது.**
- மெதிரிகிரியவில்

152. தூபி மனைகளுக்கு உதாரணம் தருக?
- தூபராம தூபி
- லங்காராமய
- அம்பஸ்தல தூபி
- திரியாய் தூபி

## போதி மனை

153. போதி மனை என்பது?
வெள்ளரசு மரத்தின் பாதுகாப்பிற்கும் அலங்காரத்திற்கும் அதனை தரிசிக்க வருவோரின் வசதிக்காகவும் அதனை மையமாகக் கொண்டு கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டது அதனைப் போதி மனை என அழைப்பர்

**154. இராசரட்டைக்காலத்திற்குரிய கலைத்திறனான போதி மனை எங்கு அமைக்கப்பட்டுள்ளது.**
- குருணாகல் – நில்லக்ககம

## சிலை மனை

**155. சிலை மனை கடடப்பட்ட காரணம் யாது?**
புத்தரின் சிலையை அமைத்து அதனை மழை, வெயில் என்பவற்றிலிருந்து பாதுகாப்பதற்கும் வழிபடவரும் மக்களின் வசதிக்காகவும் சிலைமனைகள் அமைக்கப்பட்டன.

156. இராசரட்டை நாகரிகாலத்தில் சிலைமனைகள் நிர்மாணிக்கும் போது பின்பற்றப்பட்ட கலை மரபுகளைத் தருக?

- கந்தக் குடி கலைமரபு
- கெடிகே மரபு
- லென் விகாரை மரபு

157. கந்தக் குடி மரபின் சிறப்புக்கள் இரண்டு தருக.

- சிலைமனைகளை நிர்மாணிக்கும் புராதன சம்பிரதாயம் கந்தகுடி எனப்படும்.
- கந்தக் குடி மரபில் சிலைமனைகளில் சிலைகள் வைக்கப்பட்ட பகுதி கர்ப்பக்கிரகம் வெளிப்படுவதோடு பொதுமக்கள் பிரதிமைகளை பார்ப்பதற்காக அமைக்கப்பட்ட பகுதி மண்டபம் ஆகும்.

158. கந்தக் குடி மரபின் சிறப்புக்களைக் காட்டும் சிலைமனைகள் ?

- கிரிபத் வெஹர
- விஜயராம
- பங்குலிய
- தொலுவில

159. கந்தக் குடிமரபின் முன்னேற்றத்தினை எடுத்துக்காட்டும் சிலை மனை?
கெடிகே சிலைமனை

160. கந்தககுடிமரபு எம்மன்னன் காலத்தில் உன்னதநிலையை அடைந்திருந்தது?

- மகாபராக்கிரமபாகு

161. மகாபராக்கிரமபாகுவினால் கட்டப்பட்ட கெடிகே மரபுரீதியான சிலைமனைகள் எவை?

- தூபராம சிலைமனை
- லங்காதிலக சிலை மனை
- திவங்க சிலை

162. கெடிகெ மரபுரீதியான குகை விகாரைகளுக்கு உதாரணங்கள் தருக.

- பிதுறங்கல
- ஹபெஸ்ஸ
- ஹீலங்நுகே
- பம்பரஸ்கஸ்தலாவ
- லென் விகாரை

163. கற்பீலிகளை அமைத்து பொருத்தமான முறையில் உருவாக்கிக் கொள்ளப்பட்ட புராதன குகைகளைக் காணக் கூடிய இடங்களைக் குறிப்பிடுக.

- மிஹிந்தலை
- வெஸ்ஸகிரி
- ரிடிகல
- ரஜகல

164. பொன்னறுவைக்காலத்தில் கட்டப்பட்ட இந்துக்கோயில்களையும் கலை மரபையும் தருக?

- 1ஆம் இலக்க சிவன் கோவில்
- 2ஆம் இலக்கச் சிவன்கோவில்
- கரைல மரபு - சோழர்கால கட்டடக் கலைமரபு

165. அநுராதபுரகால விசேடமான அரண்மனைத்தொகுதி எது?

- சீகிரியா

166. சீகிரியா மாளிகைத் தொகுதியை உருவாக்கியர் யார்?

- காசியப்பன்

167. சீகிரியா அரண்மனையின் சிறப்புக்கள் எவை?

- நீர்ப்பூங்கா
- மாடிப்பூங்கா
- நீரகழி
- பாதுகாப்பு மதில் என்பவற்றைக் கொண்டு இயற்கையோடு ஒன்றித்து காணப்படுகின்றமை.

168. பொலன்னறுவை யுகத்திற்குரிய அரண்மனையை அமைத்த அரசர்கள் யார்?

- முதலாம் விஜயபாகு
- முதலாம் பராக்கிரமபாகு

169. பொலன்னறுவையின் உள்நகரில் அமைக்கப்பட்டிருந்த வைஜயந்த அரண்மனையின் சிறப்புக்கள் எவை?

- ஏழு மாடிகளைக் கொண்டு அமைக்கப்பட்டமை
- முதலாம் பராக்கிரமபாகு மன்னன் இதனை அமைத்தான்

170. புராதன வைத்தியசாலைகளின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் எவை?

- மெதிகிரிய
- மிஹிந்தலை
- பொலன்னறுவை ஆலாஹன பிரிவெனா

171. மலசல கூடங்கள் அமைக்கையில் நிலத்தினுள்ளே வடிகட்டும் பானைகள் வைக்கப்பட்டமைக்கான காரணம்?

மலசல கூடங்களிலிருந்து வெளியேறும் அசுத்த நீரை அப்படியே நிலத்தினுள் விடாது வடிகட்டி நிலத்தினுள் விடுவதற்கு இம்முறை ஏற்படுத்தப்பட்டது.

172. அநுராதபுரயுகத்தில் அமைக்கப்பட்ட மூவகைச் சிலைகளையும் பெயரிடுக?

- அமர்ந்த சிலை
- நிற்கும் சிலை
- சயன நிலை

173. அமர்ந்த நிலைப் புத்தர் சிலைகளுக்கு உதாரணம் தருக.

- அநுரதபுரம் - சமாதி புத்தர் சிலை
- தொலுவில் புத்தர் சிலை

174. அநுராதபுர யுகத்திற்குரிய நிற்கும் நிலையிலுள்ள புத்தர் சிலைகளைக் குறிப்பிடுக.

- அவக்கண புத்தர் சிலை
- ரெஸ்வெஹர
- மாளிகாவில

175. பொலன்னறுவைக்காலத்தில் அமைக்கப்பட்ட புத்தர் சிலைகள்?

- உத்தராராம
- கல்விஹாரை

176. போதிசத்துவர் என்பது?

புத்தராகப் பிறப்பதற்கு முன்னைய பிறப்பை போதிசத்துவர் என்பர்.

177. அநுராதபுரகாலப்பகுதிற்குரிய உயர்தரத்திலான போதிசத்துவர் சிலை எது?

- தம்பே கொட போதிசத்துவர் சிலை.

178. போதிசத்துவர் சிலைகாணப்படும் இடங்கள் எவை?

- புதுறுவாகல
- வெலிகம குஸ்டராஜகல
- யடால
- வெஹர

179. ருவன்வெலிசாயவின் முற்றத்தில் காணப்படும் மன்னர்களின் சிலைகளைத் தருக?

- துட்டகைமுனு மன்னன்
- பாதிகாபய மன்னன்

180. பராக்கிரம சமுத்திரத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள சிலை எம் மன்னனுடையது?

- மகாபராக்கிரமபாகு மன்னன் சிலை

181. இலங்கையின் செதுக்கல்கலையின் தனித்துவத்தினை வெளிப்படுத்தும் கலையம்சம் எது?

- சந்திர வட்டக்கல்

182. சந்திர வட்டக்கல் என்பது?

கட்டிடத்தினுள் நுழைகின்ற வாயிலின் முன்னால் நிர்மாணிக்கப்பட்டுள்ள அரைச் சந்திரனின் வடிவைக்கொண்ட கற்செதுக்கலாகும்.

183. அநுராதபுர சந்திரவட்டக்கல்லில் செதுக்கப்பட்டுள்ள விடயங்கள்?

- மலர்ந்த தாமரைப் பூவின் வடிவம்
- தாமரை மொட்டுக்கள்
- மலர் கொடிகள்
- அன்னப்பட்சிகளின் வரிசை
- சிங்கம்
- யானை
- குதிரை
- எருது
- தீச் சுவாலை

184. பொலனறுவைக்கால சந்திர வட்டக்கல்லில் நீக்கப்பட்ட மிருகம்?

- எருது - இந்துசமயச் செல்வாக்கின் காரணமாக, அதாவது எருது இந்துக்களின் புனித தெய்வம் என்பதால் நீக்கப்பட்டது.

185. இராசரட்டைக்கால கட்டிடங்களின் வாயில்களை அலங்கரித்த கலையம்சங்கள் எவை?

- சந்திர வட்டக்கல்
- காவற் கல்
- கொரவக்கல்

186. அநுராதபுர யுகத்தில் உயர் கலைத்திறன்மிக்க படைப்புக்களாக விளங்குபவை எவை?

- இசுறு முனிய காதலர் சிலை
- குதிரைத் தலையும் மனித உருவமும்

187. இசுறு முனிய காதலர் சிலை, குதிரைத் தலையும் மனித உருவமும் என்பவற்றின் கலைப்படைப்பை அமைத்த அரசன் யார்?

- தேவநம்பியதீஸன்

188. அநுராதபுர யுகத்தில் கல்லில் செதுக்கிய புத்தர் சிலைகள் கண்டெடுக்கப்பட்ட இடங்கள் எவை?

- அபயகிரி
- ஜேதவனராமய விகாரை

189. அநுராதபுர யுகத்தில் உலோகத்தினால் உருவாக்கப்பட்ட புத்தர் சிலைகளின் பெயர்களைத் தருக.

- வெஹறகல அவலோகிதேஸ்வர போதிச்சத்துவ உருவச் சிலை
- பதுளை உலோகப் புத்தர் சிலை

190. பொலன்னறுவைக்காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட இந்துக்கடவுளர் சிலைகள் எவை?

- சிவன்
- நடராஜர்
- பார்வதி
- சூரியன்

191. ஆரம்பகாலத்தில் சித்திரக்கலை இருந்தமைக்கான சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்ட குகைகள் எவை?

- சிதுல்பவ்வ.
- ஹிந்த ஹல.
- கரம்பகல.
- வெஸ்ஸகிரிய.

192. சீகிரியாச் சித்திரங்கள் எத்தனையாம் நூற்றாண்டுக்குரியது?

கி – பி 5 ஆம் நூற்றாண்டுக்குரியவை

193. சீகிரியாவின் கிழக்கு மேற்குப் பகுதிகளில் கற்குடைவுகள் இரண்டினுள் வரையப்பட்டுள்ள ஓவியங்களில் காணக் கூடியவை எவை?

தாமரை, அல்லி, செண்பகம் ஆகிய மலர்களைச் சூடியும் கைகளில் ஏந்திய பெண் உருவங்களைக் காணமுடிகின்றது.

இச்சித்திரங்களில் மஞ்சள், கபிலம், சிவப்பு, நீல நிறங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளது.

194. பொலன்னறுவைக்கால சித்திரங்களுக்கு உதாரணங்கள் தருக?

திம்புலாகல மார வீதிய.

புள்ளி கொட.

கல்விகாரை.

திவங்கசிலை ஆகியவற்றில் காணப்படும் ஓவியங்கள்.

# அலகு - 2

# கண்டி இராசதானி

1) மலைகளாலும் ஆறுகளாலும் காடுகளாலும் சூழப்பட்ட இயற்கையான இராட்சியம் எது?

- கண்டி இராட்சியம்

2) கண்டி இராட்சியத்தின் ஆரம்பகாலப் பிரிவுகளைக் குறிப்பிடுக?

- சதுருவான – உடுநுவர, உடபலத்த
- பலவிட்ட – ஹரிஸ்பத்துவ
- மாத்தறை – மாத்தளை
- தும்பறை – தும்பறை
- சமகதுன்ரட்ட – வலப்பன ஹேவாஹெட்ட

3) கண்டி இராட்சியத்துக்குரிய மறுபெயர்களைக் குறிப்பிடுக?

- பஞ்சமலை நாடு
- செங்கடல
- மலைநாடு
- மஹாநுவர
- மலையக அரசு
- மலையகத் தலைநகர்
- கண்டி
- ஸ்ரீவர்த்தன புர

4) கண்டி இராட்சியம் தோற்றம் பெற்ற காலம் யாது?

- 15 ஆம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் ஆறாம்பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் தோற்றம் பெற்றதாகும்.

5) கோட்டை இராட்சியத்தின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த கண்டி இராட்சியத்தை தனியாக்கும் பொருட்டு கிளர்ச்சி செய்த இளவரசன் யார்?

- ஜோதிய

6) கண்டி இராட்சியத்தின் தலைநகர் எது?

- செங்கடகல

7) கோட்டை இராட்சியத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்து கண்டி இராட்சியத்தை தோற்றுவிப்பதில் வெற்றி கண்ட மன்னன் யார்?

- சேனாசம்பத விக்கிரமபாகு

8) கி.பி 1469 இல் சேனாசம்பத விக்கிரமபாகு எவ் இராட்சியத்திற்கெதிராக கிளர்ச்சி செய்தான்?

- கோட்டை

9) கண்டி இராட்சியத்திற்குட்பட்டிருந்த பிரதேசங்களைக் குறிப்பிடுக?

- கம்பளை
- பலவிட
- மாத்தளை
- சிதறுவன
- தெநுவர
- பன்சிய பத்துவ

10) கோட்டை இராட்சியத்தின் குறிக்கோள் யாது?

- கண்டி இராட்சியத்தை தன்னடிமைப்படுத்த வேண்டுமென்பதாகும்.

11) கண்டி இராட்சியம் தனது சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக எத்தனை வருடங்கள் போராட்டத்தினை மேற்கொண்டது?

- 125 வருடங்கள்

12) கோட்டை , சீதாவாக்கை இரண்டும் ஒன்றிணைந்த ஆண்டு எது?

- கி . பி 1540

13) கண்டி இராட்சியத்திற்கு அச்சுறுத்தலாக இருந்த இராட்சியம் எது?

- கோட்டை
- சீதாவாக்கை

14) கண்டி இராட்சியம், கோட்டை, சீதாவாக்கை இராட்சியங்களினால் எதிர்கொண்ட சவால்கள்?

- சீதாவாக்கை ஆட்சியாளர்கள் போர்த்துக்கீசரின் உதவியை நாடியமை.
- கோட்டை சீதாவாக்கை பலப்படுத்தப்பட்டமை.
- சீதாவாக்கை ஆட்சியாளர்கள் கோட்டை ஆட்சியாளர்களுடன் நல்லுறவை ஏற்படுத்தியமை.

15) மாயாதுன்னையின் மகன் யார்?

- முதலாம் இராஜசிங்கன்

16) இராஜசிங்கன் கண்டி இராட்சியத்தை ஆக்கிரமித்த ஆண்டு எது?

- கி . பி 1574 ஆம் ஆண்டு

17) பலனக் கணவாயை 1 ஆம் இராஜசிங்கன் கைப்பற்றிய ஆண்டு எது?

- கி . பி 1574 ஆம் ஆண்டு

18) சீதாவாக்கை படைகள் கண்டி இராட்சியத்தின் மீது படையெடுத்த ஆண்டு எது?

✪ கி.பி 1582

19) கரலியத்த பண்டாராவின் ஆட்சிக்காலம் யாது?

✪ கி.பி 1552 - 1582

20) கரலியத்த பண்டார போத்துக்கீசரிடம் தஞ்சமடைந்தமைக்கான காரணம்?

✪ சீதாவாக்கை ஆட்சியாளர்களினால் கண்டி இராட்சியம் கைப்பற்றப்படலாம் என்ற அச்சத்தினால் போத்துக் கேயரின் உதவியினை நாடுவதற்காக தஞ்சமடைந்தான்.

21) கரலியத்த பண்டாரவின் கத்தோலிக்க மதப்பெயர் யாது?

✪ தொன்யோன்

22) சீதாவாக்கையினை 1ஆம் இராஜசிங்கன் தன்னடிமைப் படுத்தி அதன் பிரதி நிதியாக நியமிக்கப்பட்டவர் யார்?

✪ வீரசுந்தர பண்டார

23) வீரசுந்தர பண்டார மீது சந்தேகம் கொண்டு அவனைக் கொலை செய்த மன்னன் யார்?

✪ முதலாம் இராஜசிங்கன்

24) சீதாவாக்கை அரசவம்சத்தைச் சேர்ந்த நிக்கப்பிட்டிய பண்டாராவை பிரதிநிதியாக நியமித்த மன்னன் யார்?

✪ முதலாம் இராஜசிங்கன்

25) சாமாந்த என்பதன் பொருள் யாது?

✪ பிரதேச ஆட்சியாளர்

26) கோட்டை இராச்சியம் முழுமையான சுயாட்சி பெறுவதற்கு முன் அதன் ஆட்சியாளன்?

✪ சாமாந்த

27) முதலாம் இராஜசிங்கன் கண்டி இராட்சிய மக்களினது வெறுப்புக்கு உள்ளானமைக்கான காரணங்களைத் தருக.

✪ சைவசமயத்தை தழுவியமை

✪ பௌத்த விகாரைகளையும் நூல்களையும் அழித்தமை

28) கரலியத்த பண்டாரவின் மகளின் பெயர் யாது?

- குசுமாசன தேவி

29) குசுமாசன தேவியின் கத்தோலிக்க மதப்பெயர் யாது?

- தொன் கத்தரீனா (டோனாகதறினா)

30) வீரசுந்தர பண்டாரவின் மகன் யார்?

- கோணப்பு பண்டார

31) கோணப்பு பண்டாரவின் கத்தோலிக்க மதப்பெயர் யாது?

- டொன்யுவான் ஒஸ்ரியா

32) கரலியத்த பண்டாரவின் மருமகன்?

- யமசிங்க பண்டார

33) யமசிங்க பண்டாரவின் கத்தோலிக்க மதப்பெயர் யாது?

- தொன் பிலிப்பு

34) 1 ஆம் இராஜசிங்கன் இறந்த ஆண்டு எது?

- 1593 இல் மூங்கில்சிராய் குற்றிய காயத்தால் இறந்தான்.

35) 1 ஆம் விமலதர்மசூரியனின் ஆட்சிக்காலம் யாது?

- கி.பி 1591 - 1604

36) கி .பி 1594 மலையகத்தின் மீது படையெடுத்து போத்துக்கீச தளபதி யார்?

- பேரோ லோபஸ் டி சூசா

37) பேரோ லோபஸ் டி சூசா தலைமையிலான படையை 1 ஆம் விமலதர்ம சூரியன் வழிமறித்துத் தாக்கிய இடம் எது?

- தந்துரே (1594 ஆம் ஆண்டு)

38) தந்துரேப்போர் இடம் பெற்ற ஆண்டு?

- கி.பி 1594

39) முதலாம் விமல தர்மசூரியன் ஆட்சியுரிமையினை உறுதிப் படுத்திக் கொண்ட விதத்தினைக் குறிப்பிடுக?

✪ சீதாவாக்கை மன்னன் முதலாம் இராஜசிங்கன் வீரசுந்தரபண்டாரவினை கொன்றதால் அச்சமடைந்த மகன் கோணப்பு பண்டாரன் போர்த்துக் கேயரைச் சரணடைந்து கத்தோலிக்க சமயத்தினைத் தழுவி தொன்யுவான் என்ற பெயரைத் தழுவிக்கொண்டு போத்துக்கேயருடன் இருந்த காலத்தில் போத்துக்கேயரின் யுத்த தந்திரோபாயங்களை அறிந்து கொண்டான். இவனது திறமையினை அறிந்து கொண்ட போத்துக்கேயர் முதலாம் இராஜ சிங்கனைத் தோற்கடிக்க அனுப்பிய படைக்குத் தலைமை தாங்கிச் சென்று கோணப்புபண்டாரன் 1592 இல் இராஜசிங்கனது படைகளை கனேதன்ன என்ற இடத்தில் தோற்கடித்தான் அதனைத் தொடர்ந்து யமசிங்க பண்டாரவைக் கொன்று கண்டிய அரசனானான். தனது ஆட்சியினை சட்டப்படியானதாக்க குசுமாசனதேவியைத் திருமணம் செய்து கொண்டு முதலாம் விமலதர்ம சூரியன் என்ற பெயரில் மலையக ஆட்சியாளன் ஆனான்.

40) தொன் ஜெரனிமேதா டி அசவேதுவின் தலைமையில் போத்துக்கேயர் கண்டி இராட்சியம் மீது படையெடுத்து வந்த ஆண்டு?

✪ கி.பி - 1602

41) பலனப் போர் இடம்பெற்ற ஆண்டு?

✪ கி.பி 1602 இல்

42) லஸ்கரின் படை என்பது?

✪ போத்துக்கேயரின் கீழ் பணியாற்றி உள்நாட்டு படைவீரர்களை லஸ்கரின் படை என அழைப்பர்.

43) முதலாம் விமலதர்ம சூரியனால் மேற்கொள்ளப்பட்ட பணிகள்?

✪ இரத்தினபுரி தெல்கமுவ விகாரையில் ஒழித்து வைக்கப்பட்டிருந்த புத்தரின் புதிய தந்ததாதுவினை கண்டியில் தான் கட்டிய தலதாமாளிகையில் வைத்தமை.

✪ பிக்குசாசனத்தை மேம்படுத்துவதற்காக மியான்மாறிலிருந்து பிக்குகளை வரவழைத்து உபசம்பதா சடங்கினை நடாத்தியமை.

✪ இலங்காதிலக விகாரை, கடலாதெனிய விகாரை, என்பவற்றை புனர்நிர்மாணம் செய்தமை.

✪ உள்நாட்டு கலாசாரத்தின் மத்திய நிலையமாக கண்டியினை மாற்றியமைத்தமை.

44) முதலாம் விமலதர்மசூரிய மன்னனின் முக்கியத்துவங்கள்?

- 1592 - 1604 வரை முதலாம் விமலதர்மசூரிய மன்னன் கண்டி இராட்சியத்தை ஆட்சி செய்தமை.
- கரலியத்த பண்டாரனுடைய மகள் டோனா கத்தரினாவை மணந்ததன் மூலம் கண்டி இராட்சியத்திற்கு சட்டபூர்வ அரசனானான்.
- டோனா கத்தறினாவை மணந்ததன் மூலம் கண்டி இராட்சியத்தில் புதியஅரச பரம்பரையோன்று தோற்றுவிக்கப்பட்டமை.
- இம்மன்னன் சீதாவாக்கை இராட்சியத்தின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த கண்டி இராட்சியத்தினை விடுவித்துக்கொண்டமை.
- போரத்துக்கேயரின் ஆதிக்கத்திற்கு எதிராக செற்பட்ட இவன் தந்துரேப் போரிலும் பலனப்போரிலும் போத்துக்கேயரைத் தோல்வி அடையச் செய்தமை.

45) செனரத் மன்னனின் ஆட்சிக்காலம்?

கி.பி 1604 - 1635

46) முதலாம் விமலதர்மசூரியனின் சகோதரன் யார்?

செனரத் மன்னன்

47) செனரத் மன்னன் போத்துக்கேயருடன் சமாதான ஒப்பந்தத்தை செய்து கொண்ட ஆண்டு எது?

கி.பி 1617 இல்

48) செனரத் மன்னனின் புதல்வர்களைக் குறிப்பிடுக?

- குமாரபால
- விஜயபால
- இராஜசிங்க

49) செனரத் மன்னனுடைய ஆட்சிக்காலத்தில் கண்டி இராட்சியம் புகழுடன் விளங்கியமைக்கான காரணம் யாது?

- ஏழு கோறளை, நான்கு கோறளை , மூன்று கோறளை, திரு கோணமலை ஆகிய பிரதேசங்களை கண்டி இராட்சியத்துடன் இணைத்துக் கொண்டமையால் புகழுடன் விளங்கியது எனலாம்.

50) இரண்டாம் இராஜசிங்கனின் ஆட்சிக்காலம்?

- கி.பி 1635 - 1687 வரை

51) செனரத் மலையகத்தை மூன்று புதல்வர்களுக்கு எவ்வாறு பகிர்ந்து கொடுத்தான்?

- கண்டி - இராஜசிங்கன்
- மாத்தளை - விஜயபால
- ஊவா - குமார சிங்கன்

52) போத்துக்கேயரை இலங்கையிலிருந்து விரட்ட வேண்டும் என்ற நோக்கில் ஆட்சியினை மேற்கொண்ட மன்னன்?

- இரண்டாம் இராஜசிங்கன்

53) ஒல்லாந்தருடன் இராஜசிங்கன் தொடர்பு கொண்ட ஆண்டு?

- கி.பி - 1636

53) கன்னோறுவப்போர் இடம்பெற்ற ஆண்டு எது?

- கி . பி 1638

54) இரண்டாம் இராஜசிங்க மன்னின் சாதனைகள்?

- கி .பி 1638 ஆம் ஆண்டு தந்தைக்குப் பதிலாக நடத்திச் சென்று ரந்தெனிவெலப் போரில் போத்துக்கேயப் படைகளை முறியடித்தமை.
- கி .பி 1638 இல் போத்துக்கேயருக்கு எதிராக உதவி பெறும் பொருட்டு வெஸ்ரவெல் உடன்படிக்கையினை எழுதிக் கொண்டமை.
- போத்துக்கேயரிடமிருந்துத பகுதிகளை கண்டி இராட்சியத்துடன் இணைத்தமை.
- இரண்டாம் இராஜசிங்கன் கண்டி இராட்சியத்தின் ஆளுகைப் பிரதேசத்தை விஸ்தரித்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டமை.
- போர்த்துக்கேயர் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த பெரும் பிரதேசத்தை இம்மன்னன் கண்டி இராட்சியத்துடன் இணைத்துக் கொண்டமை. இம்மன்னனுடைய காலத்தில் தியோ கு - த - மேலோ கஸ்ரோ எனும் போர்த்துக்கேய கப்டன் ஜெனரல் 1638 ஆம் ஆண்டில்

  பெரும் படையுடன் கண்டி மீது ஆக்கிரமிப்பை மேற்கொண்டபோது 2 ஆம் இராஜசிங்கன் கன்னோருவ என்ற இடத்தில் பெரும் படையுடன் சுற்றி வளைத்து போர்த்துக்கேயரை படுதோல்வி அடையச் செய்தமை.
- கண்டி இராட்சியத்தை நீண்டகாலமாக ஆட்சி செய்த அரசன் இவனாவான்.

55) மகா அஸ்தான என அழைக்கப்பட்ட மன்னன்?

✪ 2 ஆம் இராஜசிங்கன்

56) இரண்டாம் விமல தர்மசூரியனின் ஆட்சிக்காலம் யாது?

✪ கி.பி 1687 - 1707

57) இரண்டாம் இராஜசிங்கனின் மகன் யார்?

✪ இரண்டாம் விமலதர்ம சூரியன்

58) மலையக ஆட்சியாளர்களுடன் இயற்கையாகவே சமாதானப் பிரியனாக காணப்பட்ட மன்னன் யார்?

✪ 2 ஆம் விமலதர்ம சூரியன்

59) இரண்டாம் விமலதர்மசூரியன் இறந்த ஆண்டு?

✪ கி.பி 1707 ஜீன் மாதம் 4 ஆம் திகதி

60) மலையக மன்னர்களுள் மியான்மாரிலிருந்து 33 பௌத்த பிக்குகளை வரவழைத்து உபசம்பதா விழாவினை நடாததிய மன்னன்?

✪ இரண்டாம் விமலதர்ம சூரியன்

61. தலதா மாளிகையினை மும்மாடிகளாக விஸ்தரித்த மன்னன்?

✪ இரண்டாம் விமலதர்ம சூரியன்

62) இரண்டாம் விமல தர்ம சூரியனின் இளைய மகன் யார்?

✪ ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கன்

63) ஸ்ரீவீரபராக்கிரம நரேந்திர சிங்கனின் ஆட்சிக்காலம் யாது?

✪ கி.பி 1707 - 1739 வரை

64) தென்னிந்திய நாயக்கவம்ச இளவரசியினை திருமணம் செய்த மன்னன்?

✪ ஸ்ரீவீரபராக்கிரம நரேந்திர சிங்கன்

65) மலையகத்தினை ஆட்சி செய்த இறுதிச் சிங்கள மன்னன் யார்?

✪ ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கன்

66) நாயக்கவம்சம் இலங்கையில் ஊடுருவுவதற்கு காரணமாய் இருந்த மன்னன் யார்?

✪ ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கன்

67) ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கன் இறந்த ஆண்டு யாது?

- கி.பி 1739

68) ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கனின் மனைவியின் சகோதரன் யார்?

- ஸ்ரீ விஜயராஜசிங்கன்

69) கண்டி இராட்சியத்தை ஆட்சி செய்த நாயக்க வம்ச மன்னர்களைக் குறிப்பிடுக?

- ஸ்ரீ விஜயராஜசிங்கன் (1739 - 1747)
- கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் (1747 - 1782)
- இராஜாதி இராஜசிங்க (1782 - 1798)
- ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் (1798 - 1815)

69) நாயக்க மன்னர்களின் சமயம்?

- சைவம்

70) நாயக்க மன்னர்களின் செயற்பாடுகள்?

- பௌத்த சிங்கள மக்களின் நன்மதிப்பினைப் பெறும் பொருட்டு சிங்கள நூல்களைக் கற்றதோடு பௌத்த சமயத்தையும் தழுவியமை, விகாரைகளை அமைத்தமை.

71) ஸ்ரீ விஜயராஜசிங்கனின் ஆட்சிக்காலம் யாது?

- கி.பி 1739 - 1747

72) ஸ்ரீ வஜயராஜசிங்கனின் அரசசபையின் கொள்கையில் ஏற்படுத்திக் கொண்ட மாற்றங்களைக் குறிப்பிடுக?

- தனது ஆட்சியினை உறுதி செய்து கொள்ள வேண்டுமாயின் பிக்குகளினதும் பிரதானிகளினதும் நல்லொழுக்கத்தை பெற வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டமை.
- அரசனுக்கு சார்பானவர்களுக்கு முக்கிய உதவிகளை வழங்கியமை.

உதாரணம் : லெங்கே திசாவைக்கு நான்கு கோறளை திசாவைப் பதவியினை வழங்கியமை, வெலிவிட்ட சரணங்கதேரருக்கு அரச குரு பதவியினை வழங்கியமை.

73) கி.பி 1740 இல் வெலிவிட்ட பிக்குவின் வேண்டுகோளின்படி உபசம்பதா விழாவினை நடாத்திய மன்னன்?

- ஸ்ரீ விஜயராஜசிங்கன்

74) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் ஆட்சிக்காலம் யாது ?

- கி . பி 1747 - 1782

75) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் ஆட்சியேற்ற ஆண்டு யாது?

- கி . பி 1750

76) ஸ்ரீ விஜயராஜசிங்கனின் மரணத்தின் பின் மலையகத்தை ஆட்சி செய்த மன்னன் யார்?

- கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்

77) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் ஆட்சி ஏற்றபோது அவனது வயது யாது?

- பதினாறு

78) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் தந்தையின் பெயர் யாது?

- நரனப்பா

79) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் பணிகளை குறிப்பிடுக?

- உபசம்பதா சடங்கை கி .பி 1783 இல் நடாத்தியமை.
- பௌத்த சடங்குகளை மேற்கொண்டமை

80) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் ஆட்சிக்காலத்தில் பிரதானிகளின் தலைவர்?

- எகலப்பொல

81) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் பௌத்த மதத்திற்கு ஆற்றிய பணிகள்?

- தலதா பெரஹறாவுடன் தேவாலய பெரஹறாவையும் முன்னேற்றியமை.
- பழைய இராசதானிகளில்சிதைவுற்றிருந்த விகாரைகளை திருத்தியமைத்தமை.
- வெலிவிற்ற சரணங்கர் என்ற பௌத்த பிக்குவின் சமய கல்வி பணிகளுக்கு ஆதரவு வழங்கினான்.
- விகாரைகளைக் கொண்டு நடாத்தவதற்கு நிலபுலன்களை அளித்தான்.

82) ஒல்லாந்தரை இலங்கையிலிருந்து விரட்ட பிரித்தானியரின் உதவியை நாடிய மன்னன்?

- கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்

83) கி .பி 1762 இல் இடம் பெற்ற கிளர்ச்சியினை அடக்க வந்த குழு?

- ஜோன்பைபஸ் குழு

**84) ஒல்லாந்தர் கண்டி இராட்சியத்தை ஆக்கிரமிப்பு செய்த ஆண்டு எது?**

- கி .பி 1765

**85) ஒல்லாந்தர் படை கண்டியைக் கைப்பற்ற முடியாமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக?**

- கடும் மழை
- தொற்று நோய் பரவியமை
- உணவுத் தட்டுப்பாடு
- மலையகப் படைகளின் கொரில்லாத் தாக்குதல் முறை

**86) கி .பி 1766 கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் இடம்பெற்ற ஒப்பந்தத்தின் முக்கியம்சங்கள்?**

- ஒரு பகுதிக்கு கிழக்கிந்திய வர்த்தகசங்கமும் மற்றைய பகுதிக்கு அரசனும் அமைச்சரவையும் கைச்சாத்திட்டு சமாதானமாகச் செயற்படல்.
- யாப்பாப்பட்டுண (யாழ்ப்பாணம்) மன்னார் , கொழும்பு, காலி, கோறளை, புளியந்துவ, திருகோணமலையினைச் சூழவுள்ள பிரதேசதம் என்பன ஒல்லாந்தருக்குரிய பிரதேசமாக ஏற்றுக்கொள்ளப்படல்.
- கடற்கரையிலிருந்து நான்கு மைல்களுக்கு ஒல்லாந்தருடைய பிரதேசமாகக் கருதிச் செயற்படல்.

**87) கி . பி 1766 இல் நடைபெற்ற ஒப்பந்தத்தினால் ஏற்பட்ட விளைவுகள்?**

- இந்த உடன்படிக்கை ஒல்லாந்தரின் அதிகாரம் வளர்ச்சியடைவதற்கு நல்ல சந்தர்ப்பமாக அமைந்தது.
- கண்டி தனது இராட்சியத்திற்குரிய அனைத்துத் துறைமுகங்களையும் இழந்ததால் வெளிநாட்டு வர்த்தகம் தேவைப்பட்டமை.
- உப்பைப் பெறுவதற்கு வெளிநாட்டின் உதவி தேவைப்பட்டமை.
- ஒல்லாந்தரை விரட்ட வேண்டும் என்பது அரசனுக்கும் பிரித்தானியர் களுக்கும் தெளிவானவை.
- பிரதானிகளுக்கு வர்த்தகத்தின் மூலம் கிடைத்த இலாபம் இல்லாமல் போனமை.

## இராஜாதி இராஜசிங்கன்

88) இராஜாதி இராஜசிங்கனின் ஆட்சிக்காலம்?

- கி.பி 1782 - 1798

89) கீர்த்தி இராஜசிங்கனது சகோதரன் யார்?

- இராஜாதி இராஜசிங்கன்

90) ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றிய போது மலையகத்தில் ஆட்சி செய்த மன்னன்?

- இராஜாதி இராஜசிங்கன்

91) இராஜாதி இராஜசிங்கன் மரணமடைந்த ஆண்டு எது?

- 1798

92) மலையகத்தை ஆட்சி செய்த கொடூரமான ஆட்சியாளன் யார்?

- ஶ்ரீ விக்கிரம இராஜசிங்கன்.

93) ஶ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் ஆட்சிக்காலம் யாது?

- கி.பி 1798 - 1815

94) கன்னசாமி (கண்ணுசாமி) என்ற பெயருடைய நாயக்க வம்ச அரசன் யார்?

- ஶ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

95) ஶ்ரீ விக்கிரம இராஜசிங்கனை கொலை செய்ய சதித் திட்டம் தீட்டியவர் யார்?

- பிலிமத்தலாவ

96) கண்டி மீது பிரட்ரிக்நோத் படையெடுத்த ஆண்டு எது?

- கி.பி 1803

97) பிரட்ரிக்நோர்த்தின் படையெடுப்பு தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்?

- கண்டி இராட்சியத்தின் புவியியல் பின்னணி பற்றி விளங்கிக் கொள்ளாமை.
- கண்டிய மன்னர்களின் கொரில்லாத் தாக்குதல் முறை.
- மன்னனுக்கு மக்கள் விசுவாசமாகச் செயற்பட்டமை.
- பிரிட்ரிக் நோர்த்தின் படைகள் நோய்களால் பாதிக்கப்பட்டமை.
- பருவக்காற்றுக்களின் செல்வாக்குகள்.

98) றொபோட் பிறவுண்றிக்கின் ஆட்சிக்காலம் யாது?

- கி.பி 1812 - 1820

99) றொபோட் பிறவுண்றிக்கினால் மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பு வெற்றியடைந்தமைக்கான காரணங்கள்?

- ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனை மலை நாட்டு மக்கள் வெறுத்தமை.
- ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் கொடுமைகளிலிருந்து விடுபட மலையக மக்கள் ஆங்கிலேயரின் உதவியை நாடியமை.
- எகலப்பொலவின் வழிகாட்டுதல் ஆங்கிலேயருக்கு கிடைக்கப் பெற்றமை.
- மொல்லிக்கொட எதிரப்பைக்காட்டாது பிரித்தானியர் பக்கம் சார்ந்தமை.

100) பிரித்தானியர் கண்டியினைக் கைப்பற்றிய ஆண்டு எது?

- கி.பி 1815

101) கண்டிய ஒப்பந்தம் எழுதப்பட்ட ஆண்டு எது?

- கி. பி 1815

102) கண்டிய ஒப்பந்தம் என்பது?

- கி.பி 1815 இல் மார்ச் 2 ஆம் திகதி கண்டி கொலு மண்டபத்தில வைத்து ஆளுனர் றொபோட் பிறவுண்றிக்கும் கண்டிய பிரதானிகளுக்கும் இடையில் மகுள் மடுவ மண்டபத்தில் எழுதப்பட்ட ஒப்பந்தமே கண்டிய ஒப்பந்தம் ஆகும்.

103) கண்டி நிர்வாக முறையில் மன்னனுக்கு வழங்கப்பட்ட இலட்சணங்கள்?

- கண்டி இராட்சியத்தின் ஆட்சி முறைக்கு அமைய நாட்டின் அனைத்து துறைகளினதும் அதிபதி மன்னனாவான். அவன் இலங்கேஸ்வர, திரீசிங்கள ஆதிஸ்வர போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டமை.
- நாட்டின் அனைத்து நிலங்களும் மன்னனுக்குரியதாக கருதப்பட்டபடியால் பூபதி எனவும் அழைக்கப்பட்டான்.

104) கண்டி இராதானி காலத்து பொருளாதார நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிடுக?

- சுய தேவையினை பூர்த்தி செய்யும் விவசாயப் பொருளாதாரமே நிலவியது.
- மழை நீரைக் கொண்டே நெல் மலைச்சரிவுகளில் படிமுறைச் செய்கையாக மேற்கொள்ளப்பட்டது.
- நெற் செய்கையுடன் பயிர்ச் செய்கையும் மேற்கொள்ளப்பட்டு வந்தது.
- குரக்கன், இறுங்கு, எள், திணை ஆகிய பயிர்கள் சேனைகளில் பயிரிடப்பட்டன.

- வீட்டுத்தோட்டத்தில் பலாக்காய், ஈரப்பலாக்காய், கிழங்கு வகைகள், மரக்கறிகள, பழவகைகள், பாக்கு , மிளகு, ஏலம், சாதிக்காய், கராம்பு போன்றன பயிரிடப்பட்டன.
- பாலைப் பெற்றுக்கொள்வதற்கு, விவசாயம், போக்குவரத்து என்பவற்றுக்காக மாடுகள் வளர்க்கப்பட்டது.

105) கண்டி இராதானி காலத்து வர்த்தக நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிடுக?

- உள்நாட்டு , வெளிநாட்டு வர்த்தகம் சிறப்பிடம் பெற்றிருந்தது.
- கரையோரப்பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்பட்டபொருட்கள் மலையகப் பிரதேசங்களிலும் விற்பனை செய்யப்பட்டது.
- மலையகப் பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் கரையோரப் பிரதேசங்களிலும் விற்பனை செய்யப்பட்டது.
- வர்த்தகப் பரிமாற்றத்தின் போது நாணயப் பரிமாற்றம் மேற் கொள்ளப்பட்டது.
- பண்டமாற்று முறையிலும் வர்த்தகம் இடம் பெற்றது. கண்டி இராட்சியத்தில் வெளிநாட்டு வியாபாரம் அரசனின் ஏகபோக உரிமையாக இருந்நதமை.
- மலைநாட்டிற்கும், தாழ்நிலப்பிரதேசங்களுக்குமிடையே அமைக்கப்பட்ட கடவைகளின் ஊடாக வர்த்தகப் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டது.

106) கடவை எனபபடுவது.

கண்டி இராட்சிய எல்லைக்கும் ஒல்லாந்தரின் ஆட்சி எல்லைக்கும் இடையில் காணப்பட்ட காவல் நிலையங்கள் கடவை என அழைக்கப்பட்டது.

107) கண்டி இராட்சிய காலத்தில் பண்டமாற்றுச் செய்யப்பட்ட வர்த்தகப் பொருட்களில் ஏற்றுமதிப் பொருட்களும் விலங்குகளும் எவை?

கறுவா, பாக்கு, மிளகு, யானையும் யானைத்தந்தமும், முத்தும் மாணிக்கமும், வெற்றிலை ஏலமும் கராம்பும், சாதிக்காய், தேன் மெழுகு

108) கண்டி இராட்சிய காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களும் விலங்குகளும் எவை?

குதிரை, புடைவை, மட்பாண்டம், பீங்கான் பாத்திரங்கள், வாசனைப் பொருட்கள், கருவாடு

109) கண்டிக்காலத்தில் கைத்தொழில்துறை முன்னேற்றம் அடைந்திருந்தமைக் கான காரணங்கள்?

- மண்வெட்டி, அரிவாள், கோடரி என்பன பட்டறைகளில் உற்பத்தி செய்யப்பட்டமை.

- சட்டிகள், பானைகள், ஆடை அணிகள் உற்பத்தி செய்யப்பட்டமை.
- கைத்தொழிலுக்கு பிரசித்திபெற்ற ஊர்கள் காணப்பட்டமை.

| | | | |
|---|---|---|---|
| உதாரணம் : | இரும்பு | - | கொத்மலை |
| | தும்பறை | - | பாய் |
| | பித்தளை,செப்பு | - | கிரிவவுல |

- பரம்பரை பரம்பரையாக கைத்தொழிலில் ஈடுபட்டனர்
- செம்பு, பித்தளை, இரும்பு உலோகங்களினால் பல்வேறு பொருட்களையும் உபகரணங்களையும் உற்பத்தி செய்தனர்.
- உற்பத்திப் பொருட்களை மெருகேற்றுவதற்கு அரக்கை உற்பத்தி செய்தனர்.

110) கண்டிக்காலத்தில் காணப்பட்ட சமூக அமைப்பு எது?
- கிராம சமூக அமைப்பு

111) கண்டிக்காலத்து மக்களது வாழ்க்கை முறை அமைந்த விதம் யாது?
- தாய், தந்தை, பிள்ளை ஆகியோர் ஒரே குடும்பத்தில் வாழ்ந்தமையினால் பரஸ்பரம், ஒருவருக்கொருவர் உதவிக கொள்ளும் மனப்பாங்கு என்ற வகையில் வாழ்க்கை முறை காணப்பட்டிருந்தது.

112) கண்டிக்காலத்து மக்களிடையே ( சமூக அமைப்பிடையே ) காணப்பட்ட நற்பண்புகளைக் குறிப்பிடுக?
- மூத்தோரைக் கனம் பண்ணுதல்.
- தாய் தந்தையினரை பரிபாலித்தல்.
- பிள்ளைகளை நல்லொழுக்கம் உள்ளவராய் வளர்த்தமை.
- மது, சூது என்பவற்றிலிருந்து விலகியிருந்தமை.

113) கண்டிக்காலத்து கிரமிய மக்களது பணிகளைக் குறிப்பிடுக?
- பன்சாலைகளையும், குருமார்களையும் பேணிப்பாதுகாப்பது இவர்களது கடமையாகக் காணப்பட்டது.

114) கண்டிக்காலத்தில் பிக்குமார்கள் தொடர்பு கொண்ட பொறுப்புக்கள்?
- மக்களின் பிறப்பு, இறப்பு விடயங்களை கவனித்தல்
- குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்தல்
- நோய்களைக் கண்காணித்தல்

115) கண்டிக்காலத்தில் உயர் பதவியில் வகித்தோர் அணிந்த ஆடையணிகளைக் குறிப்பிடுக?

- சீருடைகள்
- தொப்பிகள்
- உடம்மைப் போர்த்தக் கூடிய ஆடைகள்
- கமிஸ்
- சட்டை
- துப்பட்டி

குறிப்பு : சிறிய அதிகாரிகள் இக்காலத்தில் ஆடைகள் அணியவில்லை.

116) கண்டிக்காலத்தில் உயர் குலத்தவர் அணிந்த ஆடைகளைக் குறிப்பிடுக?

- வெள்ளை அல்லது நீலத்திலான சட்டைகள், வெள்ளை உடை, கழுத்தைச் சுற்றி பட்டியினை அணிதல்.

117) கண்டிக்காலத்தில் வைபவங்களின் போது அணியப்பட்ட ஆடை அணிகலன் களைக் குறிப்பிடுக?

- சட்டை
- ஒசரி
- நெற்றிப்பட்டம்
- மாலை
- சிலம்பு
- வளையல்

118) கண்டியச் சமூகத்தில் நிலவிய இருவகைத் திருமணங்களையும் பெயரிடுக?

- தீக திருமணம்
- பின்ன திருமணம்

119) தீக திருமணம் என்பது ?

மணமகளை மணமகன் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று அங்கேயே வாழ்வது.

120) பின்ன திருமணம் என்பது?

மணமகன் மணமகளின் வீட்டிலேயே தங்கியிருந்து வாழ்வது.

121) கண்டிக்காலத்து கலைகளில் இடம் பெற்ற முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுக?

- புத்திரன் வாழ்க்கை வரலாறுக் கலைகளில் முக்கியத்துவம் பெற்றிருந்தமை.
- ஜாதகக் கதைகள் வரையப்பட்டமை.
- மாறனை வெல்லுதல், போதனை புரிதல், வெஸ்சந்தா, ஜாதகக்கதைகள் என்பன ஓவியர்களைக் கவர்ந்த தலைப்புக்களாக இருந்தன.
- கோட்டுச் சித்திரங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தமை. தாவரங்கள், பாறைகள், பயன்படுத்தி பல்வேறுபட்ட நிறங்களைப் பெற்றுக்கொண்டமை.
- அன்னச்சோடி, அன்னாசிப்பூ , தாமரைப்பூ , என்பவற்றை சித்திரங்களில் கூடுதலாகப் பயன்படுத்தப்பட்டமை.

122) கண்டிக்காலத்து ஓவியங்களைப் பார்வையிடக் கூடிய இடங்கள்?

- தம்புள்ளை
- ரதி தெகல தொரு
- மெதாவால விகாரை

123) கண்டிக்காலத்து ஓவியங்களைப் பார்வையிடக் கூடிய இடங்கள்?

- மரம், கல், யானை, தந்தம், பித்தளை, களிமண்

124) மரச்செதுக்கலுக்கு புகழ் பெற்ற இடம்?

- எம்பக்கே

125) கண்டிக்காலத்தில் செதுக்கல்கலை உன்னத நிலையினை அடைந்திருந்தது என்பதற்கான சான்றுகள்?

- பூ அலங்காரம், மிருக உருவங்கள், மனித உருவங்கள், மரத்தில் செதுக்கப்பட்டமை.
- யானைத்தந்தங்களில் சீப்பு வளையல் ஆபரணப் பெட்டி கதவுகளில் பதிக்கப்படிருந்த வேலைப்பாடுகளின் ஊடாக அறிந்து கொள்ளலாம்.
- உலோகங்களால் ஆக்கப்பட்ட விளக்குகள், கேத்தல், தாம்பாளம் என்பவற்றிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

126) டெம்பிட்ட விகாரையின் சிறப்பு ?

மரத்தூண்களை நட்டு அதன் மீது கட்டப்பட்ட விகாரை இதுவாகும். கறையான் போன்றவை மரத்தூண்களை அரித்து கட்டிடம் சிதைவுறுவதைத் தடுப்பதற்காக மண்ணிண் மீது கற்றுண்களை நட்டு அவற்றுடன் மரத் தூண்களைப் பொருத்தி இவ்விகாரை அமைக்கப்பட்டது.

127) கண்டிக்கால ஓவியக்கலையில் காணப்பட்ட சிறப்பான பண்புகள்?

- கற்றோர், கல்லாதோர் ஆகிய அனைவராலும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் ஓவியங்கள் வரையப்பட்டமை.
- சுவர்களைப் பகுதி பகுதியாகப் பிரித்து நீண்ட கதைகளைப் படிமுறையாக முன் வைக்கும் ஓவியங்கள் வரையப்பட்டமை. ஒவ்வொரு ஓவியச் சட்டகத்தின் கீழும் கதையம்சங்கள் சுருக்கமாகப் பெயரிடப்பட்டுள்ளமை.
- வெற்றிடங்களை நிரப்புவதற்கு மலர்கள் வரையப்பட்டமை.
- மனிதர்கள், பிராணிகள், தாவரங்கள், ஆகிய உருவங்களில் சரியான அளவீடு பேணப்படாமை.
- வெஸ்ஸந்தர, தேலபத்த, தஹகம்பொத ஆகிய ஜாதக நூல்களில் இருந்து பெறப்பட்ட ஜாதகக் கதைகளை ஓவியங்களாக வரைந்திருந்தமை.

128) கண்டிக்கால ஓவியங்களைப் பார்வையிடக் கூடிய இடங்கள்?

தம்புள்ள, தெகல் தொருவ, தலதா மாளிகை முல்கிரிகல

## கண்டியை ஆட்சி செய்த மன்னர்களும் அவர்களுடைய ஆட்சிக்காலங்களும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | சேனாசம்பத விக்கிரமபாகு | - | கி.பி 1469 | - | 1511 |
| 2. | ஜயவீரபண்டார | - | கி.பி 1511 | - | 1552 |
| 3. | கரலியத்தபண்டார | - | கி.பி 1552 | - | 1582 |
| 4. | முதலாம் இராஜசிங்கன் | - | கி.பி 1582 | - | 1591 |
| 5. | முதலாம் விமலதர்மசூரியன் | - | கி.பி 1591 | - | 1604 |
| 6. | செனரத் | - | கி.பி 1604 | - | 1635 |
| 7. | இரண்டாம் இராஜசிங்கன் | - | கி.பி 1635 | - | 1687 |
| 8. | இரண்டாம் விமல தர்ம சூரியன் | - | கி.பி 1687 | - | 1707 |
| 9. | ஸ்ரீவீரபராக்கிரம நரேந்திர சிங்க | - | கி.பி 1707 | - | 1739 |
| 10. | ஸ்ரீவிஜயராஜசிங்க | - | கி.பி 1739 | - | 1747 |
| 11. | கீர்த்தி ஸ்ரீஇராஜசிங்கன் | - | கி.பி 1747 | - | 1782 |
| 12. | இராஜாதி இராஜசிங்கன் | - | கி.பி 1782 | - | 1798 |
| 13. | ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் | - | கி.பி 1798 | - | 1815 |

# அலகு - 3

# ஐரோப்பிய மறுமலர்ச்சி

1) **மறுமலர்ச்சி தொடர்பான வரைவிலக்கணங்கள்?**

- மீண்டும் மலர்தல் என்பதாகும்.
- மறைந்து போன கிரேக்க உரோம பண்பாடு மீண்டும் மக்கள் விரும்பும் நிலையை அடைதல் மறுமலர்ச்சி ஆகும்.
- 14, 15, 16 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் பொருளாதாரம் சமயம் விஞ்ஞானம் இலக்கியம், கலை போன்ற துறைகளில் ஏற்பட்ட மலர்ச்சியை மறுமலர்ச்சி எனலாம்.

2) **மறுமலர்ச்சி தோன்றியமைக்கான உடனடிக் காரணம் யாது?**

- ஓட்டோமன் துருக்கியர்கள் கி .பி 1453 இல் கிழக்கு உரோமப்பேரரசான கொன்ஸ்தாந்தி நோபிளை கைப்பற்றியமை மறுமலர்ச்சி ஏற்படக் காரணமாகும்.

3) **மறுமலர்ச்சி தோற்றம் பெற்றமைக்கான பின்னணிச் சூழல்களை குறிப்பிடுக?**

- ஐரோப்பாவில் பல பல்கலைக்கழகங்கள் ஏற்பட்டமை.
- சித்திரம் இலக்கியம் ஊடாக தேசிய உணர்ச்சி வளர்ச்சி அடைந்தமை.
- விஞ்ஞான விசாரணைகளில் ஈடுபடும் உளப்பாங்கு மக்களிடையே வளர்ச்சி அடைந்தமை.
- செல்வம் படைத்த வர்த்தகங்கள் கல்வி வளர்ச்சிக்கு பல்வேறு உதவிகளை வழங்கியமை, கடல் வர்த்தகத்தினால் பெறப்பட்ட செல்வம் கல்வி வளர்ச்சிக்கு பயன்பட்டமை. .
- குடியேற்ற நாடுகள் பெருகியமை.
- பல பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டமை ஜேர்மனியரான கூட்டன்பேக் என்பவர் 1398-1468இல் அச்சியந்திரத்தைக் கண்டு பிடித்தமை.
- வர்த்தகம் வளர்ச்சியடைதலும் செல்வந்தர் தோற்றம் பெற்றமை.
- கல்வி மறுமலர்ச்சி ஏற்பட்டமை.

4) **மறுமலர்ச்சியின் பிரதான கட்டிடங்கள் எவை?**

- கலாசார மறுமலர்ச்சி
- விஞ்ஞான மறுமலர்ச்சி
- நாடுகாண் பயணங்கள்

5) மறுமலர்ச்சி அடைவதற்கு முன்மத்திய யுகத்திலிருந்த நிலமைகள் எவை?

- அதிகாரம் பரவலாக்கப்பட்டிருந்தமை.
- சுய தேவை பூர்த்தி பொருளாதார முறைமை.
- பரம்பரை பிரபுக்களின் தலைமை காணப்பட்டமை.
- சமய ஒற்றுமை காணப்பட்டமை.
- பாப்பரசரினதும் கிறிஸ்தவ திருச்சபைகளினதும் அதிகாரம் நிலவியமை.
- கல்வி கலைத்துறைகளில் சமயச் செல்வாக்கு காணப்பட்டமை.
- கல்வியில் சமயப் போதனை முதலிடம் பெற்றமை.

6) மறுமலர்ச்சியுகத்தின் பின் ஏற்பட்ட நிலைமைகளைக் குறிப்பிடுக?

- அரசியல் அதிகாரம் ஒருமுகப்படுத்தப்பட்டுக் காணப்பட்டமை.
- வர்த்தக விருத்தியும் பணப்புழக்கமும் அதிகரித்தமை.
- கற்ற மத்தியதரவர்க்கம் தோற்றம் பெற்றமை.
- சமய வேற்றுமைகள் ஏற்பட்டு மதப்பிரிவுகள் ஏற்பட்டமை.
- பாப்பரசரினதும், கிறிஸ்தவ திருச்சபையினதும் அதிகாரம் வீழ்ச்சியுற்றமை.
- கல்வி, சமயதுறைகளில் பௌதீகம் செல்வாக்கு பெற்றமை.
- பௌதீக வாழ்க்கைக்குத் தேவையான கணிதம், சமூகவியல், இயற்கையியல போன்ற விடயங்களைக் கற்றல்.

7) அதிகாரப்பரவலாக்கம் என்றால் என்ன?

- அதிகாரப்பரவலாக்கம் என்பது அரசாங்கத்திடம் காணப்படும் அதிகாரங்கள் பிரிந்து செல்லுதலே அதிகாரப்பரவலாக்கம் என அழைக்கப்படும்.

8) கொன்ஸ்தாந்தி நோபிள் நகரைக் துருக்கியர் கைப்பற்றியதால் ஐரோப்பியருக்கு ஏற்பட்ட பிரச்சினைகளைக் குறிப்பிடுக?

- துருக்கியர் ஐரோப்பாவுக்கு கொண்டுவரும் பொருட்களை மட்டுப்படுத்தியமை.
- உரிய நேரத்தில் பொருட்களை பெற்றுக்கொள்ளாததால் ஐரோப்பியர் பெரும் சிரமத்திற்கு உள்ளானமை
- ஐரோப்பிய உயர் நிலை குடிமக்களுக்கு தேவையான உயர்ரகப் பொருட்களை பெற்றுக் கொள்ள முடியாது போனமை.
- வர்த்தகத்தில் ஈடுபடமுடியாமையினால் இலாபம் குறைவடைந்தமை.

9) நாடுகாண்பயணங்களுக்கு வழிகோலிய காரணங்களைக் குறிப்பிடுக?

- 1453 இல் துருக்கியர்கள் கொன்ஸ்தாந்தி நோபிளைக் கைப்பற்றியமை.
- நாடுகளைக் கண்டுபிடிப்பதால் புகழ் ஏற்பட்டமை.
- ஐரோப்பிய நாடுகள் தமக்கென பொருளாதார வல்லமையினைக் கொண்டிருந்ததினால் தமக்கென குடியேற்றங்களை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டமை.
- பொருட்களை இலாபமாகப் பெறவேண்டும் என்ற நோக்கில் கடல் பயணத்தில் ஈடுபட்டமை.
- அரசர்கள் வழங்கிய ஆதரவுகள்.
- புதியவற்றைக் கண்டறியும் மக்களின் ஆவல்.
- முஸ்லிம்களது ஆதிக்கத்தினை குறைவடையச் செய்தல்.
- நீண்ட கடல் பயணத்திற்கு தேவையான கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டமை.

10) கொன்ஸ்தாந்தி நோபிளின் முக்கியத்துவத்தினைக் குறிப்பிடுக?

- கிழக்கு உரோமப் பேரரசின் தலைநகராக விளங்கியமை.
- கொன்ஸ்தாந்தி நோபிள் எனப்படும் பைசாந்திய நகரமாகும். இன்று இது இஸ்தான்புல் என அழைக்கப்படுகின்றது.
- பழைய கிரேக்க உரோமப்பண்பாட்டின் பெறுமதிவாய்ந்த நூல்களைக் கொண்ட ஐரோப்பாவின் பெரிய நூலகம் அமைந்திருந்தமை.
- ஆசியாவிலிருந்து ஐரோப்பாவுக்கு கொண்டுவரப்பட்ட பொருட்களின் வணிகப்பாதையின் மத்திய நிலையமாக இருந்தமை.

11) மறுமலர்ச்சிக்காலத்தில் பெரும் செல்வந்தர்கள் வாழ்ந்து வந்த நகரங்கள் எவை?

- புளோரன்ஸ்
- ஜெனீவா
- வெனிஸ்
- இத்தாலி
- ஸ்பானியா
- பீசா

12) இத்தாலியிலுள்ள பல்கலைக்கழகங்கள்?

- பொலஞ்ஞோ
- பாதுவா

13) பிரான்சில் உள்ள பல்கலைக்கழகம்?

- பாரிஸ்

14) இங்கிலாந்தில் உள்ள பல்கலைக்கழகம்?

- ஒக்ஸ்போர்ட்
- கேம்பிரிஜ்

15) இத்தாலியில் கல்வி மறுமலர்ச்சி ஏற்பட்டமைக்கான காரணங்கள்?
- கல்விக்கு பங்களிப்புச் செய்யக் கூடிய பணக்கார வர்க்கத்தினர் காணப்பட்டமை.
- கிரேக்க உரோம நாகரீகத்தின் மத்திய நிலையமாக திகழ்ந்தமையினால் அவற்றின் எச்சங்கள் காணப்பட்டமை.
- கொன்ஸ்தாந்தி நோபிளிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பழம் பெரும் நூல்கள் பல இத்தாலியில் கிடைக்கப்பெற்றமை.
- பல முக்கியமான பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டமை.

16) மறுமலர்ச்சிக்காலத்தில் கல்வியில் முன்னேற்றம் அடைந்த துறைகள்?
- இலக்கியம்
- சிற்பக்கலை
- சித்திரக்கலை
- கட்டிடக்கலை
- மானிடவியல்
- கிரேகக இலத்தீன் மொழிகள்

17) கல்வி மறுமலர்ச்சி காரணமாக புத்துயிர் பெற்ற மொழிகள்?
- இலத்தீன்
- கிரேக்கம்

18) ஐரோப்பா முழுவதும் இலக்கிய வளர்ச்சி எவ்வாறு ஏற்பட்டது?
- கிரேக்க, இலத்தீன் மொழிகளை அதிகமான மக்கள் வாசித்தமை.
- கிரேக்க, இலத்தீன் மொழிகளைக் கற்பது பெருமையாகக் கருதப்பட்டமை.
- சட்டங்களில் இலத்தீன் மொழி பயன்படுத்தப்பட்டமை.

## கலைகள் (ஓவியக்கலை - சிற்பக்கலை)

19) மறுமலர்ச்சிக் காலத்தில் கலைகள் எதனை உணர்த்துவதாக அமைந்திருந்தது?
- சமயககருத்துக்கள், ஒழுக்கக்கருத்து என்பவற்றுக்கு முதலிடம் கொடுப்பதற்கு பதிலாக மனிதத்துவத்தை வெளிப்படுத்தும் பௌதிக இரசனையுடைய கலைகள் முக்கியத்துவம் பெற்றன.
- 15 ஆம் நூற்றாண்டின் பின்னர் அரசர்களதும் அரசிகளினதும் மற்றும் செல்வந்த குடும்பங்களை சேர்ந்தவர்களது உருவங்கள் கலைகளில் முக்கிய இடம் பெற்றன.

20) மறுமலர்ச்சிக்கால கலைஞர்களுக்கு அனுசரணையாக இருந்த பாப்பரசர்கள் யாவர்?
- 5 ஆம் நிக்கலஸ்
- 6 ஆம் நிக்கலஸ்
- 2 ஆம் ஜீலியஸ்
- 10 லியோ

21) மறுமலர்ச்சிக்காலத்தில் கலைஞர்களின் மத்திய நகரமாக விளங்கிய நகரம் எது?
- இத்தாலி - புளோரன்ஸ்

22) புளோரன்ஸ் நகரின் கலை வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்தவர் யார்?

- மெடிசி குடும்பத்தார்.

23) புளோரன்ஸ் நகரில் வாழ்ந்த செல்வந்தரின் பெயர் யாது?

- லோரென்சோ டி .மெடிசி

24) புளோரன்ஸ் கல்வி நிலையமொன்றை ஆரம்பித்தவர் யார்?

- லோரென்ஸ் டி .மெடிசி

25) புளோரன்ஸ் நகரில் இருந்த கலைஞர்களைக் குறிப்பிடுக?

- லிப்லி
- ஷெல்லி
- ரபாயேல்
- லியனாடோடாவின்சி
- மைக்கல்
- ஆஞ்சலோ

## லியானாடோ டாவின்சி (1452 - 1519)

26) லியனாடோ டாவின்சி பிறந்த இடம் எது?

- இத்தாலி நாட்டிலுள்ள புளோரன்ஸ் நகரில் கி .பி 1452 இல் பிறந்தார்.

27) புளோரன்ஸ் நகரில் பிரசித்தி பெற்ற ஓவியர்?

- வெரோக்கியோ

28) லியனாடோ டாவின்சி சித்திரக் கலையினைப் பயின்ற ஆசிரியர்?

- வெரோக்கியோ

29) இயேசுவின் இறுதி இராப்போசனம் எனும் ஓவியத்தை வரைந்தவர் யார்?

- லியானாடோடாவின்சி

30) இயேசுவின் இறுதி இராப்போசனம் எனும் ஓவியத்தை வரைந்த இடம்?

- இத்தாலியிலுள்ள மிலானில் புனித மரியாள் கன்னியர் இல்லத்தின் சுவர் முழுவதும் வரையப்பட்டது.

31) லியானாடோ டாவின்சி வரையப்பட்ட மற்றுமொரு புகழ் பெற்ற ஓவியம் எது?

- மொனாலிசா

32) தாய்மையின் அன்பையும் இரக்கத்தையும் வெளிப்படுத்தும் ஓவியம் எது?

- மொனாலிசா

33) மொனலிசா ஓவியம் காணப்படும் இடம் எது?

- பிரான்சில் லூவர் தொல்பொருள் நிலையம்

## சிற்பக்கலை

34) பளிங்குக் கற்களால் உருவங்கள் அமைத்தல் சிறப்பிடம் பெற்ற காலம் எது?
- மறுமலர்ச்சிக்காலம்

35) மறுமலர்ச்சிக்கால சிற்பிகளைக் குறிப்பிடுக?
- மைக்கல் ஆஞ்சலோ, டௌனடெலோ

36) டேவிட் உருவச்சிலையை மிகவும் சிறப்பாக அமைத்தவர் யார்?
- மைக்கல் ஆஞ்சலோ

37) மைக்கல் ஆஞ்சலோவின் படைப்புக்களின் சிறப்புக்கள் யாவை?
- இயற்கையாகவும், உயிர்த் துடிப்புள்ளவையாகவும் காணப்பட்டமை

38) பீட்டா (பியெட்டா) எனும் ஓவியத்தின் எண்ணக்கரு யாது?
- உரோமில் புனித பேதுறு ஆலயத்திலுள்ள யேசுவையும் மரியாளையும் சித்தரிக்கும் சிற்பமாக இது மைக்கல் ஆஞ்சலோவால் வரையப்பட்டது.

39) புனித ஜோர்ஜின் உருவத்தினை வரைந்தவர் யார்?
- டொனெடெலோ

40) டேவிட் சிலையினை அமைத்தவர் யார்?
- டொனெடெலோ

## கட்டிடக்கலை

41) மறுமலர்ச்சிக்காலத்திலிருந்த் கட்டிடக்கலைஞர்களைக் குறிப்பிடுக?
- பிரமன்தே
- ரபாயேல்
- புருனலேச்சி
- லியானாடோ டாவின்சி
- மைக்கல்
- ஆஞ்சலோ

42) மறுமலர்ச்சிக்கால கட்டிடக்கலை வளர்ச்சியினை காட்டும் கட்டிடங்கள்?
- உரோமபுரியிலுள்ள புனித பேரு ஆலயம்
- புளோறின் நகரிலுள்ள நூலகக்கட்டிடம்
- மெடிசின் கல்லறை
- மாளிகைகள்
- சுகபோக மாளிகைகள்

43) மெடிசின் கல்லறையினை அமைத்தவர்?

- மைக்கல் ஆஞ்சலோ

**Note :**

15 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் அனைத்துக் கலைகளினதும் பொற்காலம் என்று கூறப்படுகின்றது.

44) மானிடவாதத்தின் கருத்து யாது?

- கடவுளை விடவும் மனிதன் மேலானவன் என்பதே மானிட வாதத்தின் கருத்தாகும்.

45) மத்தியகாலத்தில் மானிடவாதத்தின் கருத்து யாது?

- கடவுள் உயர்வானவராக கருதப்பட்டார், மனிதன் பாவியாகக் கருதப்பட்டான்.

46) மனிதனுடைய படைப்புக்கள் பிரபல்யம் அடைந்த காலம்?

- மறுமலர்ச்சி

47) மறுமலர்ச்சிக்காலத்தில் கல்விவளர்ச்சியில் ஈடுபட்ட நபர்கள்?

- தாந்தே
- பெட்ராக்
- பொக்காசியோ
- மாக்கியவல்லி
- பிரான்சிஸ்பேர்க்
- இராஸ்மஸ்
- பிரான்சிஸ்
- ஜியோவானி
- நிக்கோலாய்
- தோமஸ் மூர்
- டெசிடேரியஸ்

48) மறுமலர்ச்சிக்காலத்தின் முக்கிய நூலாசிரியர்கள்?

- தாந்தே
- பெட்ராக்
- பொக்காசியோ
- மாக்கியவல்லி
- பிரான்சிஸ்கேபர்க்
- இராஸ்மஸ்
- பிரான்சிஸ்
- ஜியோவானி
- நிக்கோலாய்
- தோமஸ் மூர்
- டெசிடேரியல்

## தாந்தே 1265 – 1321

49) தாந்தே பிறந்த இடம் எது?

✪ இத்தாலி

50) கிரேக்க உரோம இலக்கியங்களின் முக்கியத்துவத்தினை எடுத்துக்கூறியவர்?

✪ தாந்தே

51) தாந்தேயின் சிறப்புக்களைக் கூறுக?

✪ கிரேக்க, இலத்தீன் மொழிகளை கற்ற அவர் அம்மொழிகளின் நூல்களை இத்தாலிய மொழியில் எடுத்தியம்பினார்.

✪ டிவினா கொமிடியா எனும் காவியம் அவர் எழுதிய நூல்களில் முக்கியமானதாகும்.

52) இலக்கியத்தின் தந்தை என இத்தாலியில் அழைக்கப்பட்டவர்?

✪ தாந்தே

## பிரான்சிஸ் பெட்ராக் ( 1304 - 1374)

53) இவரால் எழுதப்பட்ட நூல் எது?

✪ லோராவுக்கு எழுதப்பட்ட கவிதை

54) மானிடவியலின் தந்தை என அழைக்கப்பட்டவர்?

✪ பிரான்சிஸ் பெட்ராக்

## ஜியோவானி பொக்காஷியோ ( 1313 – 1375 )

55) இவர் பிறந்த இடம் எது?

✪ இத்தாலி

56) மானிடவாதத்திற்கு மதிப்பளித்த உயர்ந்த கவிஞராகவும் பண்டிதராகவும் விளங்கியவர் யார்?

✪ ஜியோவானி பொக்காஷியோ

57) இயற்கை, அன்பு , பெண் போன்றவற்றை தனது எழுத்துக்களின் தலைப்பாகக் கொண்டவர் யார்?

✪ ஜியோவானி பொக்காஷியோ

58) டீகெமரன் எனும் நூலை இத்தாலியில் மொழி பெயர்த்தவர் யார?

✪ ஜியோவானி பொக்காஷியோ

## நிக்கோலாய் மாக்கியவலி ( 1469 - 1527 )

59) இளவரசன் எனும் நூலை எழுதியவர் யார்?

✪ நிக்கோலாய் மாக்கியவலி

## தோமஸ் மூர் ( 1478 - 1535 )

60) இவருடைய இனம் ?

✪ ஆங்கிலேயர்

61) இவர் எழுதிய நூல் எது?

✪ யுடோப்பியா

## பிரான்சிஸ் பேகன் ( 1478 - 1535 )

62) பிரித்தானியா இராஜதந்திரியாக விளங்கியவர் ?

✪ பிரான்சிஸ் பேகன்

63) இங்கிலாந்தில் நீதிபதியாகவும், பாராளுமன்ற உறுப்பிராகவும் கடமையாற்றியவர் யார்?

✪ பிரான்சிஸ் பேகன்

64) ஆங்கில இலக்கிய எழுச்சியின் தாரகை என அழைக்கப்பட்டவர்?

✪ பிரான்சிஸ் பேகன்

## டெசிடேரியஸ் இராஸ்மஸ் ( 1466 - 1536 )

65) இவர் பிறந்த இடம் எது?

✪ ஒல்லாந்து

66) இவர் கல்வி பயின்ற பல்கலைக்கழகம்?

✪ பாரிஸ் ✪ ஒக்ஸ்போர்ட்

67) மூடர்களை பாராட்டுவதில் என்ற நூலை எழுதியவர் யார்?

✪ டெசிடேரியஸ் இராஜ்மஸ்

68) திருச்சபையின் ஊழல்களை இல்லாது ஒழிப்பதற்கான கருத்துக்களை கூறியவர் யார்?

✪ டெசிடேரியஸ் இராஜ்மஸ்

## விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள்

69) மறுமலர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களைக் குறிப்பிடுக?

- பூமி கோள வடிவானது எனக் கண்டு பிடிக்கப்பட்டமை.
- தொலைநோக்கி கண்டு பிடிக்கப்பட்டமை.
- ஈர்ப்பு விசை கண்டுபிடிக்கப்பட்டமை.
- திசையறி கருவி கண்டு பிடிக்கப்பட்டமை.
- அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்டமை.
- மனித உடலின் செயற்பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டமை.
- பூமி சூரியனைச் சுற்றுகின்ற செயற்பாடு கண்டு பிடிக்கப்பட்டமை

70) மறுமலர்ச்சிக் காலத்தில் பல்கலைக்கழகங்களில் எத்துறை தொடர்பான ஆய்வுகள் நடாத்தப்பட்டன?

- விஞ்ஞானம்
- கணிதம்
- வைத்தியம்
- வானியல்

71) மறுமலர்ச்சிக் காலத்தில் ஆராய்சிகளை மேற்கொண்ட அறிஞர்களைக் குறிப்பிடுக,

- நிக்கலஸ் கொப்பனிக்கஸ்
- கலிலியோ கலிலி
- ஜொஹன்னஸ் கெப்லர்
- ஐசாக் நியூட்டன்
- லியானாடோ டாவின்சி

## கலிலியோ கலிலி ( 1564 - 1642 )

72) இவர் பிறந்த இடம் ?

- இத்தாலியில் பீசாநகரில் பிறந்தார்

73) கல்வி கற்ற பல்கலைக்கழகம் எது?

- பீசாப் பல்கலைக்கழகம்

74) தொலைநோக்கியைக் கண்டுபிடித்தவர் யார்?

- கலிலியோ கலிலி

75) செயற்பாட்டு விஞ்ஞானத்தின் தந்தை என அழைக்கப்பட்டவர்?

- கலிலியோ கலிலி

76) கலிலியோ கலிலியை செயற்பாட்டின் தந்தை என அழைக்கப்பட்டமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக?

- சந்திரனில் மலைகளும் பெருங்குழிகளும் உள்ளன.
- சூரியனின் புள்ளிகள் உள்ளன

- சனிக்கோளைச் சுற்றி வளையங்கள் உள்ளன.
- வியாழனுக்கு துணைக்கோள்கள் உள்ளன.
- பூமி சூரியனைச் சுற்றி வருகின்றது என்பது தொடர்பான கருத்துக்களை தொலைநோக்கி மூலம் அவதானித்து செயற்பாட்டின் முக்கியத்துவத்தினை அறிமுகப்படுத்தியமையால் செயற்பாட்டின் தந்தை என அழைக்கப்பட்டார்.

## ஜொஹன்னஸ் கெப்லர் ( 1574 - 1630 )

77) இவர் பிறந்த இடம்?
- தெற்கு ஜேர்மனி

78) கொப்பனிக்கஸின் கருத்தை முன்னெடுத்துச் சென்றவர் யார்?
- ஜொஹன்ஸ் கெப்லர்

79) புவி உட்பட ஏனைய கோள்கள் அனைத்தும் நீள் வட்டப் பாதையில் சுற்றி வருகின்றது என்ற கருத்தை வெளிப்படுத்தியவர்?
- ஜொஹன்னஸ் கெப்லர்

## ஐசக் நியூட்டன் ( 1642 - 1727 )

80) இவர் பிறந்த இடம் எது?
- இங்கிலாந்து

81) சிறந்த நட்சத்திரவியலாளராக திகழ்ந்த விஞ்ஞானி யார்?
- ஐசாக் நியூட்டன்

82) உலகில் தோன்றிய சிறந்த விஞ்ஞானி யார்?
- ஐசாக் நியூட்டன்

83) புவியிர்ப்பு விசை தொடர்பான கருத்தை வெளியிட்டவர் யார்?
- நியூட்டன்

84) கலிலியோ கலியோவினால் ஆரம்பிக்கப்பட்ட நவீன விஞ்ஞானக் கொள்கையினை முன்னெடுக்துச் சென்றவர் யார்?
- ஐசாக் நியூட்டன்

## லியானாடோ டாவின்சி (1452 - 1519 )

85) இவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளைக் குறிப்பிடுக?
- வானியல், தாவரவியல் , உடலியல்

86) சிறந்த கட்டடக்கலைஞராகவும் பொறியியலாளராகவும் விளங்கியவர் யார்?
- லியனாடோ டாவின்சி

87) மறுமலர்ச்சிக்காலத்தில் மருத்துவத்துறைக்கு பணியாற்றியவர்கள்?
- ✪ பெரசல்சஸ்
- ✪ மைக்கல்
- ✪ சரவேஸஸ்
- ✪ வில்லியம் ஹார்வே

## பெரசல்சஸ் ( 1493 - 1547 )

88) இவர் பிறந்த இடம் எது?
- ✪ இங்கிலாந்து

89) நோய்க்கான காரணங்களையும் அதனைக் குணமாக்கும் வழிகளையும் கண்டுபிடித்தவர் யார்?
- ✪ பெரசல்சஸ்

## மைக்கல் சர்வேட்ஸ் ( 1511 - 1553)

90) இவர் பிறந்த இடம்?
- ✪ ஸ்பானியா

91) குருதிச் சுற்றோட்டத்தினைக் கண்டுபிடித்தவர் யார்?
- ✪ வில்லியம் ஹார்டீவே ( 1578 - 1657 )

92) ஐரோப்பாவில் தோன்றிய பேரரசுகளைக் குறிப்பிடுக?
- ✪ ஸ்பானியா
- ✪ இங்கிலாந்து
- ✪ ஜேர்மனை
- ✪ பிரான்டஸ்
- ✪ இத்தாலி

## மத சீர்திருத்தம்

93) திருச்சபைக்கு எதிராக செயற்பட்ட குழுவினர்?
- ✪ புரட்டஸ்தாந்தர்

94) திருச்சபைகளுக்கு எதிராக கருத்து வெளியிட்டவர்கள்?
- ✪ ஜோன் வைக்கிளிப் - இங்கிலாந்து
- ✪ இராஸ்மஸ் - பிரான்ஸ்

95) திருச்சபைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த இயக்கங்களுக்கு முன்னின்று செயற்பட்ட தலைவர்கள்?
- ✪ மாட்டின் லூதர்
- ✪ ஜோன் கல்வின்

96) மார்ட்டின் லூதர் பேராசிரியராக கடமையாற்றிய பல்கலைக்கழகம் எது?
விற்றன்பேர்க் பல்கலைக்கழகம்

# அலகு – 4

# நாடுகாண் பயணங்களும், ஐரோப்பியர் கீழைத் தேசங்களுக்கு வருகை தருதலும்.

1) நாடுகாண் பயணம என்பதால் விளங்கிக் கொள்வது ?

- நாடுகளை தேடிச் செல்லுதல் என்பதாகும் . ஐரோப்பிய இனத்தவர் புதிய கடல் வழிமுறைகளைக் கண்டறிந்து அதுவரை அறியப்படாத நாடுகளைக் கண்டுபிடித்தல் நாடுகாண் பயணங்களாகும்.

2.) மேற்கு நாடுகளுக்கும் கொன்ஸ்தாந்தி நோபிளுக்கும் இடையிலான தொடர்பை ஏற்படுத்தும் மூன்று வழிகளையும் குறிப்பிடுக?

- சீனாவிலிருந்து மத்திய ஆசியா வழியாக பாரசீகம் ஊடாக கொன்ஸ்தாந்தி நோபிள் நகரம்.
- இந்தியாவின் மேற்குக் கரையோரத்திலிருந்து அரபிக்கடல், ஏடன், செங்கடல் வழியாக கொன்ஸ்தாந்தி நோபிள் நகரம்.
- இந்தியாவிலிருந்து பாரசீகக்குடா மஸ்கட், ஒம்ஸ் பஸ்ரா, பக்தாத் வழியாக கொன்ஸ்தாந்திநோபிள் நகரம்.

3) நாடுகாண் பயணங்கள் ஆரம்பிக்க முன்னர் வர்த்தகத்தின் பெரும்பகுதி எக்கடலை சூழ்ந்து காணப்பட்டது?

மத்திய தரைக்கடலினை

4) மத்தியதரைக்கடலினை சூழ்ந்து காணப்பட்ட வர்த்தக நகரங்கள் எவை?

- வெனிஸ்
- ஜெனோவா
- அலெக்சாந்திரியா
- கொன்தாந்தி நோபிள் வர்த்தக நகரம்

5) நாடுகாண் பயணத்திற்கான உடனடிக் காரணம் யாது?

கொன்தாந்தி நோபிள் நகரம் துருக்கியரால் கி - பி 1453 இல் கைப்பற்றப் பட்டமை.

6) மறுமலர்ச்சிக் காலத்தில் புதிய பாதைகளைக் கண்டு பிடிப்பதில் விஞ்ஞான முன்னேற்றம் உதவிய வழிகள்?

- திசையறிகருவி போன்ற கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டமை.
- தொலமியின் வரைபடம் பழைய படங்கள் தொடர்பான கருத்து மாற்றம்

அடைந்ததனால் புவியைப்பற்றி சரியான கருத்தினை தெரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தமை.

- புவி கோள வடிவானது என்பது உறுதி செய்யப்பட்டமையால் ஐரோப்பாவிலிருந்து கிழக்காக வந்தால் ஆசியாவை அடையலாம் என்பது தெளிவாகியது.
- விஞ்ஞான மறுமலர்ச்சியினால் விஞ்ஞானிகளின் உதவியுடன் கப்பல் பிரயாணத்திற்கான பாரிய கப்பல்கள் கட்டப்பட்டமை.

7) **நாடுகாண் பயணங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள்?**

- கடலோடி ஹென்றி – போத்துக்கல்
- பேர்டினட் மகலன் – ஸ்பானியா
- இசபெலா –
- 7 ஆம் ஹென்றி – இங்கிலாந்து

8) **முதன் முதலில் நாடுகாண் பயணங்களில் ஈடுபட்டவர்கள் எந்நாட்டவர்?**

- போத்துக்கேயர்

9) **போத்துக்கல் நாடுகாண் பயணிகளுக்கு வழிகாட்டியவர் யார்?**

- கடலோடி ஹென்றி

10) **நாடுகாண் பயணங்களை மேற்கொள்வதற்காக கடலோடி ஹென்றியினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள்?**

- லிஸ்பன் என்ற இடத்தில் பயிங்சிப்பாடசாலையினை அமைத்து கடற்பிரயாணத்திற்கான பயிற்சியினை மேற்கொண்டமை.
- நவீன பிரயாண ஆய்வு முறை ஆய்வு செய்யப்பட்டமை.

11) **ஐரோப்பியர்கள் புதியவர்த்தகப் பாதையினைக் கண்டு பிடிப்பதற்கு உந்துதலாக இருந்த காரணிகளைக் குறிப்பிடுக?**

- முஸ்லிம்கள் கையிலிருந்த கீழைத்தேச வர்த்தகத்தைப் பெற்றுக் கொள்ளல்.
- இக்காலத்தில் பெஸ்டர் ஜோன் எனும் பேரரசின் கீழ் பிறந்த கிறிஸ்துவப் பேரரசு உள்ளது எனும் நம்பிக்கையில் அதனைச் தேடிச் செல்லல்
- முஸ்லிம்களைத் தோற்கடித்து அப்பிரதேசங்களில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புதல்.
- உலகத்தைப் பற்றி அறிந்து அதனை அநுபவரீதியாக உணர முயலுதல்
- போத்துக்கல், ஸ்பானியா, இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகள் கடலை அண்மித்து இருப்பதால் கடலில் பயணம் செய்ய அவர்கள் எளிதில் தூண்டப்பட்டமை.

12) நாடுகாண் பயணங்களில் ஈடுபட்ட நாடுகாண் பயணிகளின் பெயர்களைக் குறிப்பிடுக?

- பார்த்தலோமியஸ் டயஸ்
- வாஸ் கொடகாமா
- கப்ரால்
- கிறிஸ்தோபர் கொலம்பஸ்
- அமெரிக்கோ வெஸ்புஸி
- பேர்டினட் மகலன்

## பார்த்தலோமியஸ் டயஸ்

13) இவர் எவ் இனத்தைச் சேர்ந்தவர்?

- போத்துக்கல்

14) ஆபிரிக்காவின் தென்முனையை அடைந்தவர் யார்?

- பார்த்த லோமியஸ் டயஸ் - 1488

15) ஆபிரிக்காவின் தென்முனைக்கு புயல் முனை எனப் பெயரிட்டவர் யார்?

- பார்த்லோமியஸ் டயஸ்

16) ஆபிரிக்காவின் தென்முனைக்கு நன்னம்பிக்கை முனை என பெயரிட்டமைக்கா காரணம் யாது?

ஆபிரிக்காவின் தென்முனையை அடைந்து புயலில் சிக்குண்ட அவர்கள் அந்த இடத்திற்கு புயல் முனை என பெயரிட்டு மீண்டும் போர்த்துக்கலை அடைந்தனர். இது போர்த்துக்கேயர் பெற்ற பாரிய வெற்றியின் அடையாளம் எனக் கொண்டு போர்த்துக்கேய மன்னன் இதற்கு நன்னம்பிக்கை முனை எனபெயரிட்டான்

## வாஸ்கொடகாமா

17) 1498 இல் இந்தியாவின் கள்ளிக்கோட்டைத் துறை முகத்தினை வந்தடைந்த நாடுகாண் பயணி?

- வாஸ்கொடகாம

18) நாங்கள் வாசனைத்திரவியங்களையும் கிறிஸ்தவர்களையும் தேடி வந்தோம் எனக்கூறியவர் யார்?

- வாஸ்கொடகாம

## கப்ரால்

18) தென் அமெரிக்காவில் போத்துக்கேயர் தமது ஆதிக்கத்தினை நிலை நாட்ட காரணமாய் இருந்தவர் யார்?

- கப்ரால்

## கிறிஸ்டோபர் கொலம்பஸ்

19) இவர் எவ்வினத்தைச் சேர்ந்தவர்?

- ஸ்பானிய இனம்

20) பகமாஸ் தீவுக் கூட்டத்தில் ஸ்பனியோலா (கரிபியன் தீவு ) எனும் தீவில் தரையிறங்கியவர்?

- கொலம்பஸ்

21) அமெரிக்கா எனும் புதிய உலகினைக் கண்டு பிடித்தவர்?

- கொலம்பஸ்

22) அமெரிக்கோ வெஸ்புஸி எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

- ஸ்பானியா

23) அமெரிக்கோ வெஸ்புஸிக்கு பெருமை சேர்க்கும் வகையில் புதிய கண்டத்திற்கு வழங்கப்பட்ட பெயர்?

- அமெரிக்கா

## நாடுகாண் பயணங்களில் அக்கறை காட்டிய ஐரோப்பிய நாடுகள்

| நாடுகள் | ஆண்டு | பயணத்தை மேற்கொண்டோர் | கண்டுபிடிக்கப்பட்ட பிரதேசம |
|---|---|---|---|
| போத்துக்கல் | 1488 | பாரத்தலோமியஸ் டயஸ் | நன்னம்பிக்கை முனை |
| போத்துக்கல் | 1948 | வாஸ்கொடகாமா | இந்தியாவின் கள்ளிக்கோட்டை |
| போத்துக்கல் | 1500 | கப்ரால் | பிரேசில் |
| ஸ்பானியா | 1492 | கொலம்பஸ் | கரீபியன் தீவு |
| ஸ்பானியா | 1498 | அமெரிக்கோ வெஸ்புஷி | அமெரிக்கா |
| ஸ்பானியா | 1513 | வஸ்கோ நியுனெஸ் தபெல்போவா | பனாமா |
| ஸ்பானியா | 1519 | பேர்டினட் மகலன் | பிலிப்பைன்ஸ் தீவு |
| ஸ்பானியா | 1553 | பிரான்ஸ்சிஸ்கோ பிசாரோ | கேப் பிரிட்டன் |
| இங்கிலாந்து | 1497 | ஜோன் கபோட் | புனித லோறன்ஸ் |
| பிரான்ஸ் | 1535 | ஜெக்விஸ் | மிசிசிப்பி நதி |
| ஒல்லாந்து | 1609 | ஹென்றி ஹட்சன் | ஹட்சன் |
| பிரான்ஸ் | 1573 | தலாசலே | குவி பெக் |

## பேர்டினனட் மகலன்

24) பேர்டினட் மகலன் பிறந்த ஆண்டு ?

- கி - பி 1480 இல்

25) இவன் பிறந்த நாடு எது?

- போர்த்துக்கல்

26) இவரால் கண்டுபிடிக்கப்பட்ட தென் அமெரிக்காவின் தென்கரையில் அமைந்துள்ள பசுபிக் சமுத்திரத்தின் நுழைவாயிலான நீரிணையின் பெயர்?

- மகலன் நீரிணை

27) மகலன் உயிரிழந்தமைக்கான காரணம் ?

- பிலிப்பைன்ஸில் சுதேசிகளுடன் ஏற்பட்ட மோதலில் உயிரிழந்தான்

28) இவரால் கண்டு பிடிக்கப்பட்ட தீவு?

- பிலிப்பைன்ஸ் தீவு

29) கீழைத்தேசத்திற்கு வருகை தந்த ஐரோப்பிய இனங்களைக் குறிப்பிடுக?

| இனம் | | நாடு | | மத்திய நிலையம் |
|---|---|---|---|---|
| போத்துக்கேயர் | - | போத்துக்கல் | - | கோவா |
| ஒல்லாந்தர் | - | ஒல்லாந்து | - | பட்டேவியா |
| பிரான்ஸியர் | - | பிரான்சிஸ் | - | பாண்டிச்சேரி |
| பிரித்தானியர் | - | பிரித்தானியா | - | கல்கத்தா |

30) போத்துக்கீசர் இலங்கைக்கு வருகை தந்தமைக்கான நோக்கங்கள்?

- தமது மதமான உரோமன் கத்தோலிக்க மதத்தினைப் பரப்புதல்
- வர்த்தகத்தில் அதிகளவு இலாபத்தினைப் பெறுதல்.

31) முஸ்லிம்கள் தென்கிழக்காசிய நாடுகளில் பெற்றுக் கொண்ட வர்த்தகப் பொருட்கள்?

- ஏலம்
- கராம்பு
- சாதிக்காய்

32) இந்தியாவிலிருந்து பெறப்பட்ட பொருட்கள்?

- மிளகு
- இஞ்சி
- அபின்
- துணி
- அரிசி
- வைரம்
- தோல்
- பருத்தி

33) சீனாவிலிருந்து பெறப்பட்ட பொருட்களைக் குறிப்பிடுக?

- பட்டுத்துணி, தங்கம், தேயிலை, வெள்ளி

34) யப்பானிலிருந்து பெறப்பட்ட பொருள்?

- வெள்ளி

35) ஐரோப்பிய வர்த்தகத்திற்கு தடையேற்பட்டமைக்கான காரணம்?

கி - பி 1453 இல் கொன்ஸ்தாந்தி நோபிள் நகரத்தைக் கைப்பற்றியமையால் தரைமார்க்க வர்த்தகம் தடைப்பட்டமை.

36) கொன்ஸ்தாந்தி நோபிள் நகரத்தினை துருக்கியர் கைப்பற்ற காரணமாக அமைந்த விடயங்கள் எவை?

- முஸ்லிம்கள் பொருளாதாரரீயில் வலுவடைந்தமை.
- தமது அரசியல் பலத்தை விஸ்தரித்துக்கொண்டமை.

37) ஆசிய - ஐரோப்பிய வர்த்தகத்திற்கு இடைத்தரகர்களாக செயற்பட்டவர்கள் ?

- முஸ்லிம்கள்

38) ஐரோப்பியர் ஆசியாவுக்கு வருகை தந்ததன் நோக்கங்கள் எவை?

- ஆசியாவில் உற்பத்தி செய்யப்படும் வாசனைத்திரவியங்கள் உட்பட ஏனைய வர்த்தகப் பொருட்களைப் பெற்று ஐரோப்பாவுக்கு கொண்டு சென்று விற்று பொருளாதாரரீதியில் அதிக இலாபம் பெற்றுக்கொள்ளல்.
- முஸ்லீம்களின் கையிலிருந்த ஆசியாவின் வர்த்தக ஏகபோக உரிமையைத் தம் வசமாக்குதல்.
- ஆசிய நாடுகளில் தமது கிறிஸ்தவ மதத்தினைப் பரப்புதல்.
- ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார மாற்றங்கள்.

## போர்த்துக்கேயர் ஆசியாவுக்கு வருதல்

39) ஐரோப்பிய இனத்தவரில் முதல் முதலில் ஆசியாவுக்கு வருகை தந்த இனம் எது?

- போர்த்துக்கேயர்

40) 1498 ஆம் இந்தியாவின் கள்ளிக்கோட்டையினை அடைந்த போர்த்துக்கேய இனத்தவன்?

- வாஸ்கொடகாமா

41) ஆசியாவில் வர்த்தகத் தொடர்புகளை தொடர்ந்து வைத்துக்கொள்ள போர்த்துக்கேயர் மேற்கொண்ட நடவடிக்கைகள்?

- இந்தியாவின் கரையோர இராட்சியங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டமை.
- இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் கோட்டை இராட்சியத்துடன்

தொடர்புகளை மேற்கொண்டமை.

- போர்த்துக்கேயரின் கீழைத்தேய மத்திய நிலையமாக கோவாவை தெரிவு செய்து கொண்டமை.
- தென்கிழக்காசிய நாடுகளில் தமது ஆதிக்கத்தை மேற்கொண்டமை.

## ஒல்லாந்தரது வருகை

**42) கீழைத்தேசங்களுக்கு ஒல்லாந்தர் வருகை தந்தமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக?**

- தமது மதமான புரட்டஸ்தாந்து மதத்தினைப்பரப்புவதற்கு. வர்த்தகத்தில் அதிகளவு இலாபத்தினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கு.

**43) ஒல்லாந்தர் மலேசியாவில் இருந்து பெற்றுக்கொண்ட பொருட்களைக் குறிப்பிடுக?**

- மிளகு
- ஏலம்
- கராம்பு
- சாதிக்காய்
- இரத்தினக்கற்கள்
- முத்து
- யானை
- தந்தம்
- பீங்கான் பொருட்கள்
- துணிவகைகள்

**44) ஒல்லாந்தர் இலங்கை மீது கவனம் செலுத்தியமைக்கான காரணம் யாது?**

- கறுவா விளையும் நிலப்பரப்பு இலங்கையில் காணப்பட்டமை.

**45) கி . பி 1602 இல் மட்டக்களப்பிற்கு வருகை தந்த ஒல்லாந்த கடற்தளபதி யார்?**

- ஸ்பீல்பேகன்

**46) இலங்கையிலிருந்து போத்துக்கேயரை வெளியேற்ற வேண்டும் என்ற நோக்கில் மலையகத்தை ஆட்சி செய்த மன்னன்?**

- இரண்டாம் இராஜசிங்கன்

**47) ஒல்லாந்த வர்த்தகக் கம்பனி நிறுவப்பட்ட ஆண்டு?**

கி – பி 1602

**48) ஒல்லாந்தரின் கீழைத்தேய மத்திய நிலையமாக விளங்கிய இடம் எது?**

- பத்தேவியா – ஜாவா

## பிரித்தானியரினது வருகை

**49) இலங்கையை ஆட்சி புரிந்த மேலை நாட்டவர்கள் யாவர்?**

- போர்த்துக்கேயர் (கி.பி 1505 - 1658)
- ஒல்லாந்தர் (1658 - 1796)
- பிரித்தானியர் (1796 - 1948 பெப்ரவரி 4ஆம் திகதி வரை)

**50) இலங்கையில் பிரித்தானியர் தமது அதிகாரத்தை எவ்வாறு நிலைநாட்டினர் என்பதைக் குறிப்பிடுக.**

- 1796இல் இலங்கையின் கரையோரத்தினை கைப்பற்றி ஆட்சியை நிலைப்படுத்தினர்.
- 1802இல் இலங்கையின் கரையோரப்பகுதியை பிரித்தானியாவின் முடிக்குரிய குடியேற்ற நாடாக்கினர்.
- 1815இல் கண்டியைக் கைப்பற்றி ஆட்சியை நிலைப்படுத்தியமை.
- 1818இல் முதலாவது சுதந்திரக்கிளர்ச்சியை அடக்கி தமது அதிகாரத்தை உறுதிப்படுத்தினர்.

**51) பிரித்தானியர் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியினை இலங்கையில் நிறுவியமைக்கான காரணம்?**

கீழைத்தேச வர்த்தகத்தின் மூலம் ஒல்லாந்தர் அதிக இலாபம் ஈட்டுவதைக் கண்ட பிரித்தானியர் அவ் வியாபாரத்தினை தமதாக்கிக் கொள்ளும் எண்ணத்துடன் 1600ஆம் ஆண்டில் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியினை நிறுவினர்.

**52) பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றுவதற்கான காரணங்கள் யாவை?**

**I. இலங்கையின் அமைவிடம்**

- இலங்கை கீழைத்தேச வர்த்தகப் பாதையில் அமைந்திருப்பதோடு அதன் கிழக்குப் பகுதியில் திருகோணமலைத் துறைமுகம் இந்தியாவின் கரையோரத்தைப் பாதுகாக்கக் கூடியதாகவும் புயல்களின் போது கப்பல்களைப் பாதுகாக்கவும் நகர்த்தக் கூடியதாகவும் காணப்பட்டமை.

- வடகீழ பருவக்காற்றுக் காலங்களில் பெருந்தொகையான கப்பல்களை பாதுகாப்பாக நிறுத்தி வைக்கக் கூடிய திருகோணமலைத் துறைமுகம் இலங்கையில் காணப்பட்டமை.

- இந்தியாவில் ஆட்சியை அமைத்துக் கொள்வதில் பிரான்ஸியரு -டனான போட்டியிலிருந்து இந்து சமுத்திரக் கடலாதிக்கத்தை தமதாக்கிக் கொள்வதில் திருகோணமலைத் துறைமுகம் அவசியமாகக் காணப்பட்டமை.

**2. வியாபார முக்கியத்துவம்**

- ஐரோப்பாவுக்கு கொண்டு செல்லப்பட்ட கறுவாவில் இலங்கையின கறுவா முக்கியத்துவம் பெற்றிருந்தமை.
- கீழைத்தேச நாடுகளுடனான வர்த்தகத்தின் மூலம் போர்த்துக் கேயரும் ஒல்லாந்தரும் பெற்று வந்த இலாபத்தை பிரித்தானியர் தமதாக்கிக்கொள்வதில விருப்பம் கொண்டிருந்தமை.
- மிளகு, ஏலம், கராம்பு, முத்து, மாணிக்கம், யானைத்தந்தம் போன்ற வர்த்தகப் பொருட்கள் இலங்கையில் கிடைக்கப் பெற்றமை.

**3. குடியேற்றவாதக் கொள்கை**

பிரித்தானியாவின் எதிரி நாடான பிரான்ஸ, ஒல்லாந்தினைக் கைப்பற்றியமையினால் அதன் காலனித்துவ நாடான இலங்கையும் பிரான்ஸ் வசமாவதை தடுப்பதற்காகவும் இலங்கை மீது போர் தொடுத்தது.

## பிரான்சியர் வருகை

**52) பிரான்சியர் கீழைத்தேசங்களுக்கு வருகைதந்த காலப்பகுதி ?**

17 ஆம் நூற்றாண்டு

**53) பிரான்சியர் வர்த்தக களஞ்சியங்களை நிறுவிய இடங்கள்?**

பாண்டிச் சேரி
காரைக்கால்
சந்திரநாகூர்

# அலகு -5

# இலங்கையின் கரையோரப் பிரதேசம் போர்த்துக்கேயரின் ஆதிக்கத்திற்குட்படல்

1) கீழைத்தேசத்திற்கு வருகை தந்த ஐரோப்பிய இனங்களைக் குறிப்பிடுக?

- போத்துக்கேயர் - போத்துக்கல் - கோவா
- ஒல்லாந்தர் - ஒல்லாந்து - பட்டேவியா
- பிரான்ஸியர் - பிரான்ஸ் - பாண்டிச்சேரி
- பிரித்தானியர் - பிரித்தானியா - கல்கத்தா

2) போத்துக்கீசர் இலங்கைக்கு வருகை தந்தமைக்கான நோக்கங்கள்?

- தமது மதமான உரோமன் கத்தோலிக்க மதத்தினைப் பரப்புதல்
- வர்த்தகத்தில் அதிகளவு இலாபத்தினைப் பெறுதல்.

3) இலங்கையில் சிறப்பாக விளைந்த வர்த்தகப் பொருள் எது?

- கறுவா

4) இலங்கையைப் போர்த்துக்கேயர் எப்பெயர் கொண்டு அழைத்தனர்?

- செய்லான்

5) இந்தியாவின் கள்ளிக்கோட்டைத் துறைமுகத்தினை வந்தடைந்தவர் யார்?

- வாஸ்கொடகாமா

6) 15 ஆம் நூற்றாண்டில் இந்தியாவை அடைவதற்கான கடற் வழிப்பாதை யினை கண்டு பிடித்த போத்துக்கேய மன்னன்?

- ஜோன்

7) போத்துக்கல் மக்களை கடல் பயணத்திற்கு ஆர்வம் ஊட்டிய மன்னன்?

- கடலோடி ஹென்றி

8) 1500 ஆம் ஆண்டு இந்தியாவை அடைந்த போத்துக்கேய கப்பற் குழுவிற்கு தலைமை தாங்கிய மன்னன்?

- பேதுரு அல்வாஸ் கப்ரால்

9) இந்தியாவில் கோட்டைகளை அமைப்பதற்கு ஆதரவு வழங்கியவர்கள்?

- மலபார், கொச்சின்

10) 1505 இல் மார்ச் 24 இல் இந்தியா வந்தடைந்த போர்த்துக்கேய தளபதி யார்?

✪ பிரான்சிஸ்கோ டீ அல்மேதா

11) மலைபார் கரையோரத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் முஸ்லிம்களை துரத்திய போத்துக்கேய தளபதி யார்?

✪ பிரான்சிஸ்கோ டி அல்மேதா

12) பிரான்சிஸ்கோ டி அல்மேடாவின் மகன் யார்?

✪ லோரன்சோ டி அல்மேதா

13) காலித்துறை முகத்தினை வந்தடைந்த போத்துக்கேய தளபதி யார்?

✪ லோரன்சோ டி அல்மேதா

14) காலித்துறைமுகத்தினை லோரன்சோ டி. அல்மேதா வந்தடைந்த ஆண்டு எது?

✪ 1505

15) 1507இல் கீழைத்தேசத்திற்கான நிர்வாகியாக வருகை தந்தவர்?

✪ அல்பர் கவர்க்

16) 1510 கோவாவை கீழைத்தேச மத்திய நிலையமாக்கிய போர்த்துக்கேய தளபதி யார்?

✪ அல்பர் கவர்க்

1510 ஆண்டளவில் இந்தியாவின் கரையோரத்தினதும் இந்து சமுத்திரத்தினதும் வர்த்தக உரிமையினை போத்துக்கேயர் பெற்றுக் கொண்டனர்.

## போர்த்துக்கேயர் வரும்போது இலங்கையின் அரசியல் நிலை

17) 1505 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது இலங்கையிலிருந்த இராட்சியங்களையும் அவ் இராட்சியங்களை ஆட்சி செய்த அரசர்களையும் குறிப்பிடுக?

- கோட்டை இராட்சியம் - எட்டாம் வீரபராக்கிரமபாகு
- கண்டி இராட்சியம் - சேனாசம்பத விக்கிரமபாகு
- யாழ்ப்பாண இராட்சியம் - பரராஜசேகரம்

18) 16 ஆம் நூற்றாண்டில் இலங்கையிலிருந்த பலமிக்க இராட்சியம் எது?

- கோட்டை

19) கோட்டை இராட்சியம் அமைந்துள்ள இடம்?

- ஸ்ரீ ஜயவர்த்தனபுர

20) கோட்டை இராட்சியத்தை நிர்மாணித்தவர் யார்?

- அழகக்கோனார் எனும் சேனாதிபதியால்

21) கோட்டை இராட்சியத்தை சூழ்ந்து காணப்பட்ட ஆறுகள்?

- கொலன்னாஓயா
- தியவன்ன ஓயா

22) 16 ஆம் நூற்றாண்டில் செல்வம் நிறைந்த இராட்சியமாக விளங்கிய இராட்சியம் எது?

- கோட்டை

23) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது கோட்டையினை ஆட்சி செய்த மன்னனும் அவனது மறுபெயர்களும் ?

- எட்டாம் வீரபராக்கிரமபாகு / ஸ்ரீ சிங்களாதீஸ்வர
- சக்கரவர்த்தி , லங்காதீஸ்வர

24) கோட்டை ராசதானியின் எல்லைகள்?

- வடக்கு - மல்வத்து ஓ்யா
- தெற்கு - வளவகங்கை
- மேற்கு - இந்து சமுத்திரம்
- கிழக்கு - மத்திய மலைநாட்டின் மேற்கு சாய்வு

25) கண்டி இராட்சியத்தின் மறு பெயர்களைக் குறிப்பிடுக?

- செங்கடகலபுர
- மலையகம்
- ஸ்ரீ வர்ணபுர

26) கண்டி இராட்சியத்தினை முதல் ஆட்சி செய்த மன்னன்?

- சேனாசம்பத விக்கிரமபாகு

27) போர்த்துக்கேயர் வருகை தந்தபோது யாழ்ப்பாணத்தினை ஆட்சி செய்த மன்னன் யார்?

- பரராஜ சேகரன்

28) வன்னி இராட்சியங்களை ஆட்சி செய்பவர்களை எப்பெயர் கொண்டு அழைப்பர்?

- வன்னியர்கள்

29) போர்த்துக்கேயரின் இயல்புகள் தொடர்பாக இராஜவலிய என்ற நூலில் கூறப்பட்டுள்ள கருத்து யாது?

- கொழும்புத் துறை முகதத்திற்கு மிகவும் வெள்ளையான மனிதர்கள் வந்துள்ளனர் இரும்புச் சட்டையும், இரும்புத் தொப்பியும் அணிந்த அவர்கள் ஓரிடத்தில் நில்லாமல் இங்கும் அங்கும் அலைகின்றனர்.
- வெண்ணிறக்கல்லை சாப்பிடுவதுடன் இரத்தத்தையும் குடிக்கின்றனர். அவர்களுடைய துப்பாக்கிகள் மிகத் தொலை தூரம் வரை சென்று வத்தளை சுதந்திரமலையைக் கூடத் தூளாக்குகின்றது.

30) பறங்கி கோட்டைக்கு போனது போல என்ற பழமொழி உருவானமைக்கு காரணம்?

- போத்துக்கேயருக்கு கோட்டை அரச மாளிகை கொழும்புக் கோட்டைக்கு அருகில் உள்ளது என்பதை அறிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக பரனாவோகற்றீம் என்பவனும் அவனது போத்துக்கேய குழுவினரையும் மலையகக் கால்வாய்களுக்கூடாக அழைத்து இரண்டு மூன்று நாட்களுக்கு பின்னர் அரச மாளிகையினைச் சென்றடைந்தனர். அதனாலேயே இப் பழமொழி உருவாகியது.

31) போத்துக்கேயர் நினைவுச் சின்னத்தை அமைத்ததன் நோக்கம் யாது?

- தனது பயணத்தை நினைவு கூறும் வகையில் அமைக்கப்பட்டது.

32) போத்துக்கேயரது நினைவுச் சின்னம் காணப்பட்ட இடம் யாது?

- கோர்டன் பூங்கா நினைவுச்சின்னம் (கோர்டன் பூங்காவில் காணப்படுகிறது)

33) 1518 இல் கொழும்பை வந்தடைந்த போத்துக்கேய தளபதி யார்?

- ✪ லோபேஸ் கொரஸ்த அல்பகேரியா

34) 1519 இல் கோட்டையினை ஆட்சி செய்த மன்னன்?

6 ம் விஜயபாகு

35) விஜயபாகு கொலை என்றால் என்ன?

- ✪ விஜயபாகு மன்னனின் முதல் மனைவியின் மூன்று புதல்வர்களுக்கு வழங்கவேண்டிய ஆட்சியினை இரண்டாம் மனைவியின் மகனான தேவராஜனுக்கு வழங்க முற்பட்டவேளை முதல் மூன்று புதல்வர்களும் அந்நிய இனத்தவன் ஒருவனுக்கு பணம் கொடுத்து தத்தையினை கத்தியால் குத்தி கொலை செய்தமையே விஜயபாகு கொலை என அழைக்கப்படும் இக்கொலை கி .பி 1521 இடம் பெற்றதாகும்.

36) 1521 இன் பின் கோட்டை இராட்சியம் எத்தனை இராட்சியமாக பிளவுபட்டது அவை எவை? அவற்றின் அரசர்களையும் பெயரிடுக?

- ✪ மூன்று
- ✪ கோட்டை - 7 ஆம் புவனேகபாகு
- ✪ சீதாவாக்கை - மாயாதுன்னை
- ✪ றைகம - றைகம பண்டார

37) எட்டாம் வீரபராக்கிரமபாகுவின் புதல்வர்கள் யாவர்?

- ✪ தர்மபராக்கிரமபாகு
- ✪ விஜயபாகு

38) போர்த்துக்கேயர் கோட்டை இராட்சியத்திற்குள் வருவதற்கு காரணமாய் இருந்தவன்?

- ✪ 1527 இல் 1537 வரை பத்து வருடங்கள் கோட்டை இராட்சியத்தை பற்றிக்கொள்ள எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வி அடையவே அந்தச்சந்தர்ப்பங்களில் எல்லாம் புவனேகபாகு போர்த்துக்கேயரின் உதவியை நாடியமையே ஊடுருவதற்கு காரணமாகியது.

39) 7 ஆம் புவனேகபாகுவின் மகள்?

- ✪ சமுத்திராதேவி

40) சமுத்திராதேவியின் மகன்?

- ✪ தர்மபாலன்

41) சமுத்திராதேவியின் கணவன்?
விதியபண்டாரா

42) புவனேகபாகுவிற்கு பின் கோட்டை அரசன்?
- தர்மபாலன்

43) தர்மபாலனின் சிலைக்கு முடிசூட்டு விழா நடைபெற்ற ஆண்டு எது?
- 1543

44) புவனேகபாகுவின் வேண்டுகோளுக்கிணங்க பிரான்சிஸ்கன் மிஷனரிமார் இலங்கைக்கு வருகை தந்த ஆண்டு எது?
- 1543

45) பிரானசிஸ்கன் மிஷனரிமார் இலங்கையில் கத்தோலிக்க மதத்தினைப் பரப்பிய இடங்கள்?
- நீர் கொழும்பு, பாணந்துறை, முகத்தவாரம், மொறட்டுவ, பேருவல.

46) புவனேகபாகு இறந்தபின்பு தர்மபாலன் சிறுவனாக இருந்தமையால் அரச கடமையினைப் பொறுப்பேற்றுக் கொண்டவன்?
- விதியபண்டாரா (தர்மபாலனின் தந்தை)

47) தர்மபாலன் ஞானஸ் ஞானம் பெற்ற ஆண்டு எது?
- 1557

48) தர்மபாலனின் கத்தோலிக்க மதப் பெயர் யாது?
- தொன்யுவான்

49) பெரியபண்டார என அழைக்கப்பட்ட மன்னன்?
- முதலாம் இராஜசிங்கன்

50) மாயாதுன்னையின் மகன்?
- முதலாம் இராஜசிங்கன்

51) டிக்கிரி பண்டார என அழைக்கப்பட்ட மன்னன்?
- முதலாம் இராஜசிங்கன்

52) தர்மபாலனின் மரண சாசனத்தில் கூறப்பட்ட கருத்து யாது?
- 1580 ஆகஸ்ட் இல் தர்மபால மன்னன் போர்த்துக்கேயரின் நிர்ப்பந்தத்தில் கோட்டை இராட்சியத்தை அவர்களுக்கு பரிசளிப்பதாக உயிலியினை எழுதி வழங்கினான்.

53) தர்மபாலன் மரணமடைந்த ஆண்டு எது?

- 1597 இல்

54) கோட்டை இராட்சியம் போத்துக்கேயருக்கு உரித்தான ஆண்டு எது?

- 1597

55) கள்ளிக்கோட்டை மன்னன் சமோரின் உதவியினை நாடிய மன்னன்?

- மாயாதுன்னை

56) சீதாவாக்கையின் எழுச்சிக்கான காரணங்களைக் குறிப்பிடுக?

- 1557 இல் தர்மபால மன்னன் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியமை.
- பௌத்த சமயத்தின் பாதுகாவலராக குருமாரும் பொது மக்களும் மாயாதுன்னையினைக் கருதியமை.
- புனிதந்ததாதுவினை கோட்டையிலிருந்து சீதாவாக்கைக்கு பிக்குமார் கொண்டு வந்தமை.
- அரசின் எருமைச்சின்னமான புனித தந்ததாது கிடைக்கப் பெற்றமையினால் தலைமைத்துவ மன்னனாக மாயா துன்னை மதிக்கப்பட்டமை.
- பெருந்தொகையான பௌத்த மக்களும் கோட்டையினை விட்டு சீதாவாக்கைக்கு சென்றமை.

57) மாயாதுன்னையின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்கள்?

- கோட்டை
- சீதாவாக்கை
- றைகம
- தெனவக்க
- ஏழு கோறளை

58) சீதாவாக்கை நாட்டின் முக்கிய இராட்சியமாக விளங்கிய ஆண்டு எது?

- 1579

59) போத்துக்கேயர் கோட்டை இராட்சியத்தில் அதிகாரத்தை நிலை நாட்டிக்கொள்ள உதவிய அனுகூலமான காரணிகள்?

- இராட்சியங்கள் பிரிந்து பலமற்ற அமைப்புடன் காணப்பட்டமை.
- சகோதரர்களுக்கிடையில் ஒற்றுமையின்மை.
- ஒவ்வொருவருக்கெதிராக வெளிநாட்டவரின் உதவியை நாடியமை.
- ஒரே தேசம், ஒரே இனம் என ஐக்கியப்படாமை
- கோட்டை இராட்சியத்தில் கத்தோலிக்க மதம் பரவ அரசர்கள் அனுமதித்தமை.
- தர்மபால மன்னனின் பாதுகாப்பிற்கு போத்துக்கேயர் உதவியமை.
- கல்வியைப் பெறவும் அரச பயிற்சிக்காகவும் தர்மபாலன்

போர்த்துக்கேயரிடம் ஒப்படைக்கப்பட்டதனால் அவர்களுக்கு வேண்டிய முறையில் ஆட்சி நடத்த வசதிகள் செய்து கொடுத்தமை.

- சிங்கள மன்னர்களுடன் தங்களுக்கு சார்பான ஒப்பந்தங்களை ஏற்றுக்ககொள்ள முடிந்தமை.
- 1518 இல் பாதுகாப்பு கோட்டை அமைத்துக்கொள்ள தர்மபராக்கிரமபாகு மன்னனால் சந்தர்ப்பம் கிடைத்தமை.
- முஸ்லிம் வியாபாரிகள் இதுவரைகாலமும் கொழும்புத்துறைமுகத்தின் மூலம் மேற்கொண்ட வியாபாரம் இல்லாமற் போனமை.
- பக்கச்சார்பான சிங்களவர்களை உருவாக்குதலும் கூலிப்படைகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளல்.

**60) கனேதன்னை எனும் இடத்தில் 1ம் இராஜசிங்கனுக்கும் கோணப்பு பண்டாரனுக்கிடையில் போர் நடைபெற்ற ஆண்டு எது?**

- 1952

**61) தொன்பிலிப் என அழைக்கப்பட்ட மன்னன்?**

- யமசிங்க

**62) கோணப்பு பண்டார என அழைக்கப்பட்டவன் ?**

- முதலாம் விமலதர்மசூரியன்

**63) கோணப்பு பண்டாராவின் தந்தை யார்?**

- வீரசுந்தர பண்டார

**64) 1 ம் இராஜசிங்கன் இறந்தமைக்கான காரணம் யாது?**

- பெதன்கொட பூங்காவில் மூங்கில் முள்ளொன்று பாதத்தில் தைத்ததால் ஏற்பட்ட காயத்தால் மரணமடைந்தான்.

**65) போர்த்துக்கேயர் கண்டி இராட்சியத்துடன் ஆரம்பத்தில் கவனம் செலுத்தாமைக்கான காரணங்கள்?**

- கோட்டை இராட்சியத்தின் அதிகாரத்தின் கீழ்காணப்பட்ட மலைநாட்டுப் பிரதேசங்களில் காணப்பட்ட வியாபாரப் பொருட்கள் கோட்டை மன்னனூடாகப் பெற்றுக்கொண்டமை.
- கோட்டைஇராட்சியத்திற்குள் ஏற்பட்ட பிரச்சினைகளில் தலையிடப்பட்டமை -யினால் மலைநாட்டின் மீது கவனம் செலுத்த நேரமின்மை.

66) போர்த்துக்கேயர் கண்டி இராட்சியத்துடன் கொண்டிருந்த தொடர்புகள் யாவை?

- கோட்டை, சீதாவாக்கை ஆகிய இராசதானிகளால் ஏற்பட்ட எதிர்ப்பின் பொருட்டு உதவியை நாடியமை.

  உதாரணம் : கரலியத்தபண்டார

- 1546 இல் மாயாதுன்னையும் 2 ஆம் புவனேகுவின் கண்டி இராட்சியத்தை ஆக்கிரமித்ததால் 2 ஆம் ஜயவீர பண்டார போத்துக்கேயரின் உதவியை நாடியமை.

- ஜயவீரபண்டாராவின் மரணத்தின் பின்னர் வீர விக்கிரமபாகு அரசனால் மாயாதுன்னையின் ஆக்கிரமிப்புக்கு பயந்து இவன் போத்துக்கீசரின் உதவியை நாடியமை. (1547 இல்)

67) தந்துரேப்போர் நடைபெற்ற ஆண்டு யாது?

- 1594

68) தந்துரேப்போருடன் தொடர்புடைய மலையக மன்னன் யார்?

- முதலாம் விமலதர்ம சூரியன்.

69) தந்துரேப்போருடன் தொடர்புடைய போர்த்துக்கேய தளபதி யார்?

- பேரோ லோபஸ் த சூசா

70) 1 ஆம் விமலதர்ம சூரியனின் மனைவி யார்?

- குசுமாசனதேவி

71) குசுமாசனதேவியின் கத்தோலிக்கமதப்பெயர் யாது?

- தொன்கத்தரினா

70) முல்லேரியாப்போர் இடம்பெற்ற ஆண்டு எது?

- 1562

71) முல்லேரியாப் போருக்கு தலைமைதாங்கிய மலைநாட்டு மன்னன் யார்?

- முதலாம் இராஜசிங்கன்

72) 1 ஆம் இராஜசிங்கன் கொழும்புக் கோட்டை மீது படையெடுப்பின் மேற்கொண்ட ஆண்டு எது?

- 1587

72) பலனப்போர் நடைபெற்ற ஆண்டு எது?

- 1602

73) பலனப்போருக்கு தலைமை தாங்கிய மலைநாட்டு மன்னன் யார்?

- 1 ஆம் விமலதர்மசூரியன்

74) பலனப்போருக்கு தலைமை தாங்கிய போர்த்துக்கேய தளபதி யார்?

- கப்பித்தான் ஜெனரல்டி அசவிடோ

75) கி . பி 1610 இல் கண்டி இராட்சியத்தின் மீது படையெடுப்பினை மேற்கொண்டு கண்டிநகரை சூறையாடி தீ வைத்த போத்துக்கேயத் தளபதி யார்?

- அசவிடோ

76) கி .பி 1617 இல் செனரத் மன்னனுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் முக்கிய அம்சங்கள் எவை?

- போர்த்துக்கேயருக்கு கப்பமாக ஆண்டொன்றுக்கு இரண்டு யானைகள் வழங்குதல்.
- கோட்டை இராட்சியம் முழுவதற்கும் போர்த்துக்கேயரே உரிமையாளர் என்பதை கண்டிய அரசன் ஏற்றுக் கொண்டமை.

77) கி .பி 1618 இல் கண்டி இராட்சியத்தை ஆக்கிரமிப்பதற்காக நியமிக்கப்பட்ட தளபதி யார்?

- கொன்ஸ்தாந்தின் டி சூசா

78) கொன்ஸ்தாந்தின் டி சூசாவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எவை?

- போர்த்துக்கேயரின் கீழிருந்த கோட்டைகளை சீர் திருத்தல்.
- கொழும்புக்கோட்டைகளுக்கு புதிய மதில்களை அமைத்தல்.
- காலி மெனிக்கடவர கோட்டைகளை சீர்திருத்தம் செய்தல்.
- 1623,1628 முறையே திருகோணமலை, மட்டக்களப்பு புதிய கோட்டைகளை அமைத்தல்.
- பேரேவாவுக்கு அண்மையில் வெடிமருந்து தொழிற்சாலையொன்றை அமைத்தல்.
- கி .பி 1625 இல் வத்தளை, மோதரை என்பவற்றுக்கருகில் குடியேற்றங்களை அமைத்தல்.
- லஸ்கரின் படையினர் போர்த்துக்கேயரை விட்டு பிரிந்ததால் அவர்களது மனைவி பிள்ளைகளுக்கு தண்டனை வழங்குவதாக அறிவித்தல்.

79) லஸ்கரின் படை என்பது?

- போர்த்துக்கேயரின் கீழ் கூலிக்கு பணியாற்றிய சுதேசிகளைக் கொண்ட படை இதுவாகும்.

80) ரந்தெனிவெலப் போர் இடம்பெற்ற ஆண்டு?

- 1630

81) செனரத்தின் மகன் யார்?

- 2 ஆம் இராஜசிங்கன்

82) ரந்தெனிவெலப்போரிற்கு தலைமைதாங்கிய மலையக மன்னன்?

- 2 ஆம் இராஜசிங்கன்

83) ரந்தெனிவெலப்போரிற்கு தலைமை தாங்கிய போர்த்துக்கேய தளபதி யார்?

- கொன்ஸ்தாந்தி டி சூசா

84) கன்னொருவப்போர் இடம் பெற்ற ஆண்டு எது?

- 1638

85) கன்னொருவப் போருக்கு தலைமை தாங்கிய மலையக மன்னன் யார்?

- இரண்டாம் இராஜசிங்கன்

86) கன்னொருவப் போருக்கு தலைமை தாங்கிய போர்த்துக்கேய தளபதி யார்?

- தியோகோத மேலோ

87) போர்த்துக்கேயர் கண்டி மீது மேற்கொண்ட இறுதிப்போர் எது?

- கன்னொருவப் போர்

88) மலையக இராட்சியத்துடன் ஈடுபட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் போர்த்துக்கேயர் படுதோல்வி அடைந்தமைக்கான காரணங்கள் எவை?

- மலையரண்களாலும், வன அரண்களாலும், நீரரண்களாலும் சூழப்பட்டுள்ள இயற்கைப்பாதுகாப்பு அரண்களைக் கொண்டு காட்டப்பட்டமை.
- மக்கள் அரசுடன் இணைந்திருந்தமை
- மலையக இராசதானி மக்களுடைய கொரில்லாப்போர் முறை போர்த்துக்கேயர் மலையக இராசதானியின் பௌதீக தன்மையினை அறிந்திராமை.
- போத்துக்கேயப் படைகளில் சேர்த்துக்கொள்ளப்பட்ட கூலிப்படைகள் யுத்தத்தின் போது தேசியத் தலைவர்களுடைய படைகளுடன் சேர்ந்து கொண்டமை.

## யாழ்ப்பாண இராசதானி

89) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னன் யார்?

- பரராஜசேகரன்

90) ஆரம்பகாலத்தில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தின் மீது கவனம் செலுத்தாமைக்கான காரணம் யாது?

- கறுவா, மிளகு போன்றவாசனைத் திரவியம் கிடைக்காமையினால் ஆகும்.

91) போர்த்துக்கேயர் பிற்காலங்களில் யாழ்ப்பாணத்தின் மீது தலையீட்டினை மேற்கொண்டமைக்கான காரணங்கள் யாவை?

- யாழ்ப்பாணத்துக்கூடாக இந்தியாவுடன் தடையின்றி வர்த்தகம் செய்தலும் யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க சமயத்தை பரப்புவதற்குமாகும்.
- 1519 ல் சங்கிலிய மன்னன் பரராஜ சேகர மன்னனை கொன்று சிம்மாசனத்தை கவர்ந்து கொண்டான். இதனால் அச்சம் உற்ற பரராஜசேகரன் இந்தியாவிற்கு தப்பியோடி தனது அரசு உரிமையினை மீட்டுக் கொள்வதற்காக போத்துக்கேயரின் உதவியினை நாடியமை.

91) 1543 இல் யாழ்ப்பாணம் மீது மேற்கொண்ட படையெடுப்புக்கு தலைமை தாங்கிய போர்த்துக்கேயத் தளபதி யார்?

- மார்ட்டின் த சூஸா

92) சங்கிலிய மன்னனுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையில இடம் பெற்ற முக்கியம்சங்கள்?

- போர்த்துக்கேயக்கு 500 பாடோ பணத்தையும், யானைகள் இரண்டையும் வருடாந்தம் வழங்குதல்.
- யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க மதத்தை பரப்புதலுக்கு அனுமதி வழங்குதல்.

93) 1560 இல் பிரசன்சா யாழ்ப்பாண விஜயம் மேற்கொண்டமைக்கான காரணம் யாது?

- சங்கிலிய மன்னின் துரோகச் செயலுக்கு தண்டனை வழங்குவதற்கு

94) யாழ்ப்பாண இராட்சியத்தின் தலைநகரம் எது?

- நல்லூர்

95) யாழ்ப்பாண இராட்சியத்ததை பன்னிரண்டு அரசர்கள் ஆண்டதாக கூறும் நூல் எது?

- யாழ்ப்பாண வைபமாலை

96) கனகசூரிய சிங்கை மன்னனின் மகன் யார்?

- பரராசசேகரன்

97) பரராஜசேகரன் எப்பரம்பரையை சேர்ந்தவன்?

- ஆரியசக்கரவர்த்திகள்

98) பரராசசேகரனை கொலை செய்த மன்னன் யார்?

- சங்கிலியன்

99) பரராஜசேகரனை அடுத்து யாழ்ப்பாண இராட்சியத்தின் மன்னன் யார்?

- சங்கிலியன்.

100) சங்கிலியனையடுத்து யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னன் யார்?

- காசி நைனார்

101) காசி நைனாரை கொலை செய்தவர் யார்?

- போர்த்துக்கேயர்

102) காசிநைனாருக்கு பின் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னன் யார்?

- பெரியபிள்ளை

103) சங்கிலிய மன்னனின் புதல்வன் யார்?

- புவிராச பண்டார

104) புவிராச பண்டாரன் யாழ்ப்பாண இராட்சியத்தை எப் பெயரில் ஆட்சி செய்தான்?

- பரராச சேகரன்

105) புவிராச பண்டார இறந்த ஆண்டு எது?

- 1591

106) நல்லூர் தலைநகரம் போத்துக்கேயரால் கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?

- 1591

107) பெரிய பிள்ளை மன்னனின் புதல்வன் யார்?

- எதிர் மன்னசிங்கன்

108) எதிர்மன்னசிங்கன் இறந்த ஆண்டு எது?

- 1615

109) யாழ்ப்பாண இராட்சியத்தின் எழுச்சி பற்றி அறிந்து கொள்ளக் கூடிய நூல்கள் எவை?

- யாழ்ப்பாணவைபவ மாலை
- கைலாயமாலை
- வையாபாடல்

110) இராசப்பிரதிநிதி என அழைக்கப்பட்ட மன்னன் யார்?

- கோவா என்ற போர்த்துக்கேயர் மத்திய நிலையத்தில் ஆட்சிசெய்த மன்னனை

111) சமயசம்பந்தமான நிகழ்வுகளுக்கு பொறுப்பாக இருந்தவர் யார்?

- விசுக்கர் ஜெனலர

112) சென்லோரன்ஸ் நகர் என அழைக்கப்பட்டது?

- கொழும்பு

| | | |
|---|---|---|
| திஸாவானி | - | திஸாவை |
| ரட | - | ரடே மஹத்தய |
| கோரளை | - | கோரளை |
| பற்று | - | அத்துக்கோரளை |
| கம் | - | கிராமத்தலைவர் |

113) கறுவா வர்த்தகத்திற்கு பொறுப்பாக இருந்தவர்?

- மஹாபத்தே கப்டன்

114) போர்த்துக்கேயரால் கத்தோலிக்க சமயம் பரப்பப்பட்ட முறைகள்?

- டொமினிக்கன், யேசுசபை குருமார்களின் நடவடிக்கையினால் சமயம் பரவத் தொடங்கியதுடன் கடற்கரைப்பிரதேசங்களில் கத்தோலிக்க தேவாலயங்கள் கட்டப்பட்டு பரப்பப்பட்டது.
- யாழ்பாண மன்னர்கள் சிலரின் உதவியுடன் அப்பிரதேச மெங்கும் கத்தோலிக்க சமயம் பரப்பப்பட்டமை.
- 1557 இல் தர்மபால மன்னன் கத்தோலிக்க ஞான்ஸ்தானம் பெற்றதைத் தொடர்ந்து பலர் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினர்.
- தர்மபால மன்னன் பௌத்த, இந்துக்கோயில்களின் நிலபுலன்களை கத்தோலிக்க தேவாலயங்களுக்கு வழங்கியமை.
- தர்மபாலன் கத்தோலிக்க குருமார்கள் வாழ்வதற்காக போதிய வாய்ப்பு வசதிகளைச் செய்து கொடுத்தமை.

- மிஷனறிமாரின் அயராத சேவையினால் அச்சமயம் மேலும் பரவலடைந்தமை.
- கிறிஸ்தவ சமயத்தை தழுவுபவர்களுக்கு பட்டங்கள், பதவிகள் வரிவிலக்கு, எனும் சலுகைகள் வழங்கப்பட்டமை.
- கத்தோலிக்க சமய விழாக்களை மக்கள் மனதில் கவரும் விதத்தில் நிகழ்த்தியமை.
- பாடசாலைக்கல்வியின் ஊடாக பரப்பப்பட்டமை.
- நாடகம், இசை நிகழ்ச்சிகள் மூலமும் சமயக் கருத்துக்களைப் பரப்பினர்.

**115) மறாவரி என்றால் என்ன?**

- போத்துக்கேயரது அதிகார வரம்பிற்குள் வாழ்ந்த ஒருவர் இறக்கும் பட்சத்தில் அவருடைய சொத்துக்கள் யாவும் அரசிடம் ஒப்படைத்தலே மறா வரி என அழைக்கப்படும்.

**116) போர்த்துக்கேயர் கல்வியினை வளர்த்த முறைகள்?**

- சமயப்பற்று பாடசாலைகளை அமைத்து அதனூடாக வளர்த்தனர்.

**117) போர்த்துக்கேயர்கால கல்வியில் புகட்டப்பட்ட விடயங்கள்?**

- கணிதம்
- லத்தீன்மொழி
- இசை
- சமயம்

**118) போர்த்துக்கேயர்கால வைத்தியமுறை தொடர்பாக சுருக்கமாகக் குறிப்பிடுக?**

- வைத்தியசாலைகளை ஆரம்பித்து மருத்துவத்தை வழங்கியமை.
- வைத்திய சாலைப் பயிற்சி கல்லூரிகளை ஆரம்பித்தமை.

ஒலிவோராவினால் மன்னாரில் வைத்தியசாலைகளை அமைத்தமை.

**119) மிஸரி கோசியா என்ற பெயரில் அமைக்கப்பட்ட இடங்களைக் குறிப்பிடுக?**

- கொழும்பு
- காலி
- மன்னார்
- யாழ்ப்பாணம்

**120) மிஸரி கோசியா மடத்தின் பணிகள்?**

- ஏழைகளை பரிபாலிப்பது
- அநாதைகளுக்கு கற்பித்தல்
- இறந்தவர்களை புதைப்பது

**121) போர்த்துக்கேயர் கால இசை அம்சங்களாவன,**

- பைலா
- கபிறிஞ்ஞா

122) பங்குப் பாடசாலை என்பது ?

தேவாலயங்களுக்கு அருகில் பாடசாலைகள் இயங்கின் அவை பங்குப் பாடசாலைகள் எனப்பட்டது.

123) போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த சமயக்குழுக்களைத் தருக?

- பிரான்சிஸ்கன் சபை
- டொமினிக்கன் சபை
- அகஸ்தீன் சபை
- இயேசு சபை

124) இலங்கைக்கு முதன் முதல் வருகைதந்த சமயக்குழு எது?

- பிரான்சிஸ்கன் சபை

125) இலங்கைக்கு வருகை தந்த சமயக்குழுக்கள் பல்வேறு பிரதேசங்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டனர் . அவற்றைக் குறிப்பிடுக?

- மாத்தறை - பிரான்சிஸ்கன் சபை
- நான்கு கோறளை - அகஸ்தீன் சபை
- ஏழு கோறளை - இயேசு கோறளை
- சப்பிரகமுவ - டொமினிக்கன் சபை

126) போர்த்துக்கேயர் மக்களை கத்தோலிக்க சமயத்திற்கு மாற்றுவதற்கு கையாண்ட முறைகளைக் தருக?

- கத்தோலிக்க சமயத்தை தழுவியோருக்கு சலுகையளித்தல்,அரசாங்கப் பதவிகளுக்கு கொடுப்பனவுகளை வழங்கியமை.
- வரிகளிலிருந்து விடுவிப்பு வழங்குதல்.
- கல்வி வாய்ப்புக்களை வழங்குதல் .
- மக்களின் மனதைக் கவரும் சிறு விழாக்கள், ஊர்வலங்கள் என்பவற்றை ஒழுங்கு செய்தல்.
- சமூக நலப் பணிகளை மேற்கொள்ளல்.

127) போர்த்துக்கேயரால் இலங்கையில் நிறுவப்பட்ட வைத்தியசாலையின் பெயர்?

- ஸ்பிரிடன் - 1552 (இஸ்ரிதாலய)

128) போர்த்துக்கேயர் காலத்தில் பொருளாதாரப்பிரிவுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டவர்.

- விடோர் த பெசென்டா

129) போர்த்துக்கேயரின் பொருளாதார செயற்பாடுகளின் இரு பெரும் பிரிவகளும் எவை?

- வருமானத்தை சேகரித்தல்
- வர்த்தகப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல்

130) தோம்பு என்பது ?

வருமான வழிகள் தொடர்பான தகவல்களை எழுதிவைப்பது சிறந்த இயல்பாக இருந்த இவை தோம்புகள் என அழைக்கப்பட்டது.

131) கறுவா வர்த்தகத்திற்கென போர்த்துக்கேயரினால் உருவாக்கப்பட்ட திணைக்களம் ?

- மகாபத்தே திணைக்களம்

132) மகாபத்தே திணைக்களத்தின் தலைவர் ?

- மகாபத்தே கப்டன்

133) போர்த்துக்கேயர் எப்பொருட்களில் இருந்து வருமானத்தைப் பெற்றுக் கொண்டனர்?

- பாக்கு
- மிளகு,
- யானை
- முத்து
- மாணிக்கம்

134) வருமானம் சேகரிக்கும் பொருட்டு போர்த்துக்கேயரால் நியமிக்கப்பட்ட சிறிய அதிகாரிகளைப் பெயரிடுக?

- கணக்குப் பிள்ளை
- எழுது வினைஞர்
- மயோரால

135) போர்த்துக்கேயரின் கீழைத்தேய மத்திய நிலையமாக விளங்கிய கோவாவில் செயலாற்றுவதற்காக நியமிக்கப்பட்டவர்?

இராசப்பிரதிநிதி அல்லது விசுகர் என்பவர் நியமிக்கப்பட்டார்.

136) மரபுரீதியான போர்த்துக்கீசரின் நிர்வாக ஒழுங்கமைப்பு ?

- திஸாவானி - திஸாவை
- கோரளை - கோரளை விதானை
- பற்று - அத்துக்கோரளை
- கிராமம் - கிராமத்தலைவன்

137) கோட்டை இராட்சியத்திற்கு உரித்தான பிரதேசம் நான்கு திசாவனிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன அவை எவை?

- ஏழு கோறளை
- சப்ரகமுவ
- மாத்தறை
- நான்கு கோறளை

139) மல்வானை உடன்படிக்கை என்பது ?

தர்மபாலனின் மரணத்தின் பின்னர் கோட்டை இராட்சியத்தின் நிர்வாக அதிகாரிகளை மல்வானைக்கு அழைத்து அசவேதுஅவர்களுடன் கலந்துரையாடி கோட்டை இராசதானியின் எதிர்கால நிர்வாகத்தை முன்னேடுத்துச் செல்லும் முறை பற்றி இணக்கத்துக்கு வந்தான். இது 1597 இல் இடம பெற்றது இவ் உடன்படிக்கை மல்வானையில் இடம் பெற்றமையினால் மல்வானை உடன்படிக்கை என அழைக்கப்படுகின்றது.

140) போர்த்துக்கேயர் கீழைத்தேயத்தில் படுதோல்வியடைந்த போர் எது?

முல்லேரியாப் போர் - 1600 பேர் மரணமடைந்ததாக ராஜவலிய என்ற நூல் குறிப்பிடுகின்றது.

141) போத்துக்கேயர் ஆட்சியினால் ஏற்பட்ட விளைவுகள்?

- இசை – பைலா,கபிறிஞ்ஞா காணப்பட்டமை.
- தளபாடம் - அலுமாரி, கணப்பு சொற் பிரயோகம்
- ஆடைகள் - கமிஸ, களிசான், சாயா, கபாகுருத்து
- பெயர்கள் - ஜோன், சில்வா, பெரேரா, மென்டீஸ். அல்மேதா, வாஸ் பயன்படுத்தப்பட்டு வருகின்மை
- கலைகள் - கட்டிடம், சித்திரம், சிற்பம், நாடகம் என்பன இன்று காணப்படுவதோடு அவர்களது மதமான கத்தோலிக்க மதச்செயற்பாடுகள் காணப்படுவதும் இவர்களது ஆட்சியினால் ஏற்பட்ட விளைவாகும்.

**மலையக இராசதானியுடன் போத்துக்கேயர் மேற்கொண்ட யுத்தங்களும் அதற்கு தலைமை தாங்கிய தலைவர்களும்.**

| வருடம் | யுத்தத்தை தலைமை தாங்கிய போத்துக்கீச தளபதி | சண்டை நடந்த இடம் | யுத்தத்துக்கு தலைமை வகித்த கண்டிய அரசன் |
|---|---|---|---|
| 1594 | பேரோ லோபஸ் த சூசா | தந்துரே | 1ம் விமலதர்ம சூரியன் |
| 1602 | தொன்யூவான் ஜெரனிமேதா அசவேது | பலன | 1ம் விமலதர்ம சூரியன் |
| 1630 | கொன்ஸ்தைன் சூசா | ரந்தெனிவல | செனரத் அரசன் கீழ் 2 ஆம் இராஜசிங்கன்' |
| 1638 | தியோகு தலோ கஸ்திரோ | கன்னோருவ | 2ஆம் இராஜசிங்கன் |

தரம் 8

# மாதிரி வினாத்தாள் - 01

வரலாறு

நேரம் - 2.00 மணி

பகுதி - 1

☞. பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1. பண்டுகாபய மன்னனால் அமைக்கப்பட்ட குளம் அல்லாதது?
   1. காமினி வாவி  2. ஜயவாவி
   3. அபயவாவி  4. திஸாவாவி

2. தாதுசேன மன்னனின் ஆட்சிக்காலம் யாது?
   1. கி.மு 247 - 247  2. கி.மு 274 - 247
   3. கி.பி 455 - 473  4. கி.மு 247 - 248

3. இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது தூபி யாது?
   1. தூபராம  2. வெட்டிய
   3. ஜேதவனராமய  4. வல்லாளதூபி

4. திஸா வாவியை அமைத்த அரசன்?
   1. எல்லாளன்  2. தேவநம்பியதீசன்
   3. நிஸ்ஸங்கமல்லன்  4. துட்டகைமுனு

5. சீகியக் குன்றினை மையமாகக் கொண்டு சீகிரியக்கோட்டையினை அமைத்த அரசன்?
   1. எல்லாளன்  2. துட்டகைமுனு
   3. மகிந்தன்  4. காசியப்பன்

6.. கிராமக்குளங்கள் அமைக்கப்பட்டமை தொடர்பாக குறிப்பிடும் நூல்?
   1. மகாவம்சம்  2. தீபவம்சம்
   3. பேரிவம்சம்  4. தேவவம்சம்

7. தாதுசேன மன்னனால் அமைக்கப்பட்ட குளம் எது?
   1. கலாவாவி  2. பேரிவாவி
   3. திஸாவாவி  4. வசபகுளம்

8. 8 - 9 வரையுள்ள வினாக்களுக்கு X, Y தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்க X தொகுதியுடன் Y தொகுதிக்கு உள்ள சரியான தொடர்பினைச் சரியாகத் தரும் விடையைத் தெரிவு செய்க.

| X | | Y | |
|---|---|---|---|
| 1. | அபயவாவி | A | வசபன் |
| 2. | எலகரக்கால்வாய் | B | தேவநம்பியதீசன் |
| 3. | குருளுவாவி | C | பண்டுகாபயன் |
| 4. | திஸாவாவி | D | மகாசேனன் |
| | | E | உபதிஸ்ஸ |

1. C, A, D, B
2. A, E, B, C
3. E, C, A, B
4. C B, E, A

9.

| X | | Y | |
|---|---|---|---|
| 1. | பராக்கிரமசமுத்திரம் | A | வசபன் |
| 2. | ஜயகங்கை | B | தாதுசேனன் |
| 3. | ஆழிசாரக்கால்வாய் | C | மகாசேன மன்னன் |
| 4. | மின்னேரியா | D | உபதிஸ்ஸ |
| | | E | பராக்கிரமபாகு |

1. E, B, A, C
2. B, A, E, C
3. A, C, B, D
4. D, B, C, A

10. குளக்கட்டு நீரினால் அரிக்கப்படுவதை தடுக்கும் குளத்தின் கூறு எது?
1. குளக்கட்டு 2. அலைதாங்கி 3. சுருங்கை 4. வெளிவான்கதவு

(2 x 10 = 20 புள்ளிகள்)

☞. **கீறிட்ட இடம் நிரப்புக.**

11. அதிக அழுத்தத்துடன் குளத்தில் இருக்கும் நீரை அணைக்கட்டின் ஊடாக கால்வாய்க்கு விடுவிப்பதற்கு ........................................ நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

12. பொலன்னறுவை இராட்சியத்தின் இறுதியில் .................................. ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து இராசரட்டை நாகரிகம் வீழ்ச்சியுற்றது.

13. 1 ஆம் அக்கிரபோதி மன்னனால் மகாவலி கங்கையிலிருந்து நீரைக்கொண்டு செல்வதற்கு ........................................ கால்வாய் அமைக்கப்பட்டது.

14. பொலன்னறுவையில் ............................, ............................ பொய்கைகள் காணப்படுகின்றது.

15. தென்னாசியாவிலுள்ள பழமைவாய்ந்த நீர்ப்பூங்கா ............................ ஆகும்.

(5 x 2 = 10 புள்ளிகள்)

☞. தொடர்பு படுத்துக.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 16. அபய கிரிவிகாரை | மகாசேன மன்னன் |
| 17. மிரிசவெட்டி | நிஸங்க மல்ல மன்னன் |
| 18. ஜேதவனாராமய | மகாபராக்கிரமபாகு |
| 19. தெமள மகாசாய | துட்டகைமுனு |
| 20. ரன் கொத் விகாரை | வலகம்பா |

(5 x 2 = 10 புள்ளிகள்)

## பகுதி II

☞. சுருக்கமான விடை தருக.

1. நீரியல் தொழில் நுட்பம் என்றால் என்ன?

............................................................................................

............................................................................................

2. குளத்தின் கூறுகள் ஐந்து தருக?

............................................................................................

3. கால்வாய்கள் அமைக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் இரண்டுதருக.

............................................................................................

4. நீர்ப்பூங்காவின் சிறப்பம்சங்கள் இரண்டு தருக?

............................................................................................

5. களிமண் தொழில் நுட்பத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் எவை?

............................................................................................

6. வனைதல் சில்லின் பயன்பாடுகள் இரண்டு தருக?

............................................................................................

7. அநுராதபுரச் சந்திர வட்டக்கல்லில் காணப்படும் மிருகங்கள் மூன்று தருக?

............................................................................................

8. புராதன வைத்தியசாலைகளின் சிதைவுகள் கிடைக்கப்பெற்ற இடங்கள் மூன்று தருக?

............................................................................................

9. பொலன்னறுவைக் காலத்தில் அமைககப்பட்ட தாதுகோபங்கள் மூன்று தருகு?

........................................................................................

10. புராதன காலத்தில் இரும்புத் தொழில் நுட்பம் இருந்தமைக்கான சான்றுகள் இரண்டு தருக?

........................................................................................

11. அநுராதபுரத்தில் அமைக்கப்பட்ட சமயக் கட்டிடங்கள் இரண்டு தருக?

........................................................................................

12. வசபமன்னனால் அமைக்கப்பட்ட குளங்கள் மூன்று தருக?

........................................................................................

(12 x 5 = 60 புள்ளிகள்)

## ☞. செயற்பாடுகள் : 1

1) கண்டியினை ஆட்சிசெய்த மன்னர்களை பட்டியல் படுத்துக?

........................................................................................

2) 1594, 1602, 1630, 1638 இல் இடம் பெற்ற போர்களைக் குறிப்பிடுக?

........................................................................................

3) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர், கண்டியினைக் கைப்பற்ற முடியாமல் போனமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக?

........................................................................................

4) கண்டிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளைக் குறிப்பிடுக?

........................................................................................

5) இரண்டாம் இராஜசிங்கனுக்கு வழங்கப்பட்ட மறு பெயர்களைக் குறிப்பிடுக?

........................................................................................

6) கரலியத்த பண்டார போர்த்துக்கேயரிடம் தஞ்சமடைந்தமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக?

........................................................................................

7) கண்டி இராட்சியத்தின் முக்கியத்துவத்தை குறிப்பிடுக?

........................................................................................

8) கண்டி இராசதானிக்கு வழங்கப்பட்ட மறு பெயர்களைக் குறிப்பிடுக?

..........................................................................................

9) நாயக்கவம்ச ஆட்சியாளர்களைக் குறிப்பிடுக?

..........................................................................................

10) கண்டி அரசர்கள் தொடர்பாக படங்களை சேகரித்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக?

..........................................................................................

11) கண்டிக்காலத்து ஆட்சியாளர்களது ஆட்சிக்காலத்தினை பட்டியல் படுத்துக?

..........................................................................................

12) கண்டிக்காலத்தில் வரையப்பட்ட ஓவியப்படங்களைத் திரட்டி வகுப்பறையில் காட்சிப் படுத்துக?

..........................................................................................

13) எம்பக்கே தேவாலயப்படத்தை சேகரிக்க?

..........................................................................................

14) 1766 இல் இடம்பெற்ற ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்களைக் குறிப்பிடுக?

..........................................................................................

15) கண்டிய ஒப்பந்தம் பற்றிக் குறிப்பிடுக?

..........................................................................................

## ☞. செயற்பாடுகள் : 2

1) மறுமலர்ச்சி என்றால் என்ன?

..........................................................................................

2) மறுமலர்ச்சி தொடர்பான ஏனைய வரைவிலக்கணங்களை தேடி அறிக?

..........................................................................................

3) கொன்ஸ்தாந்தி நோபிள் நகரத்தின் முக்கியத்துவத்தினைக் குறிப்பிடுக?

..........................................................................................

4) மறுமலர்ச்சியினால் ஏற்பட்ட விளைவுகளைக் குறிப்பிடுக?

..........................................................................................

5) மறுமலர்ச்சிக்காலத்தில் முன்னேற்றம் அடைந்த துறைகளைக் குறிப்பிடுக?

.......................................................................................

6) மறுமலர்ச்சிக்காலத்தில் விஞ்ஞானக்கண்டு பிடிப்புக்களை மேற்கொண்ட விஞ்ஞானிகளினது படங்களைச் சேகரிக்க.

.......................................................................................

7) மத்தியகால ஐரோப்பாவுக்கும், நவீனஐரோப்பாவுக்கு இடையே காணப்படும் வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக.

.......................................................................................

8) நாடுகாண் பாதையினைக் காட்டும் படத்தினை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

.......................................................................................

9) மகலனின் பிரயாணப்பாதையினை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

.......................................................................................

10) நாடுகாண் பயணங்களை மேற்கொண்டோரின் பெயர்களையும் அவர்களது நாடுகளையும் கண்டுபிடித்த இடங்களையும் அட்டவணைப்படுத்துக.

.......................................................................................

11) மறுமலர்ச்சிக்காலத்தில் வரையப்பட்ட ஓவியங்களினது படங்களைத் தேடி சேகரிக்க.

.......................................................................................

12) நவீன விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களை எண்ணக்கரு வரைபடமாக்குக.

.......................................................................................

13) விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் எனும் தலைப்பில் சஞ்சிகையாக்குக.

.......................................................................................

14) மறுமலர்ச்சிக்கால நூலாசிரியர்களை பட்டியல்படுத்துக.

.......................................................................................

15) மறுமலர்ச்சிக்கால இலக்கிய வளர்ச்சி தொடர்பாக கலந்துரையாடுக.

.......................................................................................

## ☞. செயற்பாடுகள் : 3

1) கீழைத்தேசத்திற்கு வருகை தந்த அந்நிய இனங்களைப் பெயரிடுக.

..........................................................................................

2) போர்த்துக்கேயரின் தாய்நாடு தொடர்பான தகவல்ளைச் சேகரிக்க.

..........................................................................................

3) போர்த்துக்கேயர் கீழைத்தேசங்களுக்கு வருகை தந்தமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக.

..........................................................................................

4) போர்த்துக்கேயரின் ஆட்சியினால் ஏற்பட்ட விளைவுகளைப் பட்டியலபடுத்துக.

..........................................................................................

5) போர்த்துக்கேயரினால் கோட்டை மன்னனுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் முக்கியம்சங்களைக் குறிப்பிடுக.

..........................................................................................

6) போர்த்துக்கேயரின் மதம் எது?

..........................................................................................

7) போர்த்துக்கேயருக்கும் மலையக மன்னர்களுக்குமிடையில் ஏற்பட்ட போர்களைக் குறிப்பிடுக.

..........................................................................................

8) போர்த்துக்கேயருடனான போரில் மாயாதுன்னைக்கு உதவிய முஸ்லீம் மன்னன் யார்?

..........................................................................................

9) போர்த்துக்கேயரை வெளியேற்ற வேண்டும் என்ற நோக்கில் செயற்பட்ட மன்னன் யார்?

..........................................................................................

10) போர்த்துக்கேயரின் நிர்வாகம் தொடர்பான வரை படம் ஒன்றினைத் தயாரிக்குக.

..........................................................................................

11) சீதாவாக்கை எழுச்சியடைந்த விதம் தொடர்பாக விளக்குக.

..........................................................................................

12) கோட்டை இராட்சியம் பிளவு படக் காரணம் யாது?

.................................................................................

13) மாயாதுன்னையின் போர்த்திறமைகளைக் குறிப்பிடுக?

.................................................................................

14) 1 6 ஆம் நூற்றாண்டில் இலங்கையிலிருந்த இராட்சியங்களை குறித்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

.................................................................................

15) கி . பி 1521 பின் இலங்கையிலிருந்த இராட்சியங்களை இலங்கைப்படத்தில் குறித்துக் காட்டுக.

.................................................................................

தரம் 8

# மாதிரி வினாத்தாள் - 02

வரலாறு

நேரம் - 2.00 மணி

## பகுதி - 1

☞. **சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. கண்டி இராச்சியம் தோற்றம் பெற்ற ஆண்டு?
    1. 1469 2. 1569 3. 1459 4. 1462

02. 1 ஆம் விமல தர்ம சூரியனின் இயற்பெயர்.
    1. யமசிங்க பண்டாரன் 2. கோணப்பு பண்டாரன்
    3. கரலியத்த பண்டாரன் 4. வீரசுந்தர பண்டாரன்

03. 1594ல் 1ஆம் விமலதர்ம சூரியனுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையே இடம் பெற்ற போர்.
    1. பலனபோர் 2. தந்துரேபோர்
    3. கன்னொருவப்போர் 4. செனரத்

04. பர்மாவிலிருந்து 33 பிக்குகளை வரவழைத்து உபசம்பதாவை நடத்திய மன்னன்.
    1. 2ம் இராஜ சிங்கன் 2. 1ம் விமலதர்ம சூரியன்
    3. 2ம் விமல தர்ம சூரியன் 4. செனரத்

05. முதலாம் நாயக்கர் வம்ச ஆட்சியாளன்.
1. ஸ்ரீ விஜயராஜ சிங்கன் 2. கீர்த்தி ஸ்ரீ ராஜ சிங்கன்
3. இராஜாதி ராஜ சிங்கன் 4. ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன்

06. கண்டி இராச்சியம் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்ட ஆண்டு.
1. 1469 2. 1521 3. 1815 4. 1458

07. "கபாடகம்" எனப்படுவது.
1. அரசமாளிகை நிலம்
2. பிரபுக்களுக்கு வழங்கப்பட்ட நிலம்
3. விகாரைகளுக்கான நிலம்
4. மக்களின் பரம்பரை நிலம்

08. கொன்ஸ்தாந்து நோபிள் நகரம் துருக்கியரால் கைப்பற்றப்பட்ட ஆண்டு.
1. 1450 2. 1453 3. 1455 4. 1458

09. இறுதித் தீர்ப்பு எனும் ஓவியத்தை வரைந்தவர்.
1. லியானாடோ டாவின்சி 2. மைக்கல் ஆஞ்சலோ
3. ரபாயேல் 4. கெப்லர்

10. முதல் முதலில் நாடுகள் பயணத்தை மேற்கொண்ட நாடு.
1. துருக்கி 2. இத்தாலி
3. போர்த்துக்கல் 4. பிரான்ஸ்

11. கல்வி மறுமலர்ச்சி முதன்முதலில் ஆரம்பமான நாடு?
1. பிரான்ஸ் 2. இத்தாலி
3. இங்கிலாந்து 4. பிரான்ஸ்

12. மானிட வியலின் தந்தை எனப்போற்றப்படுபவர்.
1. பிரான்ஸிஸ் பெட்ராக் 2. தாந்தே
3. தேமஸ்மூர் 4. பிரான்சிஸ்பேகன்

13. செயற்பாட்டு விஞ்ஞானத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர்.
1. ஜொஹன்னஸ் கெப்லர் 2. கலிலியோ கலிலி
3. ஐசக் நியூற்றன் 4. ஜொகன்னஸ் கெப்லர்

14. முதலாவது அச்சியந்திரத்தை கண்டு பிடித்தவர்.
   1 ஜொஹன்னஸ் கூட்டன் பேர்க் 2. கலிலியோ கலிலி
   3. நிக்கலஸ் கொப்பனிகஸ் 4. ஜொகன்னஸ் கெப்லர்

15. அமெரிக்கா எனும் புது உலகைக் கண்டு பிடித்தவர்.
   1. பேர்டினன்ட் மகலன் 2. கப்ரால்
   3. வாஸ்கொடகாமா 4. கிறிஸ்டொபர் கொலம்பஸ்

☞. **பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**

**(1505, லங்காதிஸ்வர, ராஜாவலிய, விஜயபாகு கொள்ளை, தொன்யுவான், டிகிர குமார,1565)**

16. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தது கி.பி ....................................... இல் ஆகும்.

17. கோட்டை இராச்சியத்தை ஆண்ட மன்னன் ....................................... எனும் பெயரால் அழைக்கப்பட்டான்.

18. ................................................ எனும் பெயரில் தர்மபாலன் திருமுழுக்குப் பெற்றான்.

19. 1521ல் இடம் பெற்ற முக்கிய சம்பவம் .................................... ஆகும்.

20. போர்த்துக்கேயர் வருகை பற்றிக் கூறும் வரலாற்று நூல் ................................................ ஆகும்.

## பகுதி II

01. இரண்டாம் தவணைக் கணிப்பீட்டில் தயாரித்த ஒப்படையை மையமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

   1. ஒப்படைக்காக உமக்கு வழங்கப்பட்ட தலைப்பை பெயரிடுக?

   .......................................................................................

   2. ஒப்படை தயாரிக்க நீர் தகவல் பெற்ற வழிமுறைகள் இரண்டு தருக?

   .......................................................................................

   .......................................................................................

3. ஒப்படை தயாரிக்கும் போது நீர் எதிர் நோக்கிய பிரச்சினைகள் இரண்டு தருக?

..........................................................................

..........................................................................

4. ஒப்படை தயாரிக்கும் மூலம் நீர் பெற்றுக் கொண்ட நன்மைகள் இரண்டு தருக?

..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

02. 1) மலையக இராச்சியத்தில் ஆரம்பகாலங்களில் காணப்பட்ட ஐந்து பிரதேசங்களில் இரண்டினைக் குறிபபிடுக?

..........................................................................

..........................................................................

2) மலையக இராச்சியத்தை ஆட்சி செய்த மன்னர்கள் நால்வரை குறிப்பிடுக?

..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

3) கண்டியைக் கைப்பற்ற போர்த்துக்கேயர் முயற்சித்தமைக்கான காரணங்கள் இரண்டினைத் தருக?

..........................................................................

..........................................................................

03. 1) மறுமலர்ச்சி என்றால் எனன?

..........................................................................

..........................................................................

..........................................................................

2) ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியால் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றினைத் தருக?

..........................................................................

..........................................................................

..........................................................................

3) மறுமலர்ச்சி காலத்தில் முன்னேற்றமடைந்த துறைகள் எவை?

.................................................................................

.................................................................................

04. 1) கல்வி மறுமலர்ச்சி காலத்தில் முன்னேற்றமடைந்த துறைகள் நான்கினைத் தருக?

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

2) கல்வி மறுமலர்ச்சி முதன்முதலில் இத்தாலியில் தோன்றியமைக்கான காரணங்கள் மூனறினைக் குறிப்பிடுக?

.................................................................................

.................................................................................

.................................................................................

3) நாடுகாண் பயணங்களில் ஈடுபட்ட நான்கு நபர்களின் பெயர் தருக?

.................................................................................

.................................................................................

05. 1) போர்த்துக்கேயர் இலங்கை வந்தமைக்கான காரணங்கள் இரண்டு தருக?

.................................................................................

.................................................................................

2) இலங்கைக்கு வருகை தந்த ஐரோப்பிய இனத்தவர்களைப் பெயரிடுக?

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

3) போர்த்துக்கேயர் இலங்கை வரும்போது இலங்கையில் காணப்பட்ட இராச்சியங்களையும் ஆட்சிகளையும் குறிப்பிடுக?

.................................................................................

.................................................................................

06. 1) இலங்கையில் போர்த்துக்கேயர் எதிர்நோக்கிய பிரச்சினைகள் இரண்டு தருக?

.........................................................................................

.........................................................................................

2) விஜயபாகு கொள்ளைய என்பதனை சுருக்கமாக விளக்குக?

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

3) விஜயபாகு கொள்ளையவை அடுத்து கோட்டை இராச்சியத்தின் மூன்று பிரிவுகளையும் அதன் உரிமையாளர்களையும் குறிப்பிடுக.

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

07. 1) கோட்டை இராச்சியம் மீது மாயாதுன்னை படையெடுப்பை மேற்கொண்ட மூன்று சந்தர்ப்பங்களைப் பெயரிடுக.

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

2) சீதாவாக்கையின் எழுச்சிக்கான காரணிகள் மூன்றினைத் தருக?

.........................................................................................

.........................................................................................


.........................................................................................

3) கண்டி இராச்சியத்துடன் போர்த்துக்கேயர் மேற்கொண்ட போர்களை வரிசைப்படுத்துக?

.........................................................................................

# வரலாற்றுப் படங்களுடனான விளக்கங்கள்

பசவக் குளம்




- பண்டுகாபயமன்னனால் கட்டப்பட்டதாக மகா வம்சம் குறிப்பிடுகின்றது.
- முன்னர் அபயவாவி என்றழைக்கப்பட்ட குளமே இன்று பசவக்குளம் என அழைக்கப் படுகிறது.
- விஜயனின் வருகைக்குப் பின்னரான மூன்று நூற்றாண்டுகளின் பின்னர் அமைக்கப்பட்ட சிறிய குளமாகும்.

மின்னேரி வாவி





- மகாசேன மன்னனால் அமைக்கப் பட்டது.
- மகாசேன மன்னனால் அமைக்கப்பட்ட திலவத்துக (தல்வத்து) கால்வாய் மூலமாக இக்குளத்துக்கு நீர் வழங்கப்பட்டது.
- இவ்வாவியின் அணைக்கட்டின் நீளம் 1¼ மைல், அணைக்கட்டின் உயரம் 44 அடி, நிரப்பரப்பு 4670 ஏக்கருமாகும்.

கலிங்கல்.




- அதிக அழுத்தத்தில் இருக்கும் நீரை அணைக் கட்டினூக கால்வாய்க்கு விடுவிப்பதற்கான நோக்கத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.
- இது உயர் கலிங்கல், ஈரக்கலிங்கல் என இருவகைப்படும்.
- ஈரக்கலிங்கல் குளத்தின் அடிப்பாகத்தில் காணப்படும் சேற்றினை அகற்றப் பயன்படும்.
- உயர் கலிங்கல் சற்று உயரத்தில் காணப் படும். நீரைப்பாய்ச்சுவதற்குப் பயன்படும்.

வான்கதவு




- உள்வான் வெளிவான் கதவு என இருவகைப்படும்.
- உள்வான் கதவு இன்னோர் மூலாதாரத்தி லிருந்து குளம் ஒன்றிற்கு நீரைக் கொள் வதற்காகவும், வெளியில் இருந்து நீர் வரும் போது குளத்தினுள் சேறு சேர்வதனைத் தடுப்பதற் காகவும் அமைக்கப்பட்டது.
- வெளிவான் கதவு குளத்தில் இருக்கும் மேலதிக நீரை வெளியேற்றுவதற்குப் பயன்படும்.

எலஹர கால்வாய்




- வசப மன்னனால் கட்டப்பட்டது.
- இது ஆழிசாராக் கால்வாய் எனவும் அழைக்கப படுகின்றது.
- நீளம் 30 மைல்களாகும்.
- அம்பன் கங்கைக்கு குறுக்காக அணைகட்டி அதிலிருந்து வட திசைக்கு நீரைக் கொண்டு செல்வதற்காகப் பயன்பட்ட கால்வாய.

யோத கால்வாய் (ஜயகங்கை)




- தாதுசேன மன்னனால் அமைக்கப்பட்டது.
- கலாவாவியிலிருந்து அனுராதபுரத்தின் திஸவாவிக்கு நீரைக்கொண்டு செல்வதற்கு அமைக்கப்பட்டது.
- இதனது நீளம் 54 மைல், 40 அடி அகலம்
- 17 மைல்கள் வரை ஒவ்வொரு மைல் தூரத்திற்கும் 1 அங்குலம் சாய்வில் அமைக்கப்பட்டுள்ளது.

இரட்டைப் பொய்கை



- அநுராதபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- இது நீர்ப்பயன்பாடு, அழகு, குளுமை என்ற பல நோக்கங்களை நிறைவேற்றும் பொய்கையாகும்.
- அபயகிரி பிக்குகளின் நீர்த்தேவை, அழகுபடுத்தல், சூழலக் குளிர்மையாக்கல் ஆகிய மூன்று தேவைகளையும் நிறை வேற்றியது.

தாமரைப் பொய்கை.




- மகாபராக்கிரமபாகு மன்னன் காலத்தில் அமைக்கப்பட்டது.
- பொலனறுவையில் அமைக்கப்பட்டுள்ளது.
- பல்வேறு அலங்கார வேலைப்பாட்டுடன் அமைக்கப்பட்ட பொய்கையாகும்.
- அழகுக்கு மாத்திரமன்றி, நீர்த்தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடனும் அமைக்கப் பட்டுள்ளது.

**குட்டம் பொய்கை**




- அபயகிரி விகாரையில் உள்ளது.
- பிக்குகளின் நீர்த்தேவை, அழகு, சூழலை குளிமையாக்குதல் ஆகிய மூன்று தேவைகளை மையமாகக் கொண்டது.
- நீர் வடிகட்டி காணப்படுகின்றது.
- நீர் அசுத்தமடையும் போது அந்நீர் நிலத்திற்கு அடியில் கால்வாய் மூலம் பொருத்தமான இடம் ஒன்றிற்கு அகற்றுவதற்கு பொய்கையின் அடிப்பாகத்தில் துளை இடப்பட்டு சுரங்க வழிகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- புராதன நீர்த்தொழில்நுட்ப சான்றுகளில் இதுவும் ஒன்று.

ரன்மசுப் பூங்கா




- திஸ்ஸ வாவியின் கரையில் இசுருமுனி விகாரையிலிந்து மிரிசவெட்டி வரையான இடம் ரன்மசுப் பூங்காவாகும்.
- அரசர்களின் பாவனைக்காக உருவாக்கப் பட்டதாக வரலாறு கூறுகின்றது. (நீராடுதல், விளையாடுதல்)
- நிலத்தின் சாய்வு, மண்டபங்கள், கற்படுக்கை -கள் என்பனவற்றையும் கருத்திற் கொண்டு அமைக்கப்பட்டது

சீகிரிய நீர்ப்பூங்கா




- தென் ஆசியாவில் உள்ள மிகவும் பழமை வய்ந்த பூங்காவாகும்.
- கி.பி. 5ம் நூற்றாண்டுக்குரியது,
- எச்.சி.பி.பெல், செனரத் பரணவிதாரண ஆகிய தொல்பொருள் ஆய்வாளர்களால் கார்டடர்ந்து காணப்பட்ட இப்பூங்கா வெளிக் கொணரப்பட்டது.
- திட்டமிட்ட அமைப்பிலான வீதித் தொகுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

மருத்துவ ஓடம்.



- பொலன்னறுவைக் காலத்திற்குரியது.
- அலஹஙல பிடபனா அகழ்வில் கண்டுபிடிக்கப் பட்டது.
- புராதன வைத்திய தொழில்நுட்பத் துறைக்குச் சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகும்.

இரும்பை உருக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட சூளை




- இரும்பை உருக்கி இரும்புப்பாவனை இருந்ததற்கான தொல்பொருளின் ஆதாரமாகும்.
- சமனெல வெலப் பகுதியில் தென்மேற்குப் பருவக்காற்றுக் காலத்தில் இயற்கையாகக் கிடைக்கும் காற்றைப் பயன்படுத்தி சூளையிலுள்ள கரியைத் தொடராக எரியச் செய்துள்ளனர்.
- சூளையை எரியச் செய்வதற்காக ஊதுளை -யைப் பயன்படுத்தினர்.

மிகிந்தலை கண்டக சைத்திய




- தாதுகோபத்தின் அழகை மேம்படுத்துவதற்காக அதனை அண்டிய நாற்றிசையும் நோக்கிய வண்ணம் நுழைவாயில்கள் கட்டப் பட்டுள்ளன.
- இராசரட்டை காலத்தில் மிகச்சிறந்த நுழைவாயில் கண்டக சைத்தியவின் கிழக்குத் திசையில் காட்டப்பட்டிருந்தது.

மெதிகிரிய வட்ட தாகய



- இராசரட்டை காலத்தில் அமைக்கப்பட்ட தூபி மனையில் ஒன்றாகும்.
- தாது கோபத்தைச் சுற்றி கற்றூண்களை நட்டு அதன் மீது கம்புகளிலான கோண வடிவினதாக கூரை அமைத்துக் கட்டப்பட்டது.

தூபராம சிலை மணை



✍. பொலனறுவையில் அமைக்கப்பட்டுள்ளது.
✍. பாக்கிரமபாகு மன்னன் காலத்தில் அமைக்கப் பட்டதாகும்.
✍. கெடிகே மரபு ரீதியான நிர்மாணமாகும்.

இரண்டாம் இலக்க சிவன் கோயில்.



✍. பொலனறுவைக் கால இந்துக் கேயில்.
✍. சோழர் கட்டடக்கலை மரபு தழுவி அமைக்கப் பட்டது.

போதி சத்துவ சிலை



✍. தம்போகொடவில் காணப்படுகிறது.
✍. அநுராதபுரக் காலத்திற்குரியது.
✍. இது மகாஜன பௌத்தம் பரவிய காலத்தில் நிர்மாணிக்கப்பட்டது.

சீகிரிய மலைக்குன்று.



✍. காசியப்ப மன்னனால் அமைக்கப் பட்டது.
✍. 5ம் நூற்றாண்டு காலத்துக்குரியது.
✍. இஙகுள்ள நீர்ச்சுனைகள், ஓவியங்கள் என்பன உலகப் பிரசித்தம் வாய்ந்தன.

# சந்திர வட்டக்கல்



அனுராதபுரக் காலம்



பொலநறுவைக் காலம்

இலங்கைத் திருநாட்டின் தனித்துவத்தை வெளிப்படுத்துவது. இக்கலைப்படைப்பின் மூலம் இலங்கையின் சிற்பக்கலை மற்றும் செதுக்கல் கலை என்பன வெளிப் படுத்தப்படுகின்றன.

பொலனறுவைக்கால சந்திரவட்டக் கல்லிருந்து நீக்கப்பட்ட விலங்கு எருது ஆகும். இவ்வாறு எருது நீக்கப் பட்டமைக்கான காரணம் இந்துக்களின் புனித தெய்வமாக எருது காணப் பட்டமையாகும்.அதேசமயம் இந்து சமயத்தின் செல்வாக்கு பொலனறுவைக் காலத்தில் இடம்பெற்றமையை அறிய முடிகின்றது. இக்கலைப்டைப்பானது விகாரைகளின் வாயில், அரசமாளிகையின் வாயில், பிரதான மண்டபங்களின் வாயில் என்பவற்றில் இவற்றைக் காணலாம்

வெண்கல யானை விளக்கு



- கோகலை மாவட்டத்திலுள்ள தெடிகமவில் கண்டெடுக்கப்பட்டது.
- மகாபராக்கிரமபாகு காலத்துக்குரியதாகும்.
- அசையா நீர் விஞ்ஞான முறையை எடுத்துக் காட்டுகிறது.
- விளக்கு எரிவதற்குத் தேவையான எண்ணெய் யானையின் வயிற்றில் களஞ்சியப்படுத்தப் படுவதுடன், யானையின் பின்னங்கால்கள் இரண்டிற்கும் இடையிலிருந்து விளக்கில் எண்ணெய் வற்றி தீபம் அணைந்து போகும் சந்தர்ப்பத்தில் தன்னிச்சையாக யானையின் வயிற்றில் உள்ள எண்ணெய் விளக்கில் வருமாறு அமைக்கப்பட்டிருந்தது.

1ஆம் விமலதர்ம சூரியன்




- கி.பி. 1592 - 1604 வரை கண்டி இராச்சியத்தை ஆண்டான்.
- மனைவி - கரலியத்த பண்டாரவுடைய மகள் குசுமாசனதேவி (டொன்கத்தரினா)
- இளமைப் பெயர் - கோணப்புபண்டார.
- இவனது கிறிஸ்தவப் பெயர் ஒஸ்திரியா டொன்யுவான்.
- ஒல்லாந்தருடன் மேற்கொண்ட போர்கள் :
  - 1594 இல் தந்துரே போர்,
  - 1602 இல் பலன போர்.

2ஆம் இராஜசிங்கன்



- கி.பி. 1635 - 1687 வரை கண்டி இராச்சியத்தை ஆண்டான்.
- இவனது மறு பெயர்கள் :
  மகா ஆஸ்தானகுமார, ஸ்ரீ லங்கா தீஸவரன்.
- தொடர்புபட்ட பழமொழி : இஞ்சிகொடுத்து மிளகாய் வாங்கியது போல.
- ஒல்லாந்தருடனான போர்களில் கன்னொருவ போர் முக்கியமானது.

கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்




- கி.பி. 1747 - 1782 வரை கண்டி இராச்சியத்தை ஆண்டார்.
- இவர் சந்தித்த ஆங்கிலத் தூதுவன் பெயர் ஜோன் பைப்பஸ்.
- ஒல்லாந்தருடன் 1765 இல் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டிருந்தான்.
- இவனது ஆட்சிக்காலத்தில் பிரதானி எகலப்பொல பிரதானமானவன்.

ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்



- கி.பி. 1798 - 1815 வரை கண்டி இராச்சியத்தை ஆண்டான்.
- இவன் நாயக்க வம்சத்தைச் சேர்ந்தவன்.
- தலதாமாளிகையில் பால்கடல் தடாகத்தை அமைத்தான்.
- சூழ்ச்சி செய்த பிரதானி பிலிமத்தலாவையை சிரைச்சேதம் செய்தான்.

கண்டி தலதா மாளிகை




- பௌத்த மதத்துக்குரியது.
- கண்டியில் பெரஹர விழா சிறப்பாகக் கொண்டாடும் இடமாகும்.
- உலக மரபுரிமைப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

லங்கா திலக விகாரை




- கம்பளை காலத்தில் அமைக்கப்பட்டது.
- தமிழ், சிங்கள கலைகளின் அம்சங்கள் காணப்படுகின்றது.

டெம்பிட்ட விகாரை




- மெதவல எனும் இடத்தில் காணப் படுகின்றது.
- மரத்தூண்கள் நட்டு அதன் மீது கட்டிடம் கட்டப்பட்டது.
- கண்டி ராச்சிய காலத்திற்குரியதாகும்.

எம்பக்க தேவாலயமும், மரத்தூணும்




- கண்டி இராச்சிய காலத்துக்குரியதாகும்.
- மரச் செதுக்கலுக்கு பிரசித்தி பெற்றது.

மிரிசு வெட்டிய




- துட்டகைமுனுவால் அமைக்கப்பட்டது.
- அநுராதபுர காலத்துக்குரியது.
- திசாவாவிக்கு அண்மையில் அமைக்கப் பட்டது.

ருவான் வெலிசாய



- அநுராதபுரக் காலத்துக்குரியது.
- துட்டகை முனுவால் கட்டப்பட்டது.

அபயகிரி விகாரை




- வலகம்பா மன்னனால் அமைக்கப்பட்டது.
- இதனைப் புனர்நிர்மாணம் செய்த மன்னர்கள் 1ம் கஜபாகு, கனிட்ட திஸ்ஸ ஆகியோராவர்.
- குப்பிகல திஸ்ஸ தேரக்கு வலகம்பா மன்னனால் தானமாக அளிக்கப்பட்டது.

ஜேத்தவன ராமய




- மகாசேன மன்னனால் அமைக்கப்பட்டது.
- புத்தபெருமானின் தாது வைத்து கட்டப்பட்டது.
- எட்டு ஏக்கர் பரப்பளவினைக் கொண்டது.
- தற்போதய உயரம் 400 அடி, விட்டம் 370 அடியாகும்.

சத்மகல் பிரசாதய (ஏழடுக்கு மாளிகை)



- பொலனறுவைக் காலத்திற்குரியது.
- 1ம் பராக்கிரமபாகு மன்னால் கட்டப்பட்டமை.
- தாய்லாந்து, கம்போடியா கட்டிடப் பாணியில் அமைக்கப்பட்டது.

திரிகைக் கல.



✍. குருவிட்ட தெல்கமுவ விகாரையில் காணப் பட்டது.

✍. புனித பற்சின்னம் பாதுகாப்பதற்காக அமைக்கப் பட்டது.

ஜொஹன்னஸ் கூட்டன்பேர்க்




✍. அச்சியந்திரத்தைக் கண்டுபிடித்தவா ஆவார்.

✍. மறுமலர்ச்சிக் காலத்தில் கல்வி வளர்ச்சிக்கு பாரிய உதவி புரிந்தது.

✍. இவரது நாடு ஜேர்மன்.

கலிலியோ கலிலி



✍. நவீன விஞ்ஞானத்தில் பரீட்சார்த்தத்தின் தந்தை எனப் போற்றப்பட்டார்.

✍. தொலைநோக்கியைக் கண்டுபிடித்தார்.

✍. இத்தாலியைச் சேர்ந்த பேராசிரியர் ஆவார்.

✍. சந்திரனில் மலைகளும், பெரும் குழிகளும் உள்ளன எனவும், சூரியனில் புள்ளிகள் உள்ளன எனவும், வியாழனுக்குத் துணைக்கோள் உண்டு என்பதையும் கண்டுபிடித்தார்.

நிக்கலஸ் கொப்பனிக்கஸ்



✍. வானிலை விஞ்ஞானத்தின் தந்தை என அழைக்கப்பட்டார்.

✍. புவி கோள வடிவானது, புவியும் ஏனைய கோள்களும் சூரியனைச் சுற்றி வருகின்றது எனவும் கூறினார்.


✍. போலந்து நாட்டைச் சார்ந்தவர்.

ஜொஹன்னஸ் கெப்லர்



- தெற்கு ஜேர்மனியைச் சார்ந்தவர்.
- நிக்கலஸ் கொப்பநிக்கஸின் கருத்தை உறுதி செய்து கோள்கள் யாவும் சூரியனை நீள்வட்டப்பாயையில் சுற்றி வருகின்றன என்ற கருத்தை முன்வைத்தார்.

லியனாடோ டாவின்சி (கி.பி. 1452 - 1519)



- இவரது நாடு இத்தாலியாகும். (புளோரன்ஸ் நகர்)
- மோனாலிசா ஓவியம், இறுதி இராப்போசனம் என்பன இவரது ஓவியக் கலைக்கு எடுத்துக்காட்டாகும். (உலகப்புகழ் பெற்றவை)
- சித்திரக்கலை தவிர, கவிஞராகவும், பொறியியலாளராகவும், பாடகராகவும், விஞ்ஞானியாகவும் திகழ்ந்தார்.

மைக்கல் ஆஞ்சலோ




- ஓவியத்துறை, சிற்பத்துறை என்பவற்றில் சிறந்து விளங்கினார்.
- உரோமிலுள்ள சிஸ்டன் தேவாலயத்தில் உள்ள ஓவியங்கள் பிரசித்தமானவை. (இறுதித் தீர்ப்பு, ஆதாமின் சித்திரம், யேசுவும் மரியாளும்.)
- பியெட்டா சிலை, டேவிட் சிலை, மோசஸ்சிலை என்பன இவரது கலைப்படைப்பிற்கு எடுத்துக் காட்டாகும்.

மோனாலிசா




- லியனாடோ டாவின்சியின் ஓவியத்துறைக்கான ஓர் எடுத்துக்காட்டாகும்.
- புளோரன்ஸ் நாகரிகத்தில் உள்ள கலைப்படைப்பாகும்.
- எண்ணெய் வர்ண முறையைப் பயன்படுத்தி வரையப்பட்டுள்ளது.
- ஐரோப்பரின் மறுமலர்ச்சிக் காலத்தில் வரையப்பட்டது.

இறுதி இராப்போசனம்.



- லியனாடோ டாவின்சியினால் வரையப்பட்ட பிரசித்தி பெற்ற ஓவியம்.
- புனித மரியாள் கன்னியர் இல்லத்தின் சுவரில் வரையப் பட்டுள்ளது.

டேவிட் சிலை



- மைக்கல் ஆஞ்சலோவினால் அமைக்கப்பட்ட பிரசித்தி பெற்ற சிற்பமாகும்.
- மைக்கல் ஆஞ்சலோ மறுமலர்ச்சிக் காலத்தில் வாழ்ந்த சிறந்த சிற்பி என்பதனை இச்சிலை எடுத்துக்காட்டுகின்றது.

கிறிஸ்டொபர் கொலம்பஸ்



- ஸ்பானியா நாட்டைச் சேர்ந்தவர்.
- ஸ்பானியலோவை (மேற்கிந்திய தீவுகள் / கரீபியன் தீவுகள்) கண்டுபிடித்தார்.

கடலோடி ஹென்றி



- போர்த்துக்கல் நாட்டைச் சார்ந்தவர்.
- லிஸ்பன் நகரில் கடற்பயணத்திற்கான பயிற்சிப் பாடசாலைகளை மேற்கொண்டார்.
- கப்பல் கட்டுதல், தேசப்படக் கலை, வான சாஸ்திரம் போன்ற பாடங்கள் போதிக்கப்பட்டன.
- நவீன பிரயாண முறைகள் ஆய்வு செய்யப் பட்டன.

வாஸ்கொடகாமா




- போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்தவர்.
- பர்த்தலோமியஸ் டயசின் பிரயாண வழியில் சென்று இந்தியாவை அடைந்தவர். (1498 ம் ஆண்டு)
- ஐரோப்பியாவிலிருந்து ஆசியாவுக்கான கடல்வழிப்பாதையை கண்டறிந்த பெருமை வாஸ்கொடகாமாவையே சாரும்.
- 1498 இல் இந்தியாவின் கள்ளிக்கோட்டை துறைமுகத்திலேயே முதன்முதலில் வந்திறங்கினார்.

போர்டினன் மகலன்.




- 1480 இல் போர்த்துக்கல் நாட்டில் பிறந்தவர் ஆவார்.
- உலகைச் சுற்றிய முதல் நாடுகாண் பயணி எனக் கூறப்படுபவன்.
- தனது நாடுகாண் பயணத்தின் போது பிலிப்பைன்ஸில் சுதேசிகளுடன் ஏற்பட்ட மோதலில் இறந்தான்.
  இவன் உலகைச் சுற்றி வந்ததன் மூலமாக உலகம் கோளவடிவானது என நிரூபிக்கப் பட்டது.
- தென்னாபிரிக்காவின் தென் கரையில் அமைந்துள்ள பசுபிக் சமுத்திரத்தினாலான வாயிலைக் கண்டுபிடித்தான். அந்நீரிணை அவனது பெயரால் மகலன் நீரிணை என அழைக்கப்படுகிறது.

காலிக் கோட்டை.




- இலங்கையின் தென்மேற்குக் கரையில் அமைந்துள்ளது.
- 1588ம் ஆண்டு போர்ததுக்கேயாரால் கட்டப் பட்டது.
- 17ம் நூற்றாண்டளவில் ஒல்லாந்தரினால் விஸ்தரிக்கப்பட்டது.
- இது ஓர் வரலாற்று சிறப்புமிக்க கட்டடக்கலை தொழில்நுட்பத்தை எடுத்துக்காட்டுகின்றது.
- 1988ம் ஆண்டு UNESCO நிறுவனத்தினால் உலக மரபுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டது.

இசுறு முனிய காதல் ஜோடி





- இலங்கையின் செதுக்கல்கலையின் வளர்ச்சியினைக்காட்டும் செதுக்கல் படைப்பாகும்.
- இச்செதுக்கல் வேலைப் பாட்டினை அநுராதபுரத்தில் அமைந்துள்ள இசுறு முனிய விகாரையில் காணலாம்.
- இச்செதுக்கல் வேலைப்பாட்டில் பல்லவ கலை மரபைக் காணக்கூடியதாகவுள்ளது.
- அநுராதபுரத்தை ஆண்ட இலங்கையின் முதல் பௌத்த மன்னனான தேவநம்பிய தீஸனால் அமைக்கப்பட்டதாகும்.
- மனித வாழ்வின் லௌகீகப் பண்பு, காதல், இல்லறம், எனும் இல்லற அம்சங்களை இது குறித்து நிற்கின்றது.

லோபமகாப்பாய




- அநுராதபுரத்தில், ரூவான் வெலிசாய தாது கோபுரத்திற்கும் சிறீ மகாபோதி எனப்படும் புனித அரச மரத்துக்கும் இடையில் அமைந்துள்ளது.
- 1600 தூண்களைக் கொண்டு வடிவமைக்கப் பட்டது.
- சத்தாதிஸ்ஸ மன்னன் காலத்தில் இக்கட்டடம் முற்றாக அழிந்தது.





சமாதி நிலை



நின்ற நிலை

சயன நிலை


புத்தபெருமானின் மூன்று நிலைகளைக்காட்டும் சிலையாகும். இச்சிலை களில் பொதுவாக புத்தபெருமானின் குணங்கள் வெளிப்படுத்தப்படும். நின்ற நிலைப்புத்தர் சிலையின் காவியுடையில் மடிப்புக்கோடுகள் கருங்கல்லில் மிக நுட்பமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. சமாதி சிலை புத்தரின் சாந்தமான குணவியல்பை வெளிப்படுத்துகின்றது. சயனச் சிலை புத்தரின் அன்பு, கருணை, என்பவற்றை வெளிப்படுத்துகின்றது.

லோவமகாபாய




இலங்கையில் அநுராதபுர இராசதானியில் சிறப்புப்பெற்று விளங்கும் நிர்மாணிப்புக்களில் ஒன்றாகும். ஆயிரம் கற்றூண் களைக் கொண்டது. ஒன்பது மாடிகளைக் கொண்டது. 100 அறைகளைக் கொண்டது. இவ்விகாரையில் காணப்படும் தங்க ஆசனத்தில் வெள்ளியால் ஆன ஆலவட்டம் உள்ளது.

## மகலனின் பிரதான பாதை



மகலனின் பிரயாணப் பாதை

## இலங்கையில் காணப்பட்ட இராட்சியப்பிரிவு இலங்கைப்படத்தில்



கோட்டை இராச்சியம் பிளவுபடுதல்

# வினாக்கள்



1) இப்படத்தில் காட்டப்பட்டுள்ள கண்டியை ஆட்சி செய்த நாயக்க வம்ச அரசன் யார்?

.................................................................................................................

2) இவனது தந்தையின் பெயர் யாது?

.................................................................................................................

3) இம் மன்னன் பௌத்தசமய வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் ஐந்து தருக?

.................................................................................................................

.................................................................................................................

.................................................................................................................

4) இம் மன்னனுடைய மதம் யாது?

.................................................................................................................


5) இம் மன்னனுக்கும் ஒலலாந்தருக்கும் இடையே உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட ஆண்டு எது?

.................................................................................................................

6) இம் மன்னனுக்கும் ஒல்லாந்தருககும் இடையில் இடம் பெற்ற உடன்படிக்கையின் விளைவுகள் இரண்டு தருக?

.................................................................................................................

.................................................................................................................



1) இப்படத்தில் காட்டப்பட்டுள்ள விஞ்ஞானி யார்?


.................................................................

2) இவர் வெளியிட்ட கருத்து யாது?

.................................................................

3) இவர் பிறந்த இடம் எது?

.................................................................



1) இப்படத்தில் காட்டப்பட்டுள்ள விஞ்ஞானி யார்?

.................................................................

2) இவர் வெளியிட்ட கருத்து யாது?

.................................................................

3) இவர் பிறந்த இடம் எது?

.................................................................



1) இப்படத்தில் காட்டப்பட்டுள்ள நாடுகாண் பயணி யார்?

.................................................................

2) இவர் எத்தனையாம் ஆண்டு கள்ளிக் கோட்டைத்துறை முகத்தினை வந்தடைந்தார்?.

.................................................................

2) இவர் வெளியிட்ட கருத்து யாது?

.................................................................

3) இவர் பிறந்த இடம் எது?

.................................................................

3) இவர் கள்ளிக்கோட்டைத் துறைமுகத்தினை அடைந்ததும் வெளியிட்ட கருத்து யாது?

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................


4) கள்ளிக்கோட்டைத் துறைமுகத்திற்கு வழங்கப்படும் மறுபெயர் யாது?


..............................................................................................................

5) அந்நிய இனங்கள் இலங்கைக்கு வருகை தந்ததன் நோக்கம் இரண்டு தருக?

..............................................................................................................

## வஸ்கொடகாம இந்தியாவை வந்தடைந்த பாதைகள்





1) இப் படத்தில் காட்டப்பட்டுள்ள ஓவியக்கலைஞரின் பெயர் யாது?

.................................................................

2) இவர் பிறந்த இடம் எது?

.................................................................

3) இவர் யாரிடம் ஓவியக்கலையினைப் பயின்றார்?

.................................................................

4) இவரால் வரையப்பட்ட பிரபல்யமான ஓவியங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

.................................................................

5) இவரால் வரையப்பட்ட ஓவியமொன்று பிரான்சில் லூவர் தொல் பொருள் நிலையத்தில் உள்ளது அவ் ஓவியம் எது?

.................................................................

7) இவருடைய ஓவியத்தின் சிறப்புக்கள் இரண்டு தருக?

.................................................................



1) இப்படத்தில் காட்டப்பட்டுள்ள விஞ்ஞானி யார்?

.................................................................

2) இவருக்கு வழங்கப்பட்ட வேறு பெயர் யாது?


.................................................................

3) இவரது கண்டு பிடிப்புக்கள் இரண்டு தருக?

.................................................................

.................................................................


மறுமலர்ச்சிக்காலத்துடன் தொடர்புபட்ட கீழ்கண்ட அறிஞர்களின் பெயர்களைத் தருக.



..............................................




..............................................



..............................................



..............................................



1) படத்தில் காட்டப்பட்டுள் கருவி யாது?

..........................................................................

2) இக் கருவி யாரால் கண்டு பிடிக்கப்பட்டது?

..........................................................................

3) இவர் பிறந்த இடம் எது?

..........................................................................


4) இவருக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயர் யாது?

..........................................................................

ஏ. தரப்பட்டுள்ள உலகப்படத்தில் பின்வரும் இடங்களைக் குறித்து பெயரிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1. | கள்ளிக்கோட்டை | 9. | வங்களா விரிகுடா |
| 2. | மகலன் தொடுகடல் | 10. | செங்கடகல |
| 3. | காலி | 11. | பிரான்ஸ் |
| 4. | போர்த்துக்கல் | 12. | இத்தாலி |
| 5. | ஸ்பானியா | 13. | புளோரன்ஸ் |
| 7. | மியான்மார் | 14. | பிரித்தானியா |
| 8. | சீனா | 15. | மத்தியதரைக்கடல் |





1. படத்தில் காட்டப்பட்டுள்ள நிர்மாணிப் பினைப் பெயரிடுக?

...........................................................

2. இது யாரால் கோட்டையாகப் பயன் படுத்தப்பட்டது?

...........................................................

3. அம்மன்னனின் சகோதரன் யார்?

...........................................................

4. இங்கு காட்டப்பட்டுள்ள படத்தில் உள்ள சிறப்புக்கள் எவை?

...........................................................

5. இது எத்தனையாம் ஆண்டு உலக மரபுரிமைப்பட்டியலில் சேர்க்கப்பட்டது.

...........................................................



1. இங்கு காட்டப்பட்டுள்ள நிர்மாணிப்பு எது?


...........................................................

2. இந் நிர்மாணிப்பு காணப்படும் இடம் எது?

...........................................................

3. இதன் சிறப்புக்கள் யாவை?


...........................................................












# பூபாலசிங்கம் புத்தகசாலை

202, செட்டியார் தெரு, கொழும்பு - 11

தொ.பே.எண் : 011 2422321, 0112435713

மின்னஞ்சல் : Poobalasingham202@gmail.com